245

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்தஹு மார்கழிமீ : 1915-ஹு ஜனவரிமீ } பகுதி 7

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 26. ஈச்வர பாவம்

அவனன்றி யோரணுவு மசையாதெ னும்பெரிய
வாப்தர்மொழி யொன்று கண்டா
லறிவாவ தேதுசில வறியாமை யேதிவை
யறிந்தார்க ளறியார் களார்
மௌனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்று மவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்து வரும்
வன்மையொ டிரக்க மெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்க ளெவிடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொறு மையுமெவ் விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றி யுண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

(எங்குநிறைகின்றபொருள்—1)

### 27. த்வைதாத்வைதப் பொருத்தம்

வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லா
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத்து ரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபெறு ஞான மாகு
மூசமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள் சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நா.
னதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையு முண்டோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

(எங்குநிறைகின்றபொருள்—3

### 28. மன மாயை வல்லமை

சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டி யாட்டித்
தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றிற்
றொடுக்குந் தொடுத்த ழிக்கும்
பொல்லாத வாதனை யெனுஞ்சப்த பூமியிடை
போந்துநலே சுற்றி யாடும்
புருஷனி லடங்காத பூவைபோற் றனே
புறம்போந்து சஞ்ச ரிக்கும்
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடுங்
காணாது கேட்ட வெல்லாங்
கண்டதாக் காட்டியே யணுவாச் சுருக்கிடுங்
கபடனா டகசா லமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை யேழையா
மென்னா லடக்க வசமோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே,

(எங்குநிறைகின்றபொருள்—(4)

# CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துலு | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு. தைமூ– { சாலிசகம் 1836 கலியப்தம் 5015 } பசலி1324 கோல்லம்-1090 { 1915ஹு ஜனவரிமூ பிப்ரவரிமூ |
|---|---|---|---|---|---|
| | 27 | 14 | 1 | வியா | சது 39-51, மூல 15-57 திரு 0-35, வியா 53-27, பத் 12-6, திவி 11-57, ரா 10-27, அக 28-32, மகா கிரு சதுர்திதி |
| | | | | | உத்தராயணம்-பொங்கல்பண்டிகை-கரிநாள் ஸமார்கம்- [தை அமாவாசை கரிநாள். |
| புச | 28 | 15 மகாம | 2 | வெ | ● அமா 36-10, பூரா 13-34, ஹர் 48-14, சது 8-0, ரா 4-31, திரு 2 புத 25-30, கே 1 சுக் 45-6, கோபூஜை |
| செ | 29 | 16 | 3 | சனி | பிர33-30, உத்தி 12-3, வஜ் 43-12, கிம் 4-50, திவி 21-58, மாகசுத் உத் 1 செ 27-0, இஷ்டி சிர உப கரிநாள். |
| ரபு | 30 | 17 | 4 | ஞா | துதி 31-56 திரு 11-36, விதி 39-2, பா 2-43, திவி 21-43, உத் 3 ரவி 3-10, திரு 3 புத 35-45, சங்-தரி. |
| கு | 1 | 18 | 5 | திங் | திரு 31-37, அவி 12-19, விய 35-50, தை 1-46, ரா 2-20, அக 28-35, அவி 4 குரு 20-18, விய சிரா. |
| சு | 2 | 19 | 6 | செ | சது 32-34, சத 14-18, வரி 33-38, வணி 2-35, ரா 2-34, கே 2 சுக் 57-44, சது விரு மழை 9க்குள். |
| ரசெ | 3 | 20 | 7 | புத | பஞ் 34-48, பூரட் 17-31, பரி 32-23, பவ 3-41, ரா 14-39, உத் 4 ரவி 29-4, மகாசெ 43-5, திரு 4 புத 8-12, வஸந்த |
| பு] | 4 | 21 | 8 | வியா | சஷ் 38-11, உத் 21-51, சிவ 32-0, கௌ 6-29, ரா 25-54, கும்பாய 15-49, சஷ் உப. [பஞ்ச |
| புச | 5 | 22 | 9 | வெ | சப் 42-32, ரே 27-11, சித் 32-25, கர 10-21, தியா—0—0 அக 28-38, அவி 1 புத 42-0, ரிஷபவசர சனி 46-0, |
| | | | | | சப் விரு ரதசப்தமி வைவ ம குரியசந்திர விரு. |
| பசு | 6 ரபியுலவ்வல் | 23 | 10 | சனி | அஷ் 47-31, அசு 33 12, சா 33-20, பத் 15-1, திவி 22-12, ரா 31-8, திரு க ரவி 34-37, கே 3 சுக் 43-1, பீஷ்மாஷ் |
| செ | 7 | 24 | 11 | ஞா | நவ 52-51, பர 39-36, சுப 34-32, பா 20-11, சே 3-46. உத் 3 செ 59-10, கரிநாள். |
| பு | 8 | 25 | 12 | திங் | தச 58-2, *கார் 45-56, சுப் 35-44, தை 25-26, திவி 12-45, அவி 2 புத 35-5, கார் உப. |
| ர | 9 | 26 | 13 | செ | ஏகா 60-0, ரோ 51-56, பிரா 36-40, வணி 29 1, ரா 1-18. அக 28-43, திரு 2 ரவி 50-57. |
| சு | 10 | 27 | 14 | புத | ஏகா 2-43, ம்ரு 54-11, மா 37-4, பத் 2-43, திவி, 7-9, கே 4 சுக் 27-46, சர்வ ஏகா தில பத்ம விரு பீஷ்ம ஏகா. |
| பு | 11 | 28 | 15 | வியா | துவா 6-33, திரு 60-0, வை 36-45, பா 6-23, திவி 19-38, கும்பபுத 50-20, பீமத்துவாதெசி |
| | | | | | தெசி ஸோபபத பிரதோ வை சிரா. [7-க்குள் |
| செ | 12 | 29 | 16 | வெ | திர 9-12, திரு 1-20, விஷ் 35-31, தை 9-12, ரா 4 6, உத் 4 செ 15-30, கல்பாதி மழை |
| ர | 13 | 30 | 17 | சனி | சது 10-52, புன 4-24, பிரி 33-22, வணி 10-52, திவி 25-0, அக 28-48, திரு 3 ரவி 7-17, |
| | | | | | தைப்பூசம் கரிநாள். ஆ சா மா வை இஷ்டி. |
| சு | 14 | 31 | 18 | ஞா | ○ பௌ 11-7, பூச 6-12, ஆயு 30-12, பவ 11-7, ரா 9 42. சாபசுக் 9-36, பகா ஸ்நா பூர் |
| | 15 | 1 | 19 | திங் | பிர 10-4, ஆயி 6-45, ஸௌ 6-4, கௌ 10-4, ரா 7-40, மாக பகு. |
| ரசெ | 16 | 2 | 20 | செ | துதி 7-54, மக 6-11, சோ 21-3, கர 7-54, திவி 25-39, திரு 4 ரவி 33-0, திரு 1 செ 31-32, |
| புகு] | | | | | அவி 4 புத 21-20, சத 1 குரு 54-36. |
| சு | 17 | 3 | 21 | புத | திரு 4-39, பூர 4-34, அதி 15-13, பத் 4-39, திவி 21-49, அக 28-52, மூல 2 சுக் 51-14, சங் சது. |
| | 18 | 4 | 22 | வியா | சது 0-28, பஞ் 55-10, உத் 2-3, ஹஸ் 56-52, சுக 8-43, பா 0-28. திவி 21-51. |
| ர | 19 | 5 | 23 | வெ | சஷ் 50-15, சித் 55-13, திரு 1-42, சுல 52-34, கர 22-56, திவி 17-41, அவி 1 ரவி 40-43. |
| செ | 20 | 6 | 24 | சனி | சப் 44-39, சுவா 51-10 கண் 46-31, பத் 17-22, திவி 8-16, திரு 2 செ 48-0, காளாஷ்டமி. |
| சு | 21 | 7 | 25 | ஞா | அஷ் 38-39, விசா 47-4, விர் 38-42, பா 11-34, திவி 4-13, ரா 27-29, அக 28-57, மூல 3 சுக் 8-16, திஸ்ரோஷ்ட |
| ர | 22 | 8 | 26 | திங் | நவ 32-52, அனு 43-3, துரு 30-58, தை 5-45 சே 0-26, ரா 27-11. அவி 2 ரவி 57-43. [கா. |
| | 23 | 9 1915௵ பிப்ரவரி | 27 | செ | தச 27-22, கே 39-22, வியா 23-27, பத் 27-22. சே 0-11, ரா 29-16, தசமிதிதி மழை 4-க்குள். [சர்வ ஏகா. |
| சு | 24 | 10 | 28 | புத | ஏகா 22-17, மூல 36-7, ஹர் 16-15, பா 22-17, செ 2-17, ரா 3-6, ரா 30-28, மூல 4 சுக் 24-24, திதித்வயப் |
| செபு | 25 | 11 | 29 | வியா | துவா 17-49, பூரா 33-34, வஜ் 9-33, தை 17-49, சே 3-30, ரா 23-56, அக 29-3, திரு 3 செ 4-0, புதவக்ர 55-7, |
| | | | | | மகா கி திரயோதிதி பிரதோ. |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| குரு. ராகு. | 7-மகா செ 9-ரிஷ வச | | |
| ரவி புத | 15-கும் பு 18-சாப சு | | கே |
| செ | சுக் | | |

# விவேக போதினி

தொ. 7] ஆனந்த௵ மார்கழி௴ [பகுதி. 7


## மோக்ஷ ஸோபானம்

## THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

### ஹனுமார் சரித்திரம்

பக்தியோகத்தின் அங்கங்களை எடுத்து விளக்கியாகிவிட்டது. இதிலிருந்து பொதுவாக பக்தியோகம் கர்மயோகமின்றி நிலை பெறுமென்றும், இது எல்லா வருணத்தாருக்கும் பொதுவாதலால், தாழ்ந்த ஜாதியில் பிறக்க நேரும் பக்தர்களுக்கு கர்மயோக பலமில்லாது இதுதனித்தே இருப்பதுபோலக் காணப்படினும், அவர்களுக்கு உள்ள குறைவான தர்மங்களையும் யோகமாக அனுஷ்டித்தால்தான் பக்தி யோகமாக இடமுண்டு என்றும், இதன் முடிவு மேல்வருணப் பிறப்பும், மேல் படியான ராஜயோக அனுஷ்டான யோக்யமாகும் தன்மையும்தான் என்றும், இந்த பக்தியால் முக்தி பெற்றதாகக் கூறப்பட்டிருக்கும் புராண, இதிஹாஸ, ஆழ்வார், நாயனார் திவ்யசரிதங்களிலெல்லாம் கவனித்துப்பார்த்தால் திவ்யசரீரப்ராப்தி, ஈசஸாலோகாதி ஸ்திதிப்ராப்தி ஆகிய மேல் வருணப் பிறப்பிற்கும், மேல்படி அப்யாஸ அவகாசத்திற்கும் காரணமான பொதுவான நிலையையே முக்தியாக வர்ணித்துள்ளது, அல்லது கிரமமாக மேலே அடையப்படும்முக்தியை, ஸித்திப்பதன் உறுதியால் முக்தியாக வர்ணிக்கப்பட்டுள்ளது என்றும், நன்கு வெளிப்பட்டிருக்கும். இந்த பக்தியோகம் அதிகமாகக் கர்மயோகத்தில் சேராமலிருந்து மேல் படிக்கு (கர்மபக்தியுடன் கூடிய ராஜயோக அனுஷ்டானயோக்யதைக்கு)க்கொண்டுசேர்க்கலாகாததாக இருப்பது ஸ்திரீ, சூத்திரர், புத்தி நுட்பமில்லாதவர்களுக்குத்தான் என்றும், மற்றைய த்விஜர்களுக்கு இது கர்மயோகத்துடன் கலந்திருந்தால் மேல் படியான ராஜயோகத்திற்கே கொண்டு சேர்க்கும் என்றும் விளங்கியிருக்கும். ஆகவே தனி பக்தி (அதிக கர்மயோக ஸம்பந்தமின்றி) உள்ளபடி இருந்தால் ராஜயோக அப்யாஸத்திற்கு யோக்யமான நிலை ஏற்பட, அதிலிருந்து கர்ம பக்தி யோகம் மூன்றையும் அனுஷ்டித்து முடிவில் த்விஜர்கள் அடையும் ராஜயோக நிலை வரவேண்டுமென்ருச்சுது ஒவ்வொரு மற்ற வருணத்தானும். புராண, இதிஹாஸ, பெரிய புராண, பக்தவிஜய சரிதங்கள் எல்லாம் இதற்து உதாரணம்; திரௌபதி, முதலிய ஸ்திரீகளும், நந்தன் முதலிய நாயனார்களும், ஆழ்வாராதிகளும் இதற்கு திருஷ்டாந்தம். இவர்களுள் சிலருக்கு மேல்படிப்போக்கு அமைந்திருப்பினும் அவைகள் ஜன்ம ஒழுங்குப்படி ஸாதாரணமாக அவர்களதுமல்ல, அவைகளைக் கொண்டு தாம் மேல் வருணத்தானைவிடச் சிறந்தவரென்று அவர்கள் இறுமாந்து வரம்புமீறி நடக்க ஸ்வப்நத்திலும் கருதி இரார்கள், தாமாக மனப்பூர்வமாக அவைகளைப்பற்றவும் முயலார்கள், தமது தெய்வ ஸம்பந்தத்தால் அவை அமைந்திருப்பினும் அவைகளை ஒரு பொருட்டாகக்கூடக் கருதாது தமது பக்தியையே ப்ரதானமென்று கடைப்பிடித்து நிற்பர். நந்தன் சரித்திரம் 'விவேக போதினி' சிறுவர்க்கான பக்கங்களில் முன்னரே எழுதி வெளியிட்டாகி

விட்டது. திரௌபதி முதலிய புராணபாத்திரங்கள் பலவற்றை முன் அனேக தருணங்களில் எடுத்துக்காட்டியாகிவிட்டது. இங்கு பக்தி பரவசம் என்றுகருதுங்கால் நமக்குஎல்லோருக்கும் இயற்கையாக ஞாபகம் வரக்கூடிய இருவர் சரித்திரங்களை எடுத்துக்கூறி பக்தியோகச் சிறப்பை விளக்க முயலுவோம். இவர்கள் ஹனுமாரும், கண்ணப்ப நாயனாருமே. இவர்கள் பக்திபரவசத்தை எடுத்துப்பாராட்டி அனுபவியாதார் யார்!

ஹனுமார் ஸ்துதியைப் பார்க்கும்பொழுதே அவர் பக்தியின் சிறப்பு நன்கு வெளியாகும். ஹனுமார் சிறுவயது முதலே சிறந்த மனங்கொள்ளா அன்பிலேயே பழகிவந்தவர். அதனாலேயே அவருக்கு தன் பலம், ஆற்றல் எல்லாம் மறந்தே போய்விட, வெறு அன்பு ஆகாரமாகவே இருந்தார். இவர் இம்மாதிரி தன் நிலையையுமறந்து அன்பு பாராட்டவல்லவர் என்பது ஸ்ரீமத் ராமாயணத்தில் இவர் ஸுக்ரீவனிடம் யஜமானக் கருத்துடன் காட்டியபேரன்பு மிகுதியால் விளங்கும். ஸுக்ரீவன் வாலிக்குப் பயந்து உலகெங்கும் ஓடுகையில் கூடவே இருந்து அவனைத் தேற்றி ஸமயத்திற்குத் தகுந்த யுக்திகள் கூறித்திரிந்தவர் இந்த ஹனுமார். ஸுக்ரீவன் நமது யஜமான், அவன் பக்ஷம் நியாயம் உள்ளது, நாம் அவன் பக்ஷம் உழைக்கக் கடமைப்பட்டவன் என்ற இந்த எண்ணங்கள் வடிவாக ஹனுமார் இருந்தாரே ஒழிய, நமக்கு மிகுந்த பலம்உள்ளது, அதைக் கொண்டு வாலியைக் கொன்று ஸுக்ரீவனுக்கு நற்கதி உண்டாக்குவோம் என்று தோன்ற அவர் எண்ணம் தன்னை நோக்கிப் பாயவே இல்லை. இவ்வாறு தன்னையும் மறந்து தான் அன்பு பாராட்டும் பொருளை மாத்திரமே கருதும் திறன் ஹனுமாருக்கு அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. ஸுக்ரீவன் பட்ட பாடுகளில் தாமும் கலந்து அவனுடன் ரிச்யமூக பர்வதத்தில் கஷ்டப்பட்டு மிகுந்த பயத்துடன் இருந்துவந்த காலங்களில், இவருக்கு எவ்வளவு கல்வி இருந்தும், யோகஸித்தி ப்ரஹ்மசரியம் இருந்தும், இவர் அன்பாகாரமாகி விட்டபடியால் இவைகளில் இவர் மனம் செல்லாமலே இருந்துவிட்டது.

இப்படி அன்பே வடிவமாய் தன்னை மறந்து ஒழுங்குதவறாது மிகுந்த சிரத்தையுடன் நடந்துவரும் பேரன்பன் ஆற்றல் வீணாகுமா? அவன் அன்பைப்பெற்று அதற்குத் தகுந்த நிலையை அருளத்தகும் ஈசன் கருணை அவனை விட்டு எப்படி அகலும்! ஒருநாள் ரிச்யமூக பர்வதச்சிகரத்தில் ஸுக்ரீவனோடு ஹனுமார் ஸம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஸுக்ரீவன் திடுக்கிட்டெழுந்து ஓடத்தொடங்கினான். என்ன என்று விசாரித்ததில் தூரத்தில் இருவர் தம்மை நோக்கிவருவதாகவும் அவர்கள் வாலி ஆள்களோ, அல்லது வாலியும் மற்றொருவனுமோ என்று தன் யஜமான் வெருண்டு ஓடுவதாகவும் தெரியவந்தது. உடனே யஜமானனைத் தைர்யமாக இருக்கும்படி உத்ஸாஹப்படுத்திவிட்டு தாம்போய் உண்மை உணர்ந்து வந்துவிடுவதாகக் கூறிப் புறப்பட்டார். ப்ரஹ்மசாரிரூபம் எடுத்து மஹாவிநயத்துடன் மலைச்சிகரத்தில் வந்துகொண்டிருக்கும் அதிஸுந்தர புருஷர்களிருவரையும் அணுகினார்: நமஸ்கரித்தார், அவர்கள் நோக்கத்தை வெளிப்படுத்த வெகு சாதுர்யமான வாக்கியங்களைப் பேசினார். இவ்விடங்களில் எல்லாம் தம்மை அறியாமலே அவர் கல்வித்திறமும் புத்தி நுட்பமும் வரம்பு மீறி வெளிப்பட்டது. வந்தவர்களான ராமலக்ஷ்மணர்கள் இவரது கனிந்த மனதை, தெளிந்த மொழியால் உணர்ந்து தமது விஷயங்களை ஒளியாமல் கூற இவரும் தன் யஜமானன் விஷயத்

தையும் கூறி இவர்களுள் மாறு அன்பு உண்டாவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து ஒழுங்காக ஸுக்ரீவனுக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கும் நட்பு உண்டாக்கிவைத்து தன் யஜமானனுக்குச் செய்யவேண்டியதான முடிவான செய்கையையும் பூர்த்திபண்ணி அவன் குறையை நீக்கினர்.

இப்படியானதும் யஜமானனுக்கு தமக்கும் மேலான ஒரே யஜமானன் ஸ்ரீராமசந்திரமூர்த்தி என்பதைக்கண்டு தமது பரவச அன்பை ஸ்ரீராமனிடமே செலுத்தலாயினர் ஹனுமார். அன்பிற்கு ஆதாரவான பொருள் விசேஷத்தாலும் முன்னமே அவரிடமிருந்த ஒழுக்க விசேஷத்தாலும் அவர் பக்தி யோகமாகி முதிர்ந்து வந்தது. முன்னர் பக்தியோகத்திற்குக் கூறப்பட்ட அங்கங்கள் எல்லாம் இவர் பக்தியில் பொருந்தி யிருந்தன. ஸ்ரீராமனது ஈச்வர ஸ்வரூபத்தைப்பற்றி கவனிக்காமலே ராம ரூபத்தில் ஈடுபட்டவர் ஹனுமார். இதற்கு திருஷ்டாந்தமாக ஹனுமாரைப்பற்றிய சிறு கதைகள் அநேகம்உண்டு. அவைகளிலெல்லாம் ராமரூபத்திலேயே ஈடுபாடு இவருக்குளென்பது நன்குவெளியாகும் (கருட கர்வபங்கம் முதலியன) ராமன் திவ்யமங்கள ரூபமே இவர் விக்ரஹம். எவ்வித லௌகிக பயனையும் கருதி இவர் ஸ்ரீராமனிடம் ஈடுபட்டவரல்லர். ஹனுமாரது வைதிக அனுஷ்டான விஷயம் அவர் பாண்டித்யம் முதலியவைகளாலேயே வெளிப்படையாக உள்ளது. இவர் பக்திச்சிறப்பு, ஸமுத்ர தாரணம், ஸஞ்ஜீவி பர்வதம் கொண்டு வருதல் முதலிய இடங்களிலும் நன்றாக வெளிப்பட்டு வரவில்லையா? இவருக்கு ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடம் யஜமான பாவம் திடப்பட்டிருந்தது. அவர் காரியம் பார்ப்பதையே இவர் தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார். இதோடு மாத்திரமா? எங்கெங்கெல்லாம் எவ்வெக்காலத்தில் ராமாயணகதை நடை பெறுகிறதோ, அங்கங்கெல்லாம் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்துகொண்டு சிரமேல்தூக்கிய கையுடனும் மயிர்க்கூச்செரிந்த உடலுடனும் பரவசமாக வந்து சொக்கி நிற்கிறார் ஹனுமார் இப்பொழுதும். இவ்வளவு அன்பு ஆராமை மிகுந்தவர் இப்பக்த சிரோமணி.

இவரது பக்திச்சிறப்பைப் பற்றி நம்முள் வழங்கிவரும் கதைகள் அநேகம். பட்டாபிஷேக காலத்தில் ராமரால் கொடுக்கப்பட்ட முக்தாஹாரத்தை ஸீதை அவர்குறிப்பை அறிந்து ஹனுமாருக்குப் போட, அவர் அதை எடுத்து கசக்கி உற்றுப்பார்த்து எறிந்து விட்டனராம். ஸீதை மனம் நொந்ததைக் கண்ட ஹனுமார் ராமர் கடாக்ஷ விசேஷக்குறிப்பை உணர்ந்து தம் மார்பைப் பிளந்து உட்புறம் எல்லாம் ராம ராம என்றபதிவு ஏற்பட்டிருப்பதைக் காட்டி, இத்தகைய பதிவு இம்முத்துக்களுள் இல்லையே என்று குறித்து தமக்கு யாதொரு வெகுமதியும் வேண்டியதில்லை, ராமபக்தியே போதும் என்பதை விளக்கினராம். ஹனுமாருக்கு ஒருக்கால் சனீச்சரன் வந்து சேருங்காலம்வர, அவன் உட்புக உத்தரவு கேட்டானும். அப்பொழுது ஏற்பட்ட ஸம்பாஷணையில் ஹனுமார் முடிவாக 7½ நாழிகை தன்னுள்ளிருக்க சனிக்கு இடம் தந்தாராம். இப்படியானதும் அவர் தமது வழக்கப்படி ராமத்தியானத்திற்குத் தொடங்கிவிட ச்வாஸம் தானே நின்றுவிட்டது. உட்புகுந்த சனி பிடிப்பதற்கு ஒன்றும் அகப்படாது தத்தளித்து 7½ நாழிகை இருந்து திண்டாடிவிட்டு வெளியேற நோக்குகையில் வெளிப்போகும் வழிகள் எல்லாம் த்யான வேகத்தால் அடைபட்டுவிட மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டு ஹனுமார் நிஷ்டைகலையும் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டு சனிக்கு சனிபிடித்து விட்டதோ என்று

கூறும்படி திண்டாடினும். ஹனுமார் என்ற பெயர் கூறிய மாத்திரத்தில் எல்லோருக்கும் அவர் ராமபக்தி வைபவம்தான் ஞாபகத்திற்கு வரும்.

இப்படி இருக்க, ஹனுமார் ஆராதனம் தக்காலத்தில் அலங்கோலப்பட்டிருப்பதைப் பாருங்கள் நண்பர்களே! ராமத்யானம், பக்தி, ராமன் ஆகாரமாக இருத்தல் இவைகளை விட்டு ஹனுமாரைப் பிரித்து தனியாக வழிபடுவது எந்த ஒழுங்கைச் சேர்ந்ததோ தெரியவில்லை! ஹனுமாரை வழிபடத்தொடங்கினால் அவர் செய்த அபாரச் செயல்களும் அவர் சிறப்பும்தான் முதலில் தோன்றும். அதோடு நின்று விடுவதா? இவைகளை விட்டு மனம் கிளம்பி எந்த பாவனையுடன் ஹனுமார் இவ்வளவு சிறந்த காரியங்களை வெகு எளிதாகச் செய்து முடித்தார் என்று கருதாமலிருந்தால் அந்த ஹனுமத்தியானம் எதோடு சேர்ந்தது? இப்படிக் கருதி சிந்தனைசெய்யத்தொடங்கினால் அவர் ராமபக்தி பரவசம் நமது மனதில் தட்டாமல் போகுமா? அவர் அத்புதச் செயல்கள் முக்கியமா அல்லது அவர் பக்திபரவசம் முக்யமா? நியாயப்படி அவர் பக்தி ஆராமையில் ஈடுபட்டு அவரைப்போல மெய்ம்மறந்து த்யேயவஸ்துவான ராமர் பக்தி ஸ்வரூபமாக நின்றால் அல்லவா ஹனுமாரை வழிபட்டதாகும். இவ்வாறில்லாது பலபீமராகவும், மஹா பராக்ரமசாலியாகவும் மாத்திரம் வழிபட்டு நின்றுவிட்டால் அவரை மேன்மைப்படுத்தி வந்தனியாக்கி மனஸ் ஸமாதான நிலைமை நமக்கு எப்படி வரும்? இதனால் வரும் மோக்ஷ நிலைக்கு இடமே ஏற்படாமல் போகும் என்று கூறவும் வேண்டுமா! இப்படி வழிபட்டு பட்டுத்தான் தக்காலத்தில் ஹனுமாரை வெறுங்குட்டிச் சாத்தான் க்ஷுத்ரதேவதை நிலைக்குக்கொண்டு வந்து பாவனை செய்து செப்படி வித்தை காட்டத் தொடங்கிவிட்டார் ஹனுமந்த உபாஸகர்கள். வைதிகவழியிலிருப்பவரான ஸாதுக்கள் இந்த ஹனுமாரை ஆராதிப்பது ஸாத்வீக உபாஸனையாகுமா என்று மயங்கும் நிலை வந்துவிட்டது இக்காலத்திய ஹனுமந்த உபாஸனைக்கு, கும்பிடப் போனவன் தெய்வத்தைக் கெடுத்த கேட்டால். ஒருவாறு ஸாத்வீகமான ஹனுமாரது வழிபாடு மாத்வர்களிடமுள்ளது. அவர்களும் வைதிக முறைப்படி நன்றாக இதை நடத்தாததால் இது நல்ல சித்த ஸமாதானத்தைத்தருவதாகஇல்லை. மாத்வர்கள் ஹனுமாரை ராமபக்தராக மாத்திரம் மதித்து அவர் பக்தி பரவசத்தில் ஈடுபட்டு ராமத்யான ரூபர்களாக இருக்க முயலுவதில்லை. அவர்களுக்கு ஹனுமாரிடமிருக்கும் அபிமானம் அவர் வாயுபகவானது முதல் அவதாரம் என்பதையே பொருத்தது. இதனால் வாயு.கவானது மூன்றாவது அவதாரம் அவர்கள் குருவான மத்வாதலால் வாயுவினது முதல் அவதாரமான ஹனுமாரிடத்தும், இரண்டாம் அவதாரமான பீமனிடத்தும் அவர்களுக்கு மிகுந்த அபிமானம். ஆனால் இம்மாதிரியான ஸ்வமதாபிமானத்தோடுகூட ஹனுமாரது ராமபக்தி பரவசம் அல்லது பீமஸேனனது சிவபக்தி பரவசம் இவைகளையும் அவர்கள்கருதி ராமமயமாக அல்லதுசிவமயமாக நிற்கப்பார்த்தால் அவர்கள்பக்தி பக்தியோகமாகமாறஇடமுண்டு. ஆனால் மற்றவர்கள்செய்யும் ஹனுமத் உபாஸனையான காடிக்கூட உபாஸனை, காம்ய உபாஸனை இவைகளுக்கு பக்தியோகமாகும்வழியே இல்லாததால், மத்வர்கள் உபாஸனைஒழிந்த மற்றைய ஹனுமத் உபாஸனைகள் எல்லாம் வீணே, வைதிக மோக்ஷஸோபான பாகமாகத் தகுந்தவைகள் அல்ல, என்பதை மறவாது ஹனுமாரிடம் ஈடுபட்டு இக்காலத்திய வழிகளிலிருந்து விலகி வைதிகமார்க்கத்தை இந்தவழிபாட்டிலும் கடைப்பிடிக்கவேண்டும்.

பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே என்பது போன்ற பக்தியைத்துதிக்கும் வாக்கியங்கள் காணப்படினும், இவைகளுக்கெல்லாம் பக்தி உள்ளபடி யோகமாகப்பண்ணத் தொடங்கிவிட்டால் ராஜ ஞானயோக வழியாக முக்தியையே அடையும்படி செய்துவிடும், கீழே நழுவுவது அதிகமாக ஏற்படாது என்பதுதான் கருத்து. பக்தி யோகத்திற்கு முடிவான பலன் ப்ரஹ்மலோகம் வரையில் போகலாம். அதாவது தேவதா ஜன்மம் வேதாந்த விசார யோக்கியமான த்விஜப்பிறவி முதலியவைகளே ஒழிய, எடுத்ததும் மோக்ஷம் உடனே கைகூடி விடாது. இதுவரையிலும் கூறிவந்த பக்தசிரோமணியான ஹனுமாரும் ஸ்ரீராமன் தமது நிலைக்குப் போகப் புறப்படுகையில் கூடவே புறப்பட யத்தனித்தாராம். அதற்கு ஸ்ரீராமசந்திர மூர்த்தி மிகுந்த பரிவுடன் அவரைநோக்கி 'அப்பா குழந்தாய், நமது திவ்ய கதை உலகில் உள்ளவளவு, நீ ஆனந்தமாக எம்மிடம் ஈடுபட்டு மேலான நிலைகளை அடைந்து என்னிடம் வருவாய்' என்று உத்தரவளித்தார். அதன்படி அவர் உலகில் சிரஞ்சீவியாக இருந்து ராமசதாப்ரஸங்கவிடங்களில் எல்லாம் ஆவிர்ப்பவித்து உருகி ஆனந்தித்து, அடுத்த ப்ரஹ்மகல்பத்தில் பிரஹ்மாவாக யோக்கியராகிறாராம். அடுத்த கல்பமுடிவில்தான் ஹனுமாருக்கு, ஜீவன் முக்தநிலையிலிருந்து விதேக முக்தி வரப்போகிறது. இதனாலேயே பக்தியோகம் அடுத்தபடியாகிய ராஜ ஞான யோகங்களில் கொண்டு சேர்த்து மீளாநெறி வழி நம்மைச் செலுத்திவிடும் என்பதற்கு என்ன ஸந்தேஹம். இந்த விஷயங்களை எல்லாம் கவனியாது இவ்வுலகிலேயே பக்தி, அதுவும் லக்ஷணங்கள் பொருந்தாப் பக்திக், கூத்தடித்து மோக்ஷத்தையே நேரிட உடனே எட்டிப் பிடித்துவிடலாம் என்ற அறிவிலிகளை என்னென்று எடுத்து வர்ணிப்பது? அம்புலியைப் பிடித்துவிட்டதாக எண்ணி மகிழும் குழந்தையை உபமானமாகக் கூறின் அதற்கிருக்கும் குற்றமின்மை இவர்களிடமிராது இறுமாப்பும் பிடிவாதமும் அல்லவா இருக்கிறது?

ஹனுமார் மேல்படியின் யோக்கியதையுள்ளபடி கைகூடுவதற்காக ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடமே வேதாந்த விசாரம் செய்ததாகக்கூட கதைகள் அனேகமுள. முன்னர்கூறிய முத்துமாலை விஷயத்திற்குப்பின்னர் ஸீதைக்கு ஹனுமாரது ராமபக்தி வைபவத்தால் ஆச்சரியம் வர ஸ்ரீராமன் உத்திரவுப்படி ஹனுமாருக்கு கர்ம உபாஸனாதிகளை உபதேசித்தாள் என்றும் ஸ்ரீராமன்பின்னர் ஞானமுடிவை வேதாந்தவழிப்படி உபதேசித்தார் என்றும் தெலுங்கில் உள்ள ஸீதாராமாஞ்சனேயம் என்ற நூல் விளக்குகிறது. நூற்றெட்டு உபநிஷத்துக்களில் முக்திகம் என்ற கடைசி உபநிஷத்தில் ஹனுமார் ஸ்ரீராமனைக் குருவாக அடுத்து வேதாந்த விசாரம் செய்தது கூறப்பட்டுள்ளது. தத்வஸாராயனம் என்ற வேதஸார இதிஹாஸத்தில் உள்ள ராம கீதையிலும் ஹனுமாரது வேதாந்த விசாரம் விளக்கமாகக் காணலாம். இவைகளிலிருந்து ஹனுமார் வெறும் ராமமூடபக்தியுடன்மாத்திரம் நின்றுவிடாமல் மேல் படியாகிய ராஜஞான யோகங்களிலும் முனைந்தார், அடுத்த ப்ரஹ்மஜீவன் முக்தப்பட்ட முயற்சிக்கு ஏற்ப என்பதும் வெளியாகும். ஆகவே பக்தியோகத்திற்கு ராஜயோகத்தில் சேர்த்து மேலே தள்ளிவிடுவதே முடிவு, அது உள்ளபடி நிலைப்பதற்கு மேல்படி போனால்தான் முடியும். மேல்படியாவது இவ்வுலகில் மேல் வருணப்பிறப்போ அல்லது தேவதாதி வேதாந்த விசார யோக்கியமுடைய பிறவியோ என்பதும் விளங்கி இருக்கும். அடுத்த ஸஞ்சிகையில் பக்திச் சிறப்பை வெளிப்படுத்தும் கண்ணப்பர் சரிதத்தை எடுத்து விவரிப்போம்.

——

# சாஸர்

## CHAUCER

ஆங்கிலபாஷயின் ஆதிகவிஎன்று கூறப்படும் ஜியாப்ரி சாஸர் கி. பி. 1328-ஞல் பிறந்தவர். இவர் தேம்ஸ் தெருவில் வஸித்துவந்த ஜான் சாஸர் என்னும் ஒரு பணக்கார சாராய வியாபாரியின் புத்திரர். மூன்ருவது எட்வர்ட் காலத்தில் ஜான்சாஸர் அச்சக்ரவர்த்தியுடன் கிழப் பிரதேசங்களாகிய ஹாலண்டு, பெல்ஜியம் முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றனர். இக் கண்ணியவான் 1366-ம் வருஷத்தில் பரமபதமடையவே, அவர் மனைவி மற்ரோர் வியாபாரியை மணந்தனள்.

ஜியாப்ரி சாஸர் பிறந்தமுதல் 1357 வரை அவர் இளமைப்பருவத்தைக்குறித்து நமக்கு அதிகம் தெரிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும் அவர் படிப்பை விட்டு இராஜசேவகத்தில் அமர்ந்த நாள் முதல் அவரதுவரலாற்றை சற்றேறக்குறைய அறியலாம். சிலர் அவர் கல்விப்பயிற்சியில் மேன்மை பெற்ற இடம் ஆக்ஸ்போர்ட் (Oxford) என்கிருர்கள்; மற்றும்சிலர் கேம்பிரிட்ஜ்(Cambridge) என்கிருர்கள்; வேறு சிலர் அவர் வக்கீல் பரீக்ஷைக்கு லண்டன் நகரிலேயே படித்ததாகக் கூறுகின்றனர். எவ்வாருயினும் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்தார் என்பதற்கு ஐயமில்லை.

கல்விகற்றவுடன் எட்வர்ட் குமாரரான லையனல் (Lional) என்பவரின் சேவகத்திலமர்ந்து பன்முறை அவரிடமிருந்து பரிசு பெற்றதாக அநேக விடங்களில் காண்கிருேம். இவ்வாறிருக்கும் நாளில் அவ்விளவரசருடன் இவர் ப்ரான்ஸ் தேசஞ்சென்று அங்கு நடந்த யுத்தத்தில் சண்டை புரிந்து எதிரியினுல் பிடிபட்டு சிலமாதகாலம் சிறையிலிருந்தனர். 1360ம்-வருஷத்தில் பிரான்ஸுகாரருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த உடன்படிக்கையில் அரசன் இவரை பணங்கொடுத்து மீட்டுவந்தனன். இவ்வித கஷ்டங்களினின்றும் இவரை மீட்டுக்கொணர்ந்து உதவிபுரிந்த உத்தமியாள், லையனல் என்பவர் மனைவி எலிஸபெத் என்பவள். அவள் 1367-ல் இறந்துபோகவே இவர் அரண்மனையில் ஒரு சேவகத்திலமர்ந்தார்.

இச்சமயத்தில்தான் அவர் இல்லறவாழ்க்கையில் அமர்ந்து பிலிப்பா என்னும் பெண்ணை மணந்து கொண்டதாகக் கூறுகிருர்கள். இந்த பிலிப்பா என்பவள் லையனல் என்பவர் ஸகோதரர் வீட்டில் சேவகத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. எது எவ்வாருயினும் அவர் பிலிப்பா என்பவளை மணந்து இல்லறம் நடத்தியதில் ஐயமில்லை. ஆயினும் இல்லறவாழ்க்கையில் இருவரும் மனமொத்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றும், எவர்பேரில் குற்றம் சாட்டுவது நியாயமென்றும் இப்பொழுது ஆராயப்புகுவது வீண்.

அவர் எவ்வித ஆசிரமத்தி லிருந்த போதிலும் தன் இஷ்டப்படி சுயேச்சையாய்த் திரிந்து கொண்டிருந்தார் என்று யாம் அறிகிருேம். அரசனிடமிருந்த வேலைக்காரர்களில் சிலருக்கு மாத்திரம் இவ்வித பாக்கியம்கிடைக்கும். இக்காலங்களில் அவர் படிப்பிலே தம் கவனத்தைச் செலுத்தினுர். இவ்வாறிருக்கும் ஒருவனுக்கு ஏதோ தான் கற்ற வித்தையை பலர் அறியுமாறு புத்தகங்கள் பதிப்பிக்க எண்ணம் உண்டாவது ஸகஜம். இவ்விதம் செய்தோர் அநேகர். ஆனுல் அவர்கள் புத்தகங்கள் எல்லாம் தங்கள் மனதினின்று ஊறிய சொந்த எண்ணங்களாயிருப்பது துர்லபம். ஏனெனில் இவ்வகைத்தினுர்கட்கு சுயேச்சையாய் எழுத தைரியம் வாராது,எழுதுவதைபிறர் பழிப்பார்களோ அல்லது அதில் குற்றம் கண்டு பிடிப்பார்களோ என்ற எண்ணம் மேலிட்டு நிற்கும். தவிரவும், தெள்ளிய நடையில் எழுத அநேகருக்குப் பயிற்சியிராது. ஆகையால் அவர்கள் மேற்கூறிய இடையூறுகளை நீக்கவும் தங்களிட கல்வித்திறமையைக் காட்டவேண்டி வேறுபாஷைகளிலிருந்து சிலவற்றை மொழி பெயர்த்து எழுதுவது வழக்கம். அவ்வாறே சாஸரும் பிரஞ்ச், இத்தாலியன் பாஷைகளிலுள்ள சிலபுத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத்தொடங்கினர், அவ்விதம்எழுதியபுத்தகங்களில் ஒன்று ரொமாண்ட் ஆவ் தி ரோஸ் (Romunat of the Rose). இவைகளைப் பற்றி பிற்பாடு பேசுவோம்.

கி. பி. 1367-க்கு பின் இவர் லையனல் ஸகோதரரான ஜான் ஆவ் காண்ட் (John of Gaunt) என்பவரது சேவகத்தில்சிற்சில வேலைகளிலமர்ந்து அவரது மனைவி பிளாஞ்ச் என்பவளால் ஆதரிக்கப்பட்டு வருங்கால் அங்கும் இவர் கஷ்டம் இவரைவிட்டு நீங்கவில்லை. 1369-ல்

அம்மாதும் பரமகதியடையவே தன்னை ஆதரித்தவரும் எஜமானன் துக்கத்தை நோக்கி அங்கு ஒரு நூல் இயற்றியதாகத் தெரியவருகிறது. இத்தகைய கவிகளினின்று, அவரது புலமை வெளிப்படுகின்றது.

மானிட வாழ்க்கையில் ஒவ்வொருவன் ஜீவதசைகளிலும் அவர்களின் நன்மையை நாடிய சில சமயங்கள் வாய்க்கின்றன. அவைகளை ஒருவன் நல்வழியில் உபயோகிப்பானாயின், அவன் ஆயுள்வரை சுகமாகக் காலங்கழிப்பான். அவ்வாறின்றி அவன் வாளா நிற்பின் நிஷ்பலன் நிச்சயம். கவிகட்கும் அவ்விதமே; அவர்களுக்குக் கிடைக்கும் பருவங்களை வீணில் கழித்து நின்றால் அத்தொழிலில் ஜயமடைவது அரிது. அதற்கேற்ப, நம் சாஸரோவெனின் 1370ஆ முதல் 1373 வரை வெளி நாடுகளில் சென்று உலாவ சமயம் வாய்த்ததை விடாமல் உபயோகிக்கலாயினர். ஏதாவது புஸ்தகங்களைப் படிப்போன் அவைகளில் கூறியுள்ள இடங்களை நேரில் பார்த்து ஆனந்திக்க எண்ணுவது நியாயமே; அதினும் சரித்திரம் படிப்போன் அதிக ஆவல் கொள்ளுகிறான். ஆனால் சாஸரது மனதில் தான் புஸ்தகம் எழுத வேண்டுமென்கிற எண்ணமில்லை. இக்காலத்திலோ அதற்கு நேர் விரோதம். ஒருவன் அயல் நாடு சென்று திரும்பினால், உடனே தன்னுடைய செயல்களையும் தான் கண்ணாரக்கண்டு ஆனந்தித்ததையும்பற்றி ஒரு புஸ்தகம் எழுதுகிறான். எழுதுவோனின் எண்ணம் ஒன்று; மற்றோர் எண்ணம் பல. தான் பல நாடுகளில் சஞ்சாரம் செய்தபோதிலும் அவ்வித பாக்கியம் பெறாதவர்களுக்கு அந்நாட்டின் விவரங்களை நன்கறியுமாறு செய்கிறான்; இருப்பவர்களோ எனின் அவன் பிறதேசங்களுக்குச் சென்று செலவழித்த பொருளை மீட்க புஸ்தகம் பதிப்பித்தனன் என்பார்கள். எவ்விதமிருப்பினும், சாஸர் பல நாடுகள் சென்று வந்தது அவர் கல்விப்பயிற்சியின் அபிவிர்த்தியின் பொருட்டென்றே எண்ணுவோம். அவர் சென்ற நாடுகளில் முக்கியமானது இத்தாலி தேசம். அதில் ஜினோவா, வெனிஸ், ப்ளாரென்ஸ் (Genoa, Venice, Florence) முதலிய நகரங்களை நன்கு அறிவாரெனத்தெரிகிறது. பிற்பாடு 1374-ல் அதிக அலைச்சலில்லாமல் நிலையுள்ள இல்லற வாழ்க்கையில் அமர்ந்தார்.

இராஜ வம்சத்தாருக்கு அநேக சிற்றேவல்கள் செய்து அக்குடும்ப ஜனங்களுடன் நன்கு பழகியதால் இராஜாங்கத்தில் இவருக்கும் இவர் மனைவியருக்கும் பிரதிவருஷம் பென்ஷன் கொடுத்து வந்ததுமன்றி, இவரைத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளுக்கு வரிபோட்டு வசூல்செய்யும் முக்கிய உத்தியோகஸ்தராக நியமித்தார்கள். இக்காலத்திலே அவர் அரசனிடமிருந்து அநேக வெகுமான சம்மானங்கள் அடைந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அரச சேவகத்தில் ஸதா அவர் அண்டையிலிருந்து சேவித்ததால் தன் எண்ணப்படி காலத்தைப் படிப்பிலும், நூல் இயற்றுவதிலும் சுயேச்சையாய்க் கழிக்க அவகாசப்படவில்லை.

இவ்வாறாக, ஆண்டுகள் நான்கு கழியவே இரண்டாவது ரிச்சர்ட் சக்கரவர்த்தியின்விவாக சம்பந்தமாய் ப்ரான்ஸ்தேசத்திற்குச் செல்லவேண்டியதாயிற்று. அங்கிருந்து திரும்பியவுடன் இத்தாலிதேசத்திற்கு இவரை அனுப்பினர்கள். யாத்திரைகள் முடிந்து கொஞ்சகாலம் அமரிக்கையாய் இல்லத்தில் நின்ற வருஷங்களில் அவர் பூஸ்திதி சம்பாதித்துவிட்டார். அப்பொழுதே குடிகள் பிரதிநிதிசபையாகிய பார்லிமெண்டி (Parliament)ல் ஒரு பிரதிநிதியாய் (Member) ஏற்படுத்தப்பட்டார். இப்பொழுதுதான் இவருடைய தனமும், தைரியமும், கவித்திறமும் ஓங்கிவிளங்கியதென அநேகர் கொள்ளுகிறார்கள்.

தம் சிநேகிதரும் உபகாரியுமான ஜான் ஆவ் காண்ட் வெளிச்சென்றவுடன் இவர்வேலையும் நீங்கிவிட்டது. இருந்தபோதிலும் 1389-ல் இவர் லண்டனிலுள்ள பெரிய மாதாகோவிலில் (West Minister Abbey) கொஞ்சகாலம் சிற்றலுவல்கள் பார்த்து வந்தார். இச்சந்தர்ப்பங்களில் அநேக துன்பங்கள் நேரிட்டன. முதலாவது, அவர் மனைவி இறந்துபோய்விட்டாள். பிற்பாடு சிற்றலுவல்களும்நீங்கின. இவை கட்டுத்தக்க கடன் உபாதைகளும் இவரை நெருங்கின; திருடாலும் திரவிய சேதம் நேரிட்டது. 1399-ல் அரசனாயிருந்த நான்காவது ஹென்றி என்போர் இவரது கவித்திறமையை உன்னி பிரதி வருஷம் இவருக்குப் பென்ஷன் கொடுத்துவரும்படி உத்தரவு செய்தார். இவ்விதம் கிடைத்த நல்ல அதிர்ஷ்டத்தினால் இவர்

அடைந்த சுகமும் மட்டே. மறு ஆண்டு முடிவு பெறுமுன், 1400-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி இவர் பரமபத மடைந்தனர்.

ஒருவாறாக சாஸர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு முதலியவற்றைக் கூறியுள்ளோமே யொழிய அவர் எழுதிய காவியங்களைப்பற்றியும் அவைகளின் பெருமையைப்பற்றியும் வினவினோமல்லேம். மேலும் அவர் குணதிசயங்களை விசாரித்திலேம். ஆயின் அத்தகைய விசாரணைகளை கவனிக்குமிடத்து முதலில் அவர் செய்த நூல்கள் கவனிக்கத்தக்கனவா யிருக்கின்றன. சாஸரை 'ஆங்கில பாஷையின் ஆதிகவி' என அநேகர் கூறுகிறார். அவ்வாறு கூற அவர் யாது செய்தனரென்று ஆராயுமிடத்து முக்கியமான சில நூல்களைக் கொண்டே மேற்கூறிய வாசகம் உண்மையென ரூபிப்போம். அவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்ற 'ரொமாண்ட் ஆவ் தி ரோஸ்' (Romaunt of the Rose) என்னும்காப்பியத்தில் இவர் ஆங்கிலபாஷையை காலத்திற்குத் தக்கபடி எவ்விதம் திருத்தியிருக்கிறார் என்பது முதலிலேயே தெரிகிறது. இது தவிர அதில் நாம் மெச்சத்தக்க விஷயம் கிடையா. இவரது இரண்டாவது நூலாகிய 'புக் ஆவ் தி டச்சஸ்' (Book of the Duchess) என்பதில் இவர் கவித்திறமை விளங்குவதுந் தவிர அவர் சுயமாய் கவிகள் பாட வல்லமையுள்ளவரென அறிகிறோம். இங்குமங்கும் அரசர்களின் நடையுடைபாவனைகளை விவரித்திருப்பதால் சாஸர் சமஸ்தானத்தில் சம்பந்தப்பட்டவரெனவும் அறிகிறோம். இரண்டாவது ரிச்சார்டுக்கு ஆஸ்திரியா ஏகசக்ராதிபதியாகிய ஐந்தாவது சார்லஸ் என்பவரின் பெண்ணை மணம் செய்வித்த விருத்தாந்தத்தைக் குறித்து ஒரு கவி பாடியுள்ளார். அதற்கு 'அஸெம்ப்ளி ஆவ் பௌல்ஸ்' (Assembly of Fowls) என்று பெயர். இவைகள் எல்லாவற்றிலும் அவர் தாம் இத்தாலிதேசத்து கவிகளுக்கு அதிகமாகக் கடமைப் பட்டதை நன்கு தெரிவித்திருக்கிறார். இச்சங்கதி அவர் எழுதிய 'கீர்த்திக்கு இருப்பிடம்' (House of Fame) என்பதில் தெள்ளென விளங்குகிறது.

யாவற்றினும் மேம்பட்டதும் அவரை 'ஆதி கவி' என்று கூறுவதும் அவர் திறமையை வெளிப்படுத்துவதுமான நூல் 'காண்டர்பரி கதைகள்' (Canterbury Tales). இந்நூலில்என்ன கூறியுள்ளார் என்பதைக் கவனிப்போம். தமிழில் நடைபெற்று விளங்கும் கதைக் கொத்துக்களில் மிகவும் சிறப்பித்துச் சொல்வது பஞ்சதந்திரம். அதில் ஒரு குரு சிஷ்யப்பிள்ளைகளுக்கு புத்தி கூறுவதாக எண்ணித்தொடங்குகிறார். ஆனால் சாஸர் அவ்விதம் செய்யவில்லை. அவர் இம்மாதிரி செய்திருப்பின் அவரெண்ணம்நிறைபெற்றிராது. ஆனதால் அவர் இவைகட்குமேல் ஒரு தந்திரம் செய்தார். எல்லா இடங்களிலும் ஸ்தலயாத்திரை போவது வழக்கம். சிலர் வேண்டுதலையின் பேரில் செல்வார்கள்; சிலர் வேடிக்கை பார்க்கச் செல்லலாம்; இவ்விதமாக வெவ்வேறு எண்ணமிருக்கலாம்; அதற்குத் திருஷ்டாந்தமாக நாம் இராமேச்வரத்தை எடுத்துக் கொள்வோம். அவ்விடத்திற்கு ஆடி, தைமாதங்களில் செல்லும் பிரயாணிகளுக்கு கணக்கு வழக்குக் கிடையாது. அதில் வெவ்வேறு ஜாதியாரும், பிரிவினர்களும், தொழிலினர்களும் இருப்பார்களன்றோ. இவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் ஒருங்கு கூடினால் ஒருவர்க்கொருவர் அவரவர்கள் கண்டதையும் கேட்டதையும் சொல்லிக் கொள்வது உலகவழக்கமே. அதை மனதில் வைத்து சாஸர் இங்கிலாந்திலுள்ள அநேக தொழிலாளிகளும் சேர்ந்து ஓரிடத்தில் சந்தித்து ஒரே எண்ணத்துடன் செல்லும் யாத்திரை ஸ்தலம் எது என்று எண்ணி அது காண்டர்பரி என்று தீர்மானித்தார். அங்கு செல்லும்பிரயாணிகள் லண்டன் மாநகரத்தில் கூடி வழிச்சென்றதாகவும் அவர்களில் ஒவ்வொருவரும் போகும்பொழுது இரண்டு கதையும், திரும்பி வரும் பொழுது இரண்டு கதையும் சொல்லவேண்டுமென்று தீர்மானித்துச் சென்றதாகவும் சொல்லுகிறார். அவ்வாறு எண்ணிய நூல் முடிவுபெறாவிடினும் முதலில் அங்கு லண்டனில் கூடிய அநேகரது வடிவம், நிறம், நடை, உடை, குணம் தொழில் முதலியவற்றை நன்கு கூறி அவர்களில் சிலர் கூறியதாக இரண்டொரு கதைகளும் எழுதியிருக்கிறார். இக்கதைகள் நமக்கு முக்கியமில்லையாயினும் அங்கு கூடியவர்களைப் பற்றி நாம் அறியும் ஞானமே பெரிது. ஏனெனில் அவர் இங்கிலாந்திலிருந்த ஒவ்வொரு தொழிலுக்கும். ஒவ்வொருவராகப் பொறுக்கி அவர்களை அவ்வவ் வகுப்புகட்கு பிரதிநிதிகளாக்கி அவர்கள் குணகுணங்களையும் செயல்களையும்

விளக்கி சிலவிடங்களில் பரிகஸித்தும் வேறிடங்களில் இகழ்ந்தும், சிலவிடங்களில் பெருமையாகப் புகழ்ந்துமிருக்கிறார். இவ்வகைய நூல்களிலிருந்து அக்காலத்திய சங்கதிகள் வெளியாகின்றன. இதுபற்றியே அப்பாடல்கட்கு முதலில் யாம் மகிமை தருகிறோம்.

இவைகளினின்றும் யாம் அக்காலத்திய சங்கவாழ்க்கை (Society) என்னவென்றறியலாம். சாஸர்காலத்தில் லண்டனில் பிளேக் வியாதி பரவியிருந்ததால் அந்நகரம் இப்பொழுது இருப்பதினும் மிகவும் சிறியதாயிருந்தது. நான்காவது எட்வர்ட் காலத்திற் கப்புறம்தான் அது மேன்மேலும் விருத்தியடைய ஆரம்பித்தது. இங்கிலாந்திலுள்ள குடிகள் மதத்தில் அதிகப் பற்றுள்ளவர்களாகக்காணப்படவில்லை. ஜனங்கள் பாபங்களும் அக்கிரமங்களும் செய்துவந்ததும்தவிர தங்கள்தொழில்களைச் செய்துவந்தனர்களல்லர். வர்த்தகமும் பாங்கிகளும் அயல்நாட்டு வியாபாரிகள் கையில் இருந்தன. ஹாலண்டு, பெல்ஜியமுதலியவிடங்களிலிருந்து ஜனங்கள் இங்கிலாந்தின் கீழ்ப்புறங்களில் குடியேறிநெசவுத்தொழிலைக் கைப்பற்றி விருத்திபெற்றதும் தவிர, உள்நாட்டார் தொழிலைத் தொலைத்து விட்டார்கள். இங்கிலாந்தில் முதலாவது வில்லியம் காலத்தில் குடியேறிய பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் ஒருங்குகூடி ஒரே சங்கத்தினராய்விட்டார்கள். ஆங்கில பாஷை அதிகமாய் நடைபெறுவிடினும் அநேகரால் மெச்சத்தக்கதாயிருந்தது. பிரஞ்ச் பாஷை மேலோர் பேசும் பாஷையென எண்ணினர்கள்.

சாஸர் சரித்திரத்தை முடிக்குமுன் கவனிக்கவேண்டிய சில விஷயமுள, அவருக்கு கவித்திறமை வாய்த்த தெப்படி? அவர் கவிகளிலுள்ள அலங்கார மென்ன? அவர் குணாதிசயங்க ளென்ன? அவர் அநேக விடங்களில் படித்ததும், சமஸ்தானத்தில் தொழிலில் அமர்ந்ததும், அயல் நாடுகளில் சென்று ஆங்குள்ளோரது செயல்களை நேரில் கண்டதும், மற்றும், அங்குள்ள கற்றோரைக் கண்டதும் அவரது சிநேகமுமே இவர் கவித்திறமை வாய்ந்ததற்கு காரணங்களாயினவென்று அறிகிறோம். அவர் கவிகளிலுள்ள அலங்காரங்களை கவனிக்குமிடத்து நம் நாட்டுப் பூர்வ கவிகளுக்குச் சமமாகவே கூறலாம். தமிழ்க் கவிகளில் சிலர் உள்ளவைகளை அப்படியே சொல்லியுள்ளார். அநேகர் ஸ்தோத்திரப்பிரியர்களானபடியால் இஷ்டப்படி சங்கதிகளைத் தாழ்த்தியோ உயர்த்தியோ வைத்திருக்கிறார்கள். ஆனால் சாஸர், தான் கண்டவைகளை அப்படியே சொல்வதுடன் காதாரக் கேட்ட பழைய சங்கதிகளையும் கலந்துள்ளார். ஒருவரை இகழ வேண்டின், பரிகாசமாகவே கூறித் தாழ்வடைவிப்பார். அகப்பொருள், புறப்பொருள் இரண்டும் வரும்படி பாடுவதில் சமர்த்தர். அவர் அதிக சிரமம் எடுத்துப் பாடியதாகவே காணவில்லை. ஆசுகவி என்னலாம். எளிதில் தெளிவான பாடல்களில் கதை சொல்லும் திறமை அவருக்கு மட்டில் கிடைத்தது வியப்பாகும். அவர் கவிகள் காதில் கேட்க மிக ஆனந்தத்தையும், மனதிற்கு உத்ஸாகத்தையும் தருகின்றன.

இவ்வித நூல்கட்கு ஆசிரியரான இவர் குணாதிசயங்கள் என்ன என்று யாரைக் கேட்பது? அவர் நூல்களில் சிற்சில விடங்களிலிருந்து அறிவது யாது? சாஸர் அதிக சாந்தமும் பொறுமையும் பொருந்தியவர். அவர் கல்வியும் கண்ணியமும் காட்டிய கனவான். தன் பெருமையும் சிறுமையும் நன்கறிந்தவர். மற்றோர் தன்னை அதிகமாக மதித்துக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணங்கொண்டிலர். ஜோதிடம், ரசவாதம் முதலிய சாஸ்திரங்களில் பற்றில்லாதவர். பூலோக நடவடிக்கை தெரிந்த புத்திமான். ஸ்திரீகளை அதிகமாகக் கொண்டாடும் கட்சியாருடன் சேர்ந்தவரல்லர். மற்றும் இகழ்ச்சியாகப் பேசியதாகவும் எண்ண இடமில்லை. புத்தகங்களைப் படிப்பதில் அவர் அதிக ஆவல் கொண்டவர். இரவும் பகலும் அதே விசாரமா யிருப்பதும்தவிர படிப்பதும் எழுதுவதும் தன் தினசரி வேலைகளில் ஒன்றெனவெண்ணியிருந்தார். அதிகம் உரைப்பதில் பயனென்? ஓதாமல் ஒரு நாளு மிருக்க வேண்டாம் என்ற வாசகத்தைக் கடைப்பிடித்து அதன்படி ஒழுகினோர்களில் முதன்மையான ஆங்கில கவி சாஸர் என்பவரே.

C. வேங்கடேச ஐயர், பி. ஏ.

# ஆரியர் நாகரிகம்

## THE ARYAN CIVILIZATION

தற்கால நாகரிகம் பட்டணங்களையே ஆதாரஸ்தானமாய்க் கொண்டது. அதில் அதிசயமாயுள்ள அனைத்தும் பட்டணங்களிலேயே காணப்படுகின்றது.

அது இவ்வித மிருத்தல் சகஜமே. வெவ்வேறு புத்திவிலாஸமுள்ள அநேக மனிதர்கள் கூடியிருக்கும் பட்டணத்தில், ஒவ்வொருவனதறிவும் ஓய்விலா விழிப்புடனிருக்க வேண்டியதவசியமாகிறது. ஒவ்வொருவனது புத்தியியக்கத்தினாலும் மற்றவரிடத்திலும் முயற்சியும் சலனமும் தொடர்ந்துண்டாகிறது.

மனிதன் தனது வளரும் அறிவைப் பயன்கொடுக்கும் வழிகளில் செலுத்த முயல்கிறான். அதற்குச் சாதனம் எங்கு உண்டாகக்கூடும்? பல மனிதர் ஓரிடத்திற் சேர்ந்து, தமது ஆக்குந்திறமையைக் காட்டுமிடத்திலேதான் அது சாத்தியமாகும். அம்மாதிரியான இடம் ஒரு பட்டணமே.

ஆதிகாலத்தில், மனிதன் முதல் முதல் பட்டணத்தை ஸ்தாபித்தது, அதில் வாழ்தலாலுண்டாகும் நாகரிகத்திற்காக வன்று. தன் விரோதிகளினின்றும் தன்னைக் காத்துக்கொள்ள ஒரு பலமான வஸதியைத் தேடியே அவன் அவ்விதம் செய்பலானான். நகரங்களுண்டாவற்கு முதற்காரணம் எதுவாயிருப்பினும், அநேகர் ஓரிடத்தில் கூடிவாழ ஆரம்பித்ததும், மனிதரது வாழ்க்கையில் சில விசேஷங்கள் தோன்றின. மனிதர் ஓர் சமாஜமாகக் கூடிவாழ ஆரம்பித்தது முதல், ஒவ்வொருவனுடைய தனித்தனி விருப்பங்களும் செய்கைகளும் சமாஜத்தின் மொத்தவாழ்க்கையை அனுசரித்து, அதற்குக் கீழடங்கியே நடைபெறும்படியான அவசியம் நேரிட்டது. இவ்வாறே சமாஜ தர்மம் என்பது சிறிது சிறிதாய்த் தோன்றி வெளிக்கிளம்பிற்று. காலக்கிரமத்தில் இந்த சமாஜ தர்மம் விஸ்தரித்து ஓங்குவதையே நாம் நாகரிகத்தின் வளர்ச்சியெனச் சொல்லுகிறோம்.

ஆனால் இந்தியாவில் மனுஷ்யதர்மம் தோன்றிவளர்ந்தவிதம் ஒரு விசேஷ ஆச்சர்யத்தைத் தரத்தக்கது. இந்தியாவில் ஆரியர் நாகரிகத்தின் ஆதாரஸ்தானங்கள் நகரங்களிலல்லாது, முதல் முதல் வனங்களிலேற்பட்டன. அது ஆதியில் விசேஷமாய் விருத்தியடைந்த விடம், மனிதர்கள் ஒருவரோடொருவர் இடித்து நெருங்கி வசித்த இடமல்ல. அவ்விடத்திலோ மரங்களும், கொடிகளும், நதிகளும் தடாகங்களும், மனிதனுடன் நெருங்கிப்பழகின. திறந்த வெளியில் நெருக்க ஒடுக்கமின்றி மனிதரிருந்தனர். ஆயினும், பறந்த வெளியிலிருப்பதனால் இந்தியாவில் ஹிருதயம் மந்தத்தை யடையாமல், ஓர் அற்புதமான விகாஸத்தை யடைந்தது. உலகத்தில் வேறோரிடத்திலும் இவ்வாறு நிகழ்ந்ததில்லை.

வேறு தேசங்களில், காடுகளில் வசிப்பவர்கள் தமது வாசஸ்தான விசேஷத்தால் காட்டுத்தன்மையை யடைந்திருக்கிறார்கள். புலிகள் போல் முரட்டுக் கொடியர்களாகவோ அல்லது மான்கள்போல் மந்த புத்தி யுடையவர்களாகவோ இருக்கிறார்கள். ஆனால் பண்டைக் காலத்தில் இந்தியாவிலோ, காட்டில் தனிமையாய் வசிப்பதனால் மனிதனது அறிவு மழுங்கி அழியாமல், அந்த வனஸ்தலங்களிலிருந்து ஆரியர் நாகரிகம் வெள்ளமாய் வெளியோடி, இந்தியா முழுவதையும் செழிப்பித்து, இன்றும் குறைவிலாப் பிரவாஹத்துடன் பரவிக்கொண்டிருக்கிறது.

வனவாஸிகளாலமைக்கப்பட்ட இந்தியர் நாகரிகத்தின் விசேஷசக்தி வெளித் தூண்டுதலாலுண்டானதல்ல. மனிதன் தனது சௌக்கியத்திற்காகப் புதிது புதிதான சௌகரியங்களையும், வெவ்வேறு விதமான பதார்த்தங்களையும் தேடவும் பண்ணவும் எத்தனித்ததால் அந்நாகரிகம் வளரவில்லை. ஆதலால் அது முக்கியமாய் வெளிப்பிரபஞ்சத்தை நோக்கினதன்று. அகாதமான இப்பிரபஞ்சத்தை அது தன் தியானத்தால் ஆழப்புகுந்து பார்த்தது. வெளியில் தெரியும் பிரபஞ்சத்திற்கும் மனிதனது ஆத்மாவுக்குமுள்ள ஒற்றுமையை அது திரக்கண்டறிந்தது. இந்திய நாகரிகமானது பெரும்பாலும் பொருட்பெருக்க முண்டாக்கும் வழிகளில் செல்லாததற்கு இதுவே காரணம். இந்நாகரிகத்திற்காதி காரணமாயிருந்தோர், அற்பவுடைதரித்துத் தனியே வசித்துவந்த தபோதனர்கள். கடலையே தம் நிலையாக வுடைய ஜாதியார் (ஆங்கிலேயர்கள்) வியாபாரத்தில் வலுத்தனர்.

பசிதீரப் பாலுதவாப் பாலைவனத் தாயின் மக்கள்(அரபியர்கள்) பல நாடுகளையும் வென்று சென்றனர். ஆங்காங்குள்ள வர்த்தமான பேதங்களால் மனிதனுடைய முயற்சி ஒரோரிடத்தில் ஒரொரு தனி வழியைத் தொடர்ந்து சென்றிருக்கிறது.

வட இந்தியாவிலுள்ள அடர்ந்த வனங்களால் நம் தேசத்திற்கு ஒரு விசேஷ நன்மையுண்டாயிற்று. அவ்வனங்களில்தான் ஆரியர்கள் இப்பிரபஞ்சத்தின் இரகசியத்தை ஆழ்ந்து பார்த்து அறிந்தார்கள். மனோவாக்குகளினெல்லைக்கு மப்பாலுள்ள தீவுகளிலிருந்து ஆரியர்கள் தமது புத்தி சக்தியால் கொணர்ந்த நிதியின் பெருமையை மனித ஜாதியார் அனைவருமே கொண்டாடவேண்டும். வனங்களில் தியானபரர்களாய் வசித்த ரிஷிகள், இரவிலும் பகலிலும், மாறிமாறிவரும் பருவங்களிலும், சிருஷ்டியின் உயிரையும் இபக்கத்தையும் காட்டும் மரங்களிலும்—தங்களைச் சுற்றியுள்ள பிரபஞ்சக் காட்சி முழுதிலும், இனியதும், தெளிய முடியாததுமான ஒரு ரஹஸ்ய மிருப்பதாக உணர்ந்தனர். அதனாலேயே, "இருக்கு மனைத்தும் ப்ரம்மத்தினிடமிருந்தே. நமது அந்தராத்மாவாய் இயங்குவதும் அதுவே" என்று சொல்லலானார்கள். மண்ணாலும் கல்லாலும் கட்டின குறுகலிடத்தில் அடைப்பட்டு வசிக்காது, விஸ்தாரமான வெளியில், அகண்டமான பிரபஞ்ச வாழ்விற்கிடையே தாங்களும் வசித்தார்கள். இருக்கநிழலும், புசிக்கப்பழமும், பூவும் விறகும், யாகத்துக்குப் புல்லும் அவ்வனமே யவர்களுக்குதவிற்று. அவர்களது தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் அவ்வனம் சம்பந்தப்பட்டிருந்தது. இவ்வாறேயவர்கள் தம் வாழ்க்கையுடன் இவ்வகன்ற பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் ஒற்றுமைப்படுத்த அறிந்தார்கள். தம்மைச் சூழ்ந்துள்ள பிரபஞ்சம் அறிவற்றதும் ஆதாரமற்றதுமாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இபற்கையிற் கிடைக்கும் வேரும், உணவும் நீரும், பூமியிலிருந்தாவது மரங்களிலிருந்தாவது ஆகாசத்திலிருந்தாவது வந்ததாக அவர்கள் நினைக்கவில்லை. அவையனைத்தும் ஸச்சிதானந்தஸ்வரூபியாயிருக்கும் ஒரு வஸ்துவி னிடத்திலிருந்தே உண்டாவதாகக் கொண்டார்கள். ஆதலால்தான் சுவாஸம் விடுவதிலும் அன்னபானாதிகளிலுங்கூடத் தம் கருத்துங் கவனமும் செலுத்தினார்கள். ஆத்மாவுக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள நெருங்கின சம்பந்தத்தை திடப்படுத்திக்கொண்டே ஆரியர் ஞானம் விருத்தியடைந்தது.

வேதங்களுதித்த காலத்திலும், புத்த மதம் பரவின காலத்திலும் அரண்யத்திலேயே ஆரியர் ஞானம் செழித்தது. வேதங்களோதின ரிஷிகள் மாத்திரமல்ல, புத்தருங்கூடத் தமது உபதேசங்களை மாஞ்சோலைகளிலும் மூங்கிற் றோப்புகளிலேயுமே பொழிந்தனர்.

பின்பு காலஞ்செல்லச் செல்ல, இந்தியாவில் ராஜ்யங்களும் நகரங்களும் உண்டாயின. அந்நிய நாடுகளுடன் வியாபாரமும் ஏற்பட்டது. உழவினர் பெருத்து வயல்கள் விரிய விரிய, அடர்ந்த வனங்களும் வரவரப் பின்னிட்டுக் குறுகின. ஆனால் வன்ங்களிலிருந்து வெளிவந்த ஞானத்தை இந்தியர்கள் ஒருநாளும் மறந்தனரல்லர். மற்றெல்லாத் தொழில்களினுந் தவஞ்செய்தலே மேற்பட்டதென எண்ணினார்கள். இந்திய அரசர்களும் சக்கரவர்த்திகளும் பண்டைக்காலத்தில் காட்டில் வசித்த முனிவர்களையே தமது கூடஸ்தர்களாகக் கொண்டு பெருமை யடைந்தார்கள். இந்தியாவில் அற்புதமும் பெருமையும், மேன்மையுந் தூய்மையும் பொருந்தின எதுவும் ஆதிகாலத்தாச்சிரமங்களினின்றே உதயமாயின; மனுஷ்ய கோடிகளுள் இந்தியாது விசேஷம் இதிலேயே அமைந்திருக்கிறது.

உஜ்ஜயினீநகரத்தில் விக்கிரமாதித்தன் அரசு புரிந்து, காளிதாஸன் கவியாயிருந்த சமயத்தில் வனஸ்தலங்கள் விசேஷம் பெற்றிருந்த காலம் போய்விட்டது. அப்பொழுது பல்வகைச் சாதியாரும் நம்மைச் சூழ்ந்தனர்; சீனர்கள் ஹூணர்கள், ஸிதியர்கள், பாரசிகர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் அனைவரும் இந்தியாவில் கூடினர். தன் கையாலேயே நிலமுழுது, தூரதேசத்திலிருந்து வருபவர்களுக்கு பிரம்மஞானம் உபதேசித்தவரான ஜனகர் போன்ற அரசன் அப்பொழுது இருந்திருக்க முடியாது' ஆனால் அக்காலத்தில் வசித்த மஹாகவியின் காவியங்களில் ஆசிரமவர்ணனைகளை நோக்குங்கால், இந்தியாவில் ஐசுவரியம் பொங்கித் திமிர்த்த அச்சமயத்தில்கூட, ஆச்ரமவாஸப பெருமை அனுபோக நடையிலில்லா விட்டாலும்

மனிதர் மனதை விட்டகலவில்லையெனத் தெரிகிறது.

காளிதாஸனது ஆசிரமவர்ணனை யொன்றிலிருந்தே, இந்தியாவின் மர்மத்தைக் காட்டும் கவி அவரே என்று விளங்கும். அவ்விதம் பூரித்துப் பொங்கும் களிப்புடன் வேறெவர்தான் அப்பொலிவை வர்ணித்திருக்கின்றனர்?

ரகுவம்ச மஹாகாவியத்தின் ஆரம்பத்தில், திரையைத்தூக்கினவுடனே முதலில் காண்பது சாந்தமும் இனிமையும் சுசியும் பொருந்தின ஓராசிரமக் காட்சி.

(அப்பொழுது சாயங்காலம்). அடுத்த வனத்தில் தர்ப்பையும், விறகும், பழங்களும் சேகரித்துக்கொண்டு ஆசிரமங்களுக்குத் திரும்புகிறார்கள் தபோதனர்கள். ரிஷி பத்தினிகளுக்குக் குழந்தைகள்போலுமுள்ள மான்கள், தமக்கு முன் இடப்பட்ட தானியத்தைக் கடித்துக்கொண்டு பயஞ்சிறிதுமின்றி ஆசிரமவாசற்படிகளில் படுத்துக்கிடக்கின்றன. முனிவர்களுடைய பெண்கள் மரங்களடியில் நீர் வார்த்துக்கொண்டிருக்கின்றனர்; பாத்திகள் நிரம்பியதும், ஜலத்தை நெருங்கும் பறவைகள் பயமின்றிப் பருகுமாறு ஒதுங்கி நிற்கின்றனர். சூரியன் இறங்கிக்கொண்டிருக்கிறான்; முற்றத்தில் தானியம் குவிந்திருக்கிறது; மான்கள் சாய்ந்துகொண்டு அசைபோட்டுக்கொண்டிருக்கின்றன. ஹோமப்புகையால் நறுமணம் வீசும் காற்று ஆசிரமத்தினுள் நுழையும் அதிதிகளைப் புனிதமாக்குகிறது. மனிதனது வியாபாரங்களும் வெளிச்சிருஷ்டியின் இயக்கங்களும் ஒத்திருப்பதே இக்காட்சியின் வனப்பு.

அபிக்ஞான சாகுந்தல நாடகத்தில், சிற்றின்ப நாட்டம் நிறைந்திருக்கும் அரசனது அரண்மனையையும் பழிக்கும் ஆசிரமமொன்று நிர்மிக்கப்பட்டிருக்கிறது. அந்நாடகத்திலும் உண்மையான ரஸம் உயிருள்ளதும் அற்றதுமான வெளிப்பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தமும் ஒற்றுமையுமே.

காதம்பரீ காவியத்திலுள்ள ஆசிரம வர்ணனையைப் பார்ப்போம்: காற்றினலைசையும் செடிகளும் கொடிகளும் வந்தனைவழிபாடுகள் செய்வதுபோலிருக்கின்றன—மரங்கள் பக்தியால் அர்ப்பணம் செய்வதுபோல் இலைகளை யுதிர்க்கின்றன—பர்ணசாலைகளின் வெளிப்புறங்களில் உலரும் தானியம் பரந்திருக்கின்றது—பிராம்மணப்பையன்கள் பாடங்களோதுங் கோஷத்தால் வனப் பிரதேசங்கள் எதிரொலி யிடுகின்றன—அடிக்கடி கேட்ட யாக மந்திரங்களைக் கிளிகள் களிப்புடன் கூவுகின்றன—பூதங்களுக்கிட்ட பலி பிண்டத்தைக் காட்டுப்பறவைகள் கொத்துகின்றன—பூஜையானபின் இரைக்கப்பட்ட நீவாரதானியத்தை வாத்துக்கள் அடுத்த குளத்திலிருந்து வந்துபொறுக்குகின்றன—ரிஷிகுமாரர்கள்மேல் மான்கள் ஸ்வாரஸ்யமாக நக்கிக்கொண்டிருக்கின்றன.

இங்கும் உட்கருத்து அதுவே: செடிகளும் கொடிகளும், மிருகங்களும் பறவைகளும், மனிதனின்றும் பிரிந்திராமல், ஆசிரமவாஸத்தில் எல்லாம் ஒத்துச்சேர்ந்தனவாய்க் காண்கின்றன. நம்தேசத்தில் இக்கருத்து திருப்பித் திருப்பிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

S. மஹாலிங்கமய்யர், பி. ஏ., பி. எல்.

## வரதக்ஷிணை

### VARA DAKSHINA

பெண்ணைப் பெற்றவர்களெல்லாம் வருத்தப்படவும், பிள்ளையைப் பெற்றவர்களெல்லாம் களிப்படையவும் செய்யும்படியான தை, சித்திரை, வைகாசி முதலான இந்த கலியாண காலங்களில், 12-வயதுக் குட்பட்டு, கல்யாணம் செய்யப்பருவமாயிருக்கும் பெண்குழந்தைகளுடைய தாய் தகப்பன்மார்கள் படும் துயரமும், வருத்தமும் சொல்லிமுடியாது. அதிலும், கொஞ்சம் ஏழையாகவும் இருந்து அதோடு ஐந்தாறு பெண்குழந்தைகளும் இருந்து பெண்ணைக்கல்யாணம்செய்து கொடுக்கவேண்டிய வயது வந்து மாப்பிள்ளை விசாரிக்குங்கால், வரதக்ஷிணை ஆயிரம் இரண்டாயிரம் என்று இப்படி கேட்டார்களானல் அந்தோ பாவம் அவர்கள் என்ன செய்வார்கள். ஏற்கெனவே நித்தியப்படி சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, வரதக்ஷிணை எப்படிக் கொடுக்க முடியும். இதனல் அவர்கள் தங்களையும் நொந்து தங்கள் பெண்குழந்தைகளையும் நிந்திக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! ஏது மறியா இப்பெண் குழந்தைகள் என்ன செய்யும்?

(இதன் தொடர்ச்சி 247-ம் பக்கம்)

இதெல்லாம் வரதக்ஷிணையின் கொடுமையல்லவா ?

இன்னமும் இந்த வரதக்ஷிணையின் கொடுமையினல் அனேக கெடுதல்கள் நேருகின்றன. எப்படியென்ருல், ஒரு விதத்தில் ந்யாயமாக ஸம்பாதித்து தங்கள் ஜீவனத்தைக் கழிக்கிறவர்கள், தங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க வரன் விசாரிக்கையில், தங்கள் சக்தி மீறி பிள்ளை வீட்டுக்காரர்கள் வரதக்ஷிணை கேட்கிறபடியால் எப்படியாகினும் பெண் ருதுவாகிறதற்கு முன்னல் கல்யாணம் செய்யவேண்டுமே என்கிற எண்ணத்தினல் லஞ்சம் வாங்கவும், அதர்மவழியில் புகும்படியாகவும் தூண்டுகிறது.

இன்னம் சிலர் இந்த வரதக்ஷிணை கொடுக்க முடியாமல், தங்கள் பெண்ணை கிழவனுக்காகிலும் இரண்டாந்தாரமாகவோ, மூன்ருந்தாரமாகவோ கொடுக்கும்படியாகவும் நேரிடுகிறது. ஆனல்இப்படி கிழவர்களுக்கு மூன்ருந்தாரமாகவும், நாலாந்தாரமாகவும் கொடுப்பதினல், அனேக கஷ்டங்களும், கெடுதல்களும், தொந்தரவுகளும் ஏற்படுகின்றன வென்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

இந்த வரதக்ஷிணை யென்னும் கொடிய பிசாசானது, இவ்விந்தியா முழுதும் உலாவிக்கொண்டு திரிகிறது. இந்தப் பிசாசை படக்கத்தக்க மந்திரவாதிக ளில்லையா !

படித்தவர்களும், படியாதவர்களும், தனவந்தர்களும், தரித்திரர்களும் ஒன்றுபோல தங்கள் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை கேட்கிருர்கள். இந்த வரதக்ஷிணையினல் விளையும் தீங்கை அவர்கள் அறியாததினலோ, அல்லது, அறிந்துதான் கற்றறி மூடர்களைப்போல, தங்கள் பிள்ளை பிறந்து செவ்வெண்ணெயீ கொடுத்தது முதல் கணக்கிட்டுப்பார்த்து, மெட்ரிகுலேஷன் பாஸானல், ரூபாய்500 என்றும், எப்.ஏ. பாஸானல் 1000 என்றும், பீ. ஏ. பாஸானல் 2000 என்றும், இதற்குமேல் வெள்ளிப்பாத்திரம் நகை, சீர் முதலானவைகளுக்கு 2000, இப்படியாக மொத்தம் 4000, 5000 ரூபாய் கொடுத்தால்தான் தங்கள் பிள்ளைக்கு ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளமுடியும் என்று சொல்லுகிருர்கள். பெண்வீட்டுக்காரர்கள் தகுந்த ஆஸ்திவந்தர்களாயிருந்தால்தான் இப்படிக் கொடுக்க முடியும். இல்லாதவர்கள் பாபம்! என்ன செய்வார்கள்.

பிராம்மண ஜாதியில் பெண் ருதுவான பிறகு கல்யாணம் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும், இன்னம், ஏழு, அல்லது எட்டு வயதில் பெண்களை கன்னிகாதானம் செய்து கொடுத்தால்தான் பலன் உண்டு என்று சாஸ்திரம் முறையிடுகிறது என்று சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும்,வரதக்ஷிணை ரூபா 4000,5000, பிள்ளை வீட்டுக்காரர்கள் வாங்கவேண்டுமென்ருவது, பெண் வீட்டுக்காரர்கள் கொடுக்கவேண்டு மென்ருவது எந்த சாஸ்திரத்திலும், எந்த சமயத்திலும் சொல்லப்படவில்லை என்பது திண்ணம்.

மேற்கூறியபடி ருதுவானபிறகு பெண்ணுக்குக் கல்யாணம் செய்யக்கூடாது என்னும் சாஸ்திரத்தைப்பின்பற்றி நடக்கிறவர்கள்,எந்த சாஸ்திரத்திலு மில்லாததும், சாஸ்திரவிரோதமானதுமான வரதக்ஷிணை யென்னுமிந்த கொடிய வழக்கத்தைப் பின்பற்றி நடக்கலாமா?

இந்த வரதக்ஷிணை யென்னும் பிசாசானது ஒழிந்தால்தான் நம் இந்தியாவில், அதிலும் ஹிந்துக்களில், அதிலும் பிராம்மணர்களில், அதிலும் பெண்களுக்கு க்ஷேமம் உண்டாகும் என்பது திண்ணம்.

கொள்ளை யடிப்பதுபோல், சில பிள்ளைவீட்டுக்காரர்கள், பெண்வீட்டுக்காரரின் ஸ்திதி யிருப்புக்களை யறிந்தும், அவர்கள் சக்திக்கு மீறி வரதக்ஷிணை வாங்குவதினல், ஏழைகளாகவிருக்கும் பெண்ணின் தாய் தகப்பன்மார்களுக்கு, இவ்வளவு ரூபாயும் கொடுத்து பெண்ணைக் கொடுத்தோமே யென்று, பெண்ணின் மீதிருக்கும் அன்பு குறைந்து, மாப்பிள்ளையின் மீதிருக்கும் மதிப்பு குறைந்துவிடும்படியாகவும் நேரிடக்கூடும். ஆகையினல் வரதக்ஷிணை யென்னும் கொடிய வழக்கமானது, அன்பு, மதிப்பு இவைகளை குறைக்கிறதற்கு ஹேதுவாயிருப்பதினலும், நாம் அதை அவசியம் அகற்றி விலக்க வேண்டுவதல்லவா?

இந்த வரதக்ஷிணையினல் விளைந்த தீங்கு உயிருக்குக் கூட ஹானி நேரிடுகிறது. போன வருஷம், கல்கத்தாவில், 'ஸ்நேகலதாதேவி' என்ற பெண், தன் தாய் தகப்பன்மார்கள்

தன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்காக வரதக்ஷிணை கொடுக்க முடியாமல் வருத்தப் படுவதையும், அதற்காக தாங்கள் பரம்பரையாக வாழ்ந்துவந்த வீட்டை அடகு வைத்து தன்னைக் கல்யாணம் செய்து கொடுக்க யோசித்திருப்பதையும், அதனால் பிற்பாடு மேல்வரும் தீங்குகளையும் யோசித்து, ஸஹியாதவளாகி தானே தற்கொலை செய்துகொண்டாளென்பதையும், நம் ஸகோதரர்கள் யாவரும் அறிவார்கள்.

பூர்வம், 'ஸகர மஹாராஜன்' தன் ராஜ்யத்தில் குடிகளுடையவும், பிரஜைகளுடையவும் க்ஷேமத்தின் பொருட்டு, தன் பிள்ளையான, ''அஸமஞ்சன்' என்னும் தன் குமாரனை துறந்தார் என்று இராமாயணத்தில் சொல்லியிருக்கிறது.

இப்போது இவ்விந்தியமாதா, தன் பிரஜைகளுடைய க்ஷேமத்தின் பொருட்டும், ஜனங்களுக்கு புத்திவரும்படியான ஞாபகார்த்தமாகவும், 'ஸ்நேகலதா தேவி' என்ற கன்னிகையை அழைத்துக் கொண்டிருக்கிறாள். இதனால், இனிமேலாவது நம் இந்தியருக்கு உணர்ச்சி பிறந்து, 'வரதக்ஷிணை வாங்குகிறது' என்னும் கொடிய பிசாசை 'வரதக்ஷிணையே வாங்கக்கூடாது'என்னும் மஹா மந்திரத்தினால் தலையெடுக்க வொட்டாமல் அடக்க, நம் ஸகோதரர்கள் முற்படவேண்டும். அங்ஙனம் கங்கணம் கட்டிக்கொண்டு, நம் பாரத மாதாவை சந்தோஷப்படுத்துவார்களாக.

ஆனால் இவைகளெல்லாம் விருதாவில் வாய்ப்பேச்சுப் பேசுவதினாலும், சும்மா பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதினாலும் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் தங்கள் நடத்தையில் வரதக்ஷிணையே வாங்காமலும், வரதக்ஷிணை வாங்குகிறவர்களைக் கண்டித்தும், அதற்குத் தகுந்த ஓர் ஏற்பாடு செய்தும், தங்கள் அனுபவத்தில் காண்பிக்கவேண்டும்.

போனவருஷம் ஸ்நேகலதாவின் தற்கொலையானதோடு, நாலைந்து கன்னிகைகளின் தற்கொலை நடந்ததென்பது நம் ஸகோதரர்கள் யாவரும் அறிந்தவிஷயம். அந்தத்தற்கொலைக்கு காரணம் வரதக்ஷிணையின் கொடுமையினால் ஏற்பட்டதென்பதையும் நம் ஸகோதரர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் அப்பொழுது, எங்கு பார்த்தாலும், யாவரும் ஒன்றுகூடி கன்னிகைகளின் தற்கொலையைப்பற்றி வருந்தியும், அதற்கு காரணமாயிருக்கும் வரதக்ஷிணையைப்பற்றி வெறுத்தும், பத்திரிகைகளி லெல்லாம் இதைப்பற்றியே எழுதுவதும், வரதக்ஷிணை வாங்குகிறவர்களைக் கண்டித்துப் பேசியும், குறைவாகக் கூறியும், இப்படியாக இந்தியாமுழுதும் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுதோ அந்தப் பேச்சும், வரதக்ஷிணையைப்பற்றின ஸமாசாரமும், அடியோடு மறைந்து விட்டதுபோல் காண்கிறது. இப்பொழுதெல்லாம் யுத்தத்தைப் (War) பற்றிய பேச்சும், அதை ஸம்பந்தித்த ஸமாசாரங்களுமாகவேயிருக்கிறது. இன்னமும், இந்த யுத்தம், எப்பொழுது முடியுமோ வென்று யாவரும் எதிர்பார்த்துக் கொண்டு மிருக்கிறார்கள். ஆனால் இந்த யுத்தம், இன்றைக்கோ, நாளைக்கோ, அல்லது இன்னம் ஒருவருஷமோ, அல்லது மூன்று வருஷமோ கழிந்தாகிலும், முடிவடைந்து தேசத்திற்கு நன்மை பிறக்குமென்ற நம்பிக்கையுண்டு. ஆனால் இந்த வரதக்ஷிணையின் கொடுமையடங்கி, முடிவடைந்து நம் தேசத்திற்கு நன்மை பிறக்கு மென்பதாக யாதொரு நம்பிக்கையுமில்லையே?

ஸகோதரர்காள்! ஏன் இன்னமும் தூங்குகிறீர்கள். விழித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஸகோதரிகளாகிய கன்னிகைகளின் வரதக்ஷிணையினால் விளையக்கூடிய, தற்கொலையை தடுத்துக் கொள்ளுங்கள். கல்யாணகாலமாகிய தைமாஸமும், அதற்கடுத்தாற்போல் இரண்டு மாஸம் கழித்து சித்திரை, வைகாசி முதலான மாஸங்களும் வரப்போகின்றன. போனவருஷத்தைப் போல இந்தத் தடவையும், வரதக்ஷிணையினால் ஏற்படக்கூடிய தற்கொலைகள் நடவாமல் கன்னிகைகளைக் காத்து, ஏழைகளாக இருந்து வரதக்ஷிணை கொடுக்கச் சக்தியற்றிருக்கும் குடும்பத்தினருடைய மனவருத்தத்தைப் போக்குங்கள். நம் இந்திய மாதாவை திருப்திப் படுத்தி அவள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அலமேலு அம்மாள்.

# ஐரோப்பிய யுத்தம்

## நவாப்ஸா அல்லது பக்கிரிஸா

## THE EUROPEAN WAR: Now or never

இந்த யுத்தம் ஐரோப்பிய நாடுகளின் உயிர்நிலையின் வன்மையைப் பரிசோதிக்க ஏற்பட்டதுபோல் காண்கிறது. இதில் கைகலந்த ஸகல ராஜ்யங்களும் தத்தம் உயிரைக் காத்துக் கொள்வதற்கே பிரயத்னப்படுகின்றன என்றும், இதில் அபஜயமடைந்தால் ஸாகராதிபத்யம் முதலிய பல ஸாம்ராஜ்யங்களையும் இழக்க நேரிடும் என்ற அபாயத்தைக் கருதியே "ப்ரிடன்" முனைந்து போரிடவேண்டிய தவச்யம் என்றும் 'போதினி'யில் நண்பர்கள் வாசித்திருக்கலாம். ஆனால் இவ்வாறு ஜெர்மனியிடம் பயமடைவது பழுதையைப் பாம்பென மதித்து வெருள்வது போல்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுவதைக் காணலாம். உயிர்ச்சேதம், திரவிய நஷ்டம், இவை நேருவது வாஸ்தவந்தான். அவ்வளவு மட்டில்தான் பயப்பட இடமேயொழிய இங்கிலாந்தை ஜெர்மனி அழிப்பது என்பது கூடாத காரியம் என்றும், கனகமயமான புறச்சுவர்களையும் அகழிகளையும் பாதுகாப்பிற் கடைந்திருந்த இலங்காபுரியைப்போல் ஸமுத்திர மத்தியில் விளங்கும் "ப்ரிடனை" ஜெர்மானியர் வசப்படுத்திவிடுவர் என்று கலங்குவது வீண் பேதமை என்றும் கக்ஷி தொடுக்கிறார்கள். "இங்கிலாந்தின்" கப்பற்படையை வென்றபின்னல்லவா அதை தம்மாதீனமாக்குவது? அது முடியுங் காரியமா? என்றெண்ணுகிறார்கள். இக்கக்ஷியில் உள்ள உண்மையையும், இந்த யுத்தத்தில் ப்ரிடனுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தையும் சற்று விசாரிப்போம்.

ஜப்பான் தேசத்து தெய்வஜ்ஞர் ஒருவர் கூறியுள்ள "ஜோஸ்யம்" நண்பர்களறிந்திருக்கலாம். அதில் நாமிங்கு கவனிக்கவேண்டியது ஒரு பாகமே. இறுதியில் இச்சண்டை "ப்ரிடனுக்கும்" "ஜெர்மனிக்கு" மட்டிலுமே, மிக்க கொடுமையாயும் மும்மரமாயும் மூண்டுகொள்ளும்" என்று கூறியிருக்கிறார். யுத்தாரம்பத்திற் காதாரமாயுள்ள நாடுகளையெல்லாம்விட்டு, இவ்விரு நாடுகள் மட்டும் இவ்விதங் கடும்போர் புரிய நேரிடவேண்டிய அவசியமென்ன என்று பார்த்தால் இவ்விரு தேசங்களுக்குமுள்ள விரோதமே காரணமென்பது வெளியாகும்.

பல காரணங்களை முன்னிட்டு "ஜெர்மனிக்கு" "ப்ரிடன்" மேல் அளவுமீறிய பகையுண்டென்று முன்பே கூறினோம். ஜெர்மனியில் ஒருவர்க்கல்ல, இருவர்க்கல்ல—ஜனங்களின் பெரும்பாகத்திற்கும் இந்த ஒரே நோக்கந்தான் உள்ளது. தத்காலம் ஜெர்மனியில் பிரசுரமாகும் பத்திரிகைகளை வாசித்தால் இப்பெரும் பகையின் கடுமை நண்பர்களுக்குத் தெரியும். ஐரோப்பிய வியவகாரங்களில் தேர்ச்சியுள்ள சிலர் இங்கிலாந்தின் கொட்டத்தை யடக்குவதற்கென்றால், என்ன வேண்டுமானாலும் ஜெர்மனி செய்யத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு நல்வழிமட்டும் ஏற்பட்டால் "பிரான்ஸுடன் ஸமாதானஞ் செய்யத் தடையொன்றுமில்லை. "ஆல்ஸேஸ்" மாகாணத்தைத் திருப்பிக் கொடுத்தாலொழிய ஸமாதானத்திற்கு உடன்பட "பிரான்ஸ்" ஸம்மதிக்கவில்லையா? ஸரி, "ஆல்ஸேஸ்" அவர்களிடம் ஒப்புவிக்கப்படட்டும். ரஷ்யர்கள் துருக்கியின் மாகாணங்களிற் சிலவற்றை யபேக்ஷிக்கிறார்களா? அவர்கள் இஷ்டம்போல் செய்துகொள்ளட்டும். எது எப்படிப்போனபொழுதிலும் ஸரி, இங்கிலாந்து ஒழிந்தால் போதும், மற்ற வியவகாரங்களைப் பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று எவ்வகையாலும் ப்ரிடனைத் தலையெடுக்கவொட்டாமற் செய்துவிட இயற்கையாகவே ஜெர்மானியருக்கு மிக்க ஆவலுண்டு. போதாக்குறைக்கு இந்த யுத்தத்தில் இங்கிலீஷ் படையினிடம் தாங்களடைந்த அபஜயமும், பராபவமும் அவர்கள் மனதில் உறுத்திக்கொண்டேயிருக்கின்றன. எப்பாடுபட்டோ பழிக்குப்பழி வாங்கிவிட வேண்டுமென்று 'கறுவி'க் கொண்டிருக்கின்றனர். இந்த ஸந்தியில் யுத்தத்தில் அவர்களுக்கு வெற்றியுண்டாகும் பக்ஷத்தில் அவர்கள் முதன் முயற்சி என்னவாயிருக்கும் என்று சிரமமில்லாமல் நண்பர்கள் ஊஹித்துக்கொள்ளலாம்.

அவ்வாறு ஜெர்மனி வெற்றிபெற்றாலும் இங்கிலாந்திற்கு பயத்திற்கு சிறிதும் ஹேதுவில்லை. எதிரியின் கர்வத்தை யடக்கமாட்டா

மற் போனது கீர்த்தி ஹானிதான்; துணைவரான ஐரோப்பிய நாடுகள்பாடு கஷ்டந்தான். ஆனால் 'ப்ரிடனுக்குமட்டில் ஒரு ஊனமுமில்லை. ஸமுத்ர மத்தியில் ஒரு தீவு. தரைப் படையைக் கொண்டு திடீரெனத் தகைந்துவிடலாமென்பது கூடாத காரியம். ப்ரிடனை வெல்வதென்றால் பலம் மிகுந்த கப்பற்படையொன்றினாலேயே முடியும். அதற்கு எதிர்க்கவோ பலமுள்ள போர்க் கப்பற்படை கைவசமுளது. இன்னமும் விருத்தி செய்யப்படும். அவ்வாறிருக்க நாமேன் பயப்படவேண்டும்.? இந்த மஹாயுத்தத்தில் ஜெர்மன் கப்பல் ஸைன்யம் நம் ஸைன்யத்துடன் நேரிடப் போர்புரிய முடியாது போனது நமது படையின் பராக்ரமத்தைக் காண்பிக்கவில்லையா? மேலும், எவ்வளவோ யுத்தங்களில் "ப்ரிடன்" அகப்பட்டும், தன் கப்பற்படையைக் கொண்டு ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்றிருக்கவில்லையா? அவ்விதமாயின் இச்சமயம் மட்டும் ஜெர்மானியர் ஜெயித்தால் என்ன செய்வது என்று 'ஒருக்கால் பிரஸவித்தாய்' *என்ற கதையாகச் சொல்வதில் என்ன விசேஷம்" என்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். இவ்வாக்ஷேபத்திற்குத் தகுந்த ஸமாதானங்களைக் காட்டி, இப்பொழுது ப்ரிடன் ஜெர்மனியை அடக்க முயல வேண்டிய ஆவச்யகத்தை விளங்குவோம்.

நுட்பமாக கவனிக்குங்கால் இவ்வாக்ஷேபங்கள் எல்லாம் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் உண்மையாயிருந்திருக்குமேயன்றி இப்பொழுதைய வியவஹாரங்களுக்குப் பொருந்தா என்பது விளங்கும். முன்

* ஓர் விதவை தன் மகனுக்கு மிக்க செல்வங் கொடுத்து வளர்த்து ஒன்றிற்கு முதவாக் கசடனாக்கி வந்தனள். ஒருநாள் அப்புத்ர சிகாமணியிடங் காலணா கொடுத்து வயிற்று நோவிற்கு சுக்கு வாங்க அனுப்ப, அம்மூட சிரோமணி, காலணாவிற்கு வெள்ளைப் பூண்டு வாங்கிவந்து சேர்த்தனன். வயிறெறிந்த விதவை அப்பூண்டென்னத்திற்கெனக் கேட்க, 'நீ ஒருக்கால் பிரஸவித்தால் உபயோகப்படுமல்லவா?' என்றான் புத்ரன். "அடே மடையா, நான் விதவையல்லவா, நான் பிரஸவிப்பதேது" எனக் கடிதலும், பையன் "ஆமாம், எனக்கதுதெரியாதா? இருந்தாலும் ஒருக்கால் பிரஸவித்தாய். இருக்கட்டுமே "பூண்டு" என்று என்ன சொன்னாலும் "ஒருக்கால் பிரஸவித்தாய்" என்று சொல்லியே வர, அவனை அடித்து வெருட்டியதாக ஒரு கதையுண்டு.

காலங்களில் கப்பல் ஸைன்யமென்பது அபூர்வமாயிருந்தது. ப்ரிடன் மட்டில் வெகுகாலந் தொடங்கி அவ்விஷயத்திற் சிறந்து விளங்கவே அதை யெதிர்க்கும் ராஜ்யமே இல்லாதிருந்தது. அக்காலங்களில் யுத்தம் நேரிட்ட ஸமயங்களிலெல்லாம் ப்ரிடிஷ் கப்பற்படை கண்டவிடமெல்லாம் மனம் போனபடி சென்று எதிரியின் நகரங்களையும் கப்பல்களையும் தீக்கிரையிட்டும் சூறையாடியும் வருவது வழக்கம். அத்துணிவுகரமான செயல்களினால் ராஜ்யத்திற்குப் பயப்பட ஹேதுவே கிடையாது. அஞ்சா நெஞ்சம் படைத்த "ட்ரேக்," "ஹாக்கின்ஸ்" போன்ற வீரர்கள் சென்று பகைவருக்குச் சேதம் விளைத்தால் மிகக் கொண்டாட்டந்தான். இல்லாவிட்டாலும், அவ்வீரர்களின் கதிக்காக சிறிது துக்கப்படுவதைத் தவிர்த்து வேறு ப்ரிடிஷ் ராஜ்யத்திற்கு யாதொரு கெடுதியும் ஸ்வப்நத்திலுமில்லை. அதை யெதிர்க்க வல்ல கப்பல் ஸேனையே கிடையாது.

இவ்வாறிருந்ததால் இங்கிலாந்திற்கு நிர்ப்பயமாயிருந்தது. ஒருவரு மணுகாத ஸாகர மத்தியில் அமைந்திருப்பதே அகண்டாதிபத்திற்கு அநுகூலமென்றும் அறிகுறி என்றுங் கருதப்பட்டு வந்தது. ஆனால் தத்காலத்திலோ அவ்விதம் மதோன்மத்தமாய் எதிரிகளை பிள்ளைப்பூச்சிகளாக எண்ணி யிகழ இடமில்லை. காரணமென்னவெனிலோ, ப்ரிடனின் பூர்வ ஸாகராதிபத்யத்திற்கும் தத்கால ஆதிபத்யத்திற்கும் உள்ள வித்யாஸந்தான். அது எத்தன்மையது என்று சிறிது சுருக்கிக்கூறுவோம்.

சென்ற நூற்றாண்டின் இறுதிமுதல் அநேக புதுவகையான சக்தி பேதங்களும், அவை பாதாரமாகக் கொண்டு செய்யப்படும் பலவித யந்த்ரங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், கப்பல்களின் உபயோகத்தையும் ஸாவதானத்தையும் முன்னிருந்ததைவிட மிகக் குறைத்துவிட்டன. 17, 18, 19, ஆவது நூற்றாண்டுகளில் போர்க்கலங்களென்றால், அவைகளின் ஸமீபத்தில் எதிரி நெருங்கத் துணிவதில்லை. போர்ப்படையின் ஸமூகம் ஒன்று வருகிறதென்றால் "திகில்" தான். ஆகவே விஸ்தீர்ணமான ராஜ்யத்தை யடைந்து பாதுகாத்து அநுபவிப்பதற்கு கப்பற்படையே சிறந்த ஸாதனமாய் வழங்கிற்று. உதாரண

மாக, இங்கிலாந்தையும், இந்தியாவையும் எடுத்துக்கொள்வோம். பண்டமாற்றிற்கும், ஸமாசாரப் போக்குவரவிற்கும், உத்யோகஸ்தர்கள் சென்று மீள்வதற்கும், கஷ்டம்நேர்ந்த ஸமயங்களில்வேண்டிய பந்தோபஸ்து செய்வதற்கும், பலமிகுந்த கப்பல்கள் இருந்தாலல்லவா தடுப்பாரின்றி ஸ்வாதந்திரியத்துடன் போகவர இயலும்? சில மார்க்கமாய்ப் போவதென்றால் பல ராஜ்யங்களின் தயவும் அனுமதியும் வேண்டும். கஷ்டம்நேர்ந்த தருணங்களில் ஆபத்தாய்வந்து முடியும். ஆகையினால்தான் தூரதேசங்களில் ராஜ்யங்களையுடைய நாடு கப்பற்படையின் வலிமிக்குடையதா யிருத்தல் வேண்டும் என்று சரித்திர ஆராய்ச்சி செய்வோர் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஆனால் இப்பொழுதோ என்றால், கப்பற்படையை பிரயோசனமற்ற தாக்குவதோடுகூட, அதை ஹதம் செய்வதற்குமான பலவகை ஸாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. ஜலமட்டத்திற்கு கீழ்ச்செல்லும் "ஸப்மெரீன்" என்னும் கப்பலும், பகைவருக்கு யமரூபியாயுள்ள டார்பிடோ, வெடிசுரங்கங்கள்போலுள்ள சக்திகளும் ஏற்பட்டு, ஒருக்ஷணம் மிகுந்த இறுமாப்புடன் வந்துகொண்டிருந்த கப்பல் மறுக்ஷணம் காற்றில் தூள்தூளாய் பறக்கும்படி செய்ய வாரம்பித்துவிட்டன என்றால், கப்பற்படை முன்னிருந்ததைப்போல் அவ்வளவு உறுதியான ஊன்றுகோலாகமாட்டாதென்பது புலப்படவில்லையா?

மேலும் கம்பியில்லாத் தந்தி முதலிய ஸாதனங்களேற்பட்டபிறகு ஸமாசாரப் போக்குவரவிற்கும் கப்பல்களின் உபயோகம் மிகக் குறைந்துவிட்டது. ஆகவே கப்பலின் சக்தி ஒன்றையே நம்பியிருப்பது மண்குதிரையை நம்பி ஆற்றி லிறங்கியதுபோலத்தான். இந்த யுத்தத்தின் கடற்போரை எடுத்துக்கொள்வோம். ஜெர்மன் படையைவிட இங்கிலீஷ் கப்பற்படை சிறந்ததென்பதற் கையமில்லை. ஆயின் ஏன் ஜெர்மனியின் ஸைன்யத்தைத் தேடிப்பிடித்து நாசம்செய்ய முடியவில்லை? ஏனெனில், முன் காலம்போலல்லாது டார்பிடோ, சுரங்கங்கள் முதலிய பலவித அபாயகரமான இடையூறுகளை ஜெர்மனி குறுக்கிட்டிருப்பதனால்தான். மேலும் முன்காலங்களில், இங்கிலீஷ் கால்வாயில் அடிவைக்கத் துணிபவர் கிடையாது. இப்பொழுதோ "டோவர்" ஸந்தியில் ஜெர்மன் ஸப்மெரீன்கள் வந்து இங்கிலீஷ் கப்பல்களை அழிக்க ஆரம்பிக்கின்றன. ஜெர்மன் "க்ரூய்ஸர்"கள் தைரியத்துடன் இங்கிலாந்திலுள்ள "யார்மத்" (Yarmouth) என்னும் பட்டணத்தின் துறைமுகங்களில் குண்டுகளை வீசியெறிகின்றன என்றால் முன்பிருந்த ஸாகராதிபத்தியத்தின் அர்த்தத்திற்கும், இப்பொழுதுள்ள கடலாட்சிக்குமுள்ள பேதம் ஒருவாறு புலப்படுகிறதல்லவா?

போதாக்குறைக்கு ஜலமத்தியி லிருந்ததா லுண்டாகும் ஸாவதானமும் வரவரக் குறைந்துவிட்டது. முன்போ, தண்ணீர் மீதேதான் சென்று இங்கிலாந்தை வெல்ல முயலவேண்டும். கப்பற்படையின் பாதுகாப்புள்ள ராஜ்யத்தை அவ்விதம் ஜயிப்பது சிரமஸாத்யம். இப்பொழுதோ, பலவகையான ஆகாயக் கப்பல்கள் உதவிக்கு வந்துவிட்டன. பிருகிருதம் நிகழும் யுத்தத்தில் விமானங்களால் எவ்வளவு ஸாதகமேற்படக்கூடுமென்பது தெரிந்துவிட்டது. ஜெர்மனியிலோ விமான சாலைகள் நிருமித்து விமானங்கள் கட்டியவண்ணமா யிருக்கிறார்கள். ஆகவே கேவலம் ஜலமத்தியி லிருப்பதே போதுமான ஸாவதானமென்ற எண்ணத்திற்கு மிடமில்லாது போய்விட்டது.

ஆனால் ஸெப்லின்(Zepplin) படையொன்று தயார்செய்து ககனமார்க்கமாக இங்கிலாந்தைத் தாக்கலாம் என்று சொல்ல வரவில்லை. அது அவ்வளவு ஸுலபஸாத்தியமானதன்று. என்றாலும் வருங் காலத்தை யாரால் வரையறுக்க முடியும்? எக்காலம் எதுவருமென்று யார் நிஷ்கரிஷையாய்ச் சொல்லக்கூடும்? இந்த ஐரோப்பிய யுத்தத்தில்மட்டும் ஜெர்மானியர் ஜயமடைந்துவிட்டால், வருஷம் 30 அல்ல 40 அல்ல, தங்கள் முழுபலத்தையும் இங்கிலாந்தை யழிப்பதென்ற ஒரு காரியத்திற்கே செலவிடுவர். அப்படியாயின் எவ்வளவு சிரமஸாத்தியமாயினும் கடைசியில் அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும் என்றபடி, எடுத்த காரியத்தை ஸாதித்தாலும் ஸாதிக்கலாம்.

ஆனால் இவ்வளவு பிரயத்னங்கள் ஜெர்மனி செய்வதென்றால், ப்ரிடன் மட்டும் சும்மாவிருக்குமா? அவர்கள் செய்யும் பிரயத்னங்களைக் காட்டிலும் பதின்மடங் கதிகமாகச் செய்யாமலிருக்கப் பைத்தியமா? என்ன ஆக்ஷேபம்?

வேண்டிய ஸாமர்த்தியம், அநுகாரணமாதிப எதில் குறைவு? என்ற கேள்வி பிறக்கலாம். வாஸ்தவந்தான். ஆனால் இந்த யுத்தத்தில் ஜெர்மனி ஜயமடையுமானால் ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் தற்காலமுள்ள பலாபலம் எப்படி மாறிவிடுமென்பதை சற்று ஆராய்ந்து நோக்கவேண்டும். பலவகையிலும் பலங்குன்றி பிரான்ஸ் ஜெர்மன் சக்திக்குட்பட்டு அதன் வாக்கிற்கு எதிர்வார்த்தை சொல்ல முடியாத பலஹீனஸ்திதிக்கு வந்துவிடும். அதன் இங்கிலீஷ் கால்வாயிலுள்ள துறைமுகங்களை யெல்லாம் ஜெர்மனி தன்னுசீனத்திற் கொண்டு வைத்துவிடும். பொதுநாடாகிய பெல்ஜியமோ ஜெர்மன் ராஜ்யத்தின் ஓர்பாகமாக்கப்படுமென்பதில் ஸந்தேகமில்லை. பிறகு "ஹாலண்ட்" எந்தமூலை? "ஷெல்ட்" நதியை யாக்ரமித்து, "ஆண்ட்வர்ப்," "கலே," "டன்கர்க்" முதலிய முக்கியமான இடங்களை பலப்படுத்தி, ப்ரிடனின் அழிவிற்கு மூலஸ்தானங்களாக்கிவிடுவார்கள். எவ்வித உபாயத்தாலோ, ஐரோப்பிய நாடுகளில் ஒன்றும் ப்ரிடனைச்சேராத வழியையுந் தேடிவிடுவார்கள். பிறகு மகாபலம்பொருந்திய பெரிய ராணுவராஜ்யங்களாய் விளங்கி, ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும், எப்பாடுபட்டும், எவ்வளவு காலமாயும், ப்ரிடன்மேல் தங்களுக்குள்ள க்ஷாத்ரத்தைத் தீர்த்துக்கொள்வார்கள்.

இங்கிலாந்தும் வேண்டிய ஆயத்தங்கள் செய்வதாயிருப்பினும், ஜயமடைந்த ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் வெகு தூரமாய் விடும். இங்கிலீஷை மாத்ருபாஷையாகவுடைய ஜனங்களின் தொகை $5\frac{3}{4}$ கோடி. ஜெர்மானியரின் தொகையோ 12 கோடி. என்னவென்றாலும் ஸமயங்களில் ஆள்பலம் பெருத்த ஸாதகமல்லவா? போதாக்குறைக்கு இங்கிலாந்து முதலியதேசங்களில் வரவர பிரஜோத்பத்தி குறைந்துகொண்டே வருகிறது. ஜெர்மனி, ஆஸ்டிரியாவிலோ, விஷமேறுவதுபோல் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. மேலும் வியாபாரத்திலும், கைத்தொழில்களிலும், யுத்தாயுதங்கள் செய்வதிலும் ஜெர்மனி தாழ்ந்ததாகக் காணோம். சீக்கிரம் மேம்பட்டும் விடலாம். பௌதிக, ரசாயன சாஸ்திரப் பயிற்சியிலும் இங்கிலாந்தைவிட ஜெர்மனி குறைந்ததில்லை. இன்னமும் ஜெர்மனியில் ஸகல ஜனங்களும் ஏகோபித்து ஒரேமூச்சாய் இங்கிலாந்தை அழித்துவிடவேண்டுமென்றிருப்பதால், இவ்விஷயத்தில் ஒருதடையு மேற்படாது.

ஆகவே பிருகிருதம் நிகழும் ஐரோப்பிய மகாயுத்தத்தில் ஜெர்மனியை ஜயமடையும்படி விட்டுவிடுவார்களானால் இங்கிலாந்திற்கு விபத்து சீக்கிரம் வந்துவிடுமென்பதற் கையமுண்டோ? ஜெர்மனி ஸாதாரணமாய் அபஜயமடைவதுகூடப் போதாது. அதோடு விட்டுவிட்டால் மறுபடியும் பலமுறி நம்மழிவிற்கே காரணமாகிவிடும். எனவே அதன் விஷப்பல்லை வேரோடு பிடுங்கினாலொழிய க்ஷேமங்கிடைப்பதருமை. இதுவரை யுத்தம் சென்றிருக்கும் கதியைக் கவனித்தால், எவ்வளவு நாளாயினும் கடைசியாக ஜெர்மனி முறியடிக்கப்படுவது நிச்சயமெனத் தோன்றுகிறது. அவ்வாறான பின் இங்கிலாந்தும், அதன் ஐரோப்பியத் துணைவர்களும் ஜெர்மனியின் பலத்தைக் குறைத்து, இனியொரு விஷமமுஞ் செய்ய முடியாதபடி அதன் ராணுவ நச்சுப்பல்லைப் பிடுங்கி தங்களுக்கும் லோகத்திற்கும், பகவானருளால், ஹிதத்தை விளைவிப்பாராக. சுபமஸ்து.

## சுகாதார விதிகள்

### THE RULES OF HYGIENE

முன் நாம் விவரித்துள்ள தேகதத்துவ சாஸ்திரத்தினுதவியைக்கொண்டு, நம்முடைய தேகத்தில் வியாதிகள் அணுகாம லிருப்பதற்கும், நம்முடைய சரீர தத்துவங்களை விருத்தி செய்வதற்கும், மனோ தத்துவங்கள் வர வா க்ஷீணகதியையடையாமல் தடுப்பதற்கும் ஸாதகமான சில சுகாதாரவிதிகளை இப்பொழுது கவனிப்போம்.

துயிலெழுதல்:—நம்முடைய சாஸ்திரங்களின் விதிப்படி ஏற்பட்டுள்ள பிராம்ம முகூர்த்தமென்ற விடியற்காலம் சுமார் 4 மணி; காலமே தூங்கி எழுவதற்கு உத்தமமான காலமாயிருக்கிறது. ஸூர்யன் உதயமான பிறகு விழித்தெழுவது ஸர்வதா கூடாத காரியம். தீராத பக்ஷம் விடியற்காலம் 5 மணிக்காவது விழித்தெழ வேண்டியது தேக ஸௌக்கியத்திற்கு அத்தியாவசியகமானது. வெகுகாலம் அரோகதிட சரீரிகளாய் ஜீவித்திருந்தவர்களில் பெரும்பாலார் அதிகாலையில் எழுந்திருக்கிற

(இதன் தொடர்ச்சி 253-ம் பக்கம்)

இந்த நல்ல வழக்கத்தைக் கைக்கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அந்த ஸமயத்தில் ஆகாயம் குளிர்ச்சியுள்ளதும் இன்பம் தரத்தக்கதாயுமிருப்பதன்றி, மனதிற்கு விசேஷ உத்ஸாகத்தையுமூட்டுவதாயிருக்கிறது. மேலும் சரீர தத்துவங்களும், மனோதத்துவங்களும் அவ்வேளையில் துறு துறுத்து அதிக சுறுசுறுப்புடன் பலமான முயற்சிகளில் ப்ரவேசிக்கத் தயாராகவிருக்கும். அதிகாலையில் எழுந்திருப்பதனாலுண்டாகும் நன்மைகளும் இன்பமும் அவ்வழக்கத்தை அனுஸரித்து வருகிறவர்களுக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாது. துயிலெழுந்தவுடன் குளிர்ந்த ஜலத்தால் முகம், வாய், கைகால்கள், இவைகளைச் சுத்தம் செய்து கொள்ளுதல் சிலாக்கியம்.

வ்யாயாமம்:—ஆகாயம், தண்ணீர், வாயு இவைகள் எப்படி உயிரோடிருப்பதற்கு அவசியமோ, அப்படியே வ்யாயாம விஹ்ருதிகள் (தேகமுயற்சி, கவாத்து, கஸாத்து விளையாட்டுகள்) தேகாரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானவை. இவ்விதமான வ்யாயாமங்களில்லாமற்போனால் சரீரத்தில் உண்டாகும் அசுத்தங்கள் ஸுலபமாய்க் கழிவதற்கு ஹேது ஏற்படுகிறதில்லை. சுவாசாசயங்கள் சுருங்கி, சுவாஸத்திலும் பலமற்று இழைந்தாற்போல் ஏற்பட்டுவிடும். ரக்தத்தின் ஸஞ்சாரமும் மந்தப்பட்டு, அதனால் சரீரத்தில் வியர்வை விசேஷமாய் உண்டாவதும் நின்று விடும். அப்படியே ஜீரண சக்திக்கும் குறைவுண்டாகும். மற்றும் சரீரத்திலுள்ள தசைகள், நரம்புகள் முதலியவைப் பலப்படுவதற்கு ஹேதுவில்லை. ஆகவே, போதுமான அளவு சரீரமுயற்சியற்றிருக்குமானால், மனித சரீரம் பலவகையான கோளாறுகளால் பல வியாதிகளுக்குள்ளாகும்.

சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும் அவ்வவைகளுக்கேற்பட்ட தொழில்களை ஸரிவர பூர்ணபலத்துடன் செய்யவேண்டியதற்கு ஆதாரமாயிருப்பது, ரக்த ஓட்டமானால், இந்த ஓட்டத்தை விரைந்தோடும்படி செய்து, அத்தொழில்களும் அதன் மூலமாய் விரைந்து நடக்கும்படி செய்ய வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படி ரக்தம் விரைந்தோடி சரீராவயவம் எங்கும் பாய்வதற்கு தேகமுயற்சிக்கு ஸமானமான வேறு ஸாதனமில்லையென்றால் தேகமுயற்சியின் மேன்மை எவ்வளவாகிறது.

அன்றியும் தேகமுயற்சிகள் செய்யுங்காலங்களில் நுரையீரலென்ற சுவாச யந்திரம் அதிகமாக விரிந்து அதிக ஆகாயத்தையுட்கொள்ள நேருவதால், ரக்தம் அதிக சுத்தமாகி தேகத்திற்கு பலத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. ஒருவன் படுத்துக்கொண்டிருக்கிற ஸமயத்தைவிட எழுந்து நிற்கும் பொழுது அரைப்பங்கு ஆகாயத்தை அதிகமாக உட்கொள்ளுகிறான்; ஒரு மணிக்கு மூன்று மைல் விதம் நடந்து செல்வானானால் மூன்று பங்கு ஆகாயத்தை உட்கொள்ளுகிறான். தண்ணீரில் நீந்தினாலும் ஸரி, குதிரை ஸவாரி செய்தாலும் ஸரி, நான்கு பங்கு ஆகாயத்தை உட்கொள்ளுகிறான். இவைகளினால் வெவ்வேறு வ்யாயாம விஹ்ருதிகளின் பலாபலம் ஒருவாறு வெளியாகிறது.

இப்படியே, தேகமுயற்சிக்குத் தகுந்த அளவுதான் தேகக் கழிவுகளும் வெளியேறுகின்றன. வளர்ந்த ஆள் சும்மாயிருக்கும் பொழுது ஒரு மணி நேரத்தில் சுமார் 600 கிரேன் கரியமிலவாயுவையும், பலமான தேகமுயற்சிகளைச் செய்யும்பொழுது அதே நேரத்தில் சுமார் 2400 கிரேன் கரியமிலவாயுவையும் வெளியேற்றுகிறான். கரியமிலவாயு தேகத்தைவிட்டுப் பூர்ணமாய் வெளியாகாவிட்டால், அது சரீரத்திலுள்ள ரக்தத்தில் ஸம்பந்தப்பட்டு அதை விஷமாக்கும். அதனால் ராஜவுறுப்புகளுக்குப் பலஹீனமேற்பட்டு புத்திமந்தமும் கார்யங்களில் ஊக்கமின்மையும் ஏற்படக்கூடும். ராஜவுறுப்புகள் மட்டுமல்ல. இப்படியே மற்ற உறுப்புகளுக்கும் பலஹீனம் ஏற்படும்.

ஒருநாள் முழுவதும் ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்வதால், வேலையைவிட்டு வரும் ஸாயங்காலத்தில் உண்டாகும் தேகச்சோர்வு, மனச்சோர்வு முதலியன சுத்த ஆகாயமுள்ள வெளிகளில் போய் உலாவி வருவதாலும் அவசியமான தேகமுயற்சிகள் செய்வதனாலும் மாறுவதை யனுபவத்தில் அறியலாம். மேலும் நல்ல பசியும் போஜனத்தை ஸுலபமாய் ஜீரணிக்கத் தக்க ஸத்துவமும் நல்ல நித்திரையுமுண்டாகும்.

கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைய வேண்டினும் ஸரியான காலங்களில் போதுமான அளவு தேக முயற்சி அவசியம். தேக முயற்சியினால் மூளையும் மனோதத்துவங்களும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து, அதன் மூலமாய் கல்வி கேள்விகளிலும் விருத்தியுண்டாகிறது. போதுமான அளவு தேகமுயற்சியில்லாவிட்டால் படிப்பிலும் ஏற்றமில்லாமற் போவதுடன் அகால மரணத்தையும் அடைய ஹேதுவாகிறது.

தேகமுயற்சியினால்ஜீரணம் வேகப்படுகிறது. சாப்பாட்டிலுள்ள நல்ல ஸத்துக்கள் யாவும் சரீரத்தில் ஜன்னினப்படுகிறது. மலசுத்தி தாராளமாய் நடக்கிறது. தேக முயற்சி சரீரத்திலுள்ள அநேகம் வியாதிகளையும் காலக்ரமேண விலகும்படி செய்ய வல்லதாயிருக்கிறது. எந்த விதமான வியாதிகளையும் அவ்வவைகளுக்குத் தகுந்த மாறுதல்களோடு செய்யப்படும் வ்யாயாமங்களால் மாற்றி விடலாம் என்று மிஸ்டர், ஸாண்டோ என்பவர் அநுபவத்தில் நிருபித்துக் காண்பித்திருக்கிறார்.

நம்முடைய தேசத்தில் இன்னமும் தேக முயற்சியாலுண்டாகும்நன்மை இவ்வளவென்று ஜனம் பொதுவில் அறிந்ததாகவில்லை. சிறுகுழந்தைகளை அநியாயமாய் காலை முதல் மாலைவரை பள்ளிக்கூடங்களில் ஒரே இடத்தில் அசையாமலிருக்கும்படி செய்து, தேகமுயற்சியே இல்லாமல் கெடுத்து விடுகிறார்கள். இவ்விஷயத்தில் அநேகம் உபாத்தியாயர்களும், பிள்ளைகளின் பெற்றோர்களும் பெருத்த அபராதிகளாகிறார்கள். இப்படிச் செய்வதனால் பிள்ளைகள் வித்தியாபிவிருத்தி யடைவதனைப் போக்கி, வரவர, தேகதத்துவங்களின் செயல் குறைந்து, மனோவிருத்திகள் பலவீனமடைந்து, வயதுவந்தபிறகும்தகுந்தபடி, விசேஷ மனோமுயற்சியை அவசியம் வேண்டுகின்ற படிப்பிற்கும் லாயக்கற்றவர்களாகின்றனர். இப்படி இச்சிறுவர் அவஸ்தைப்பட்டு விளையாட்டிலேயே செலுத்தப்பட்ட ஞாபகமுடையவராய்10 மணி நேரத்தில் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் இரண்டத்தனை, ஸரியான தேகமுயற்சியுடன் கூடின மூன்று மணிப் படிப்பில் கற்றுக் கொள்வதும் தவிர, பிற்காலத்திற்கு வேண்டிய சரீரதத்துவ, மனோதத்துவ பலங்களையும் சேகரித்துக்கொள்வார்கள் என்பதில் ஸந்தேஹமேயில்லை. இச்சிறுவர்களை காலையில் இரண்டுமணி நேரம் சுலபமான மனோமுயற்சிகள் செய்யவிட்டு, பிறகு ஓடியாடி விளையாட அவர்களுக்கிடம் செய்து கொடுத்து, பிறகு ஸாயங்காலம் ஒருமணி நேரம்படிப்பில் செலவிடச்செய்வதே மேன்மையென்பது இதனால் விளங்கும்.

சிறுவர்கள் செய்யும் தேகமுயற்சிகள் அவர்களுக்குச் சந்தோஷத்தை விளைவிக்கத்தக்க விளையாட்டு மூலமாகவும், அவர்களுடைய ஸகல சரீரபாகங்களுக்கும் அதிலும் விசேஷமாய் ஸந்திகள், மார்பு, முதுகு முதலியவைகளுக்குப்பலம் கொடுக்க வேண்டியவைகளாயிருக்கவேண்டும்.

வியாதிஸ்தர், விருத்தாப்பியர், பலஹீனர் முதலியோர்களுக்கும் தேகமுயற்சி மெத்த அவசியம். இவர்கள் கடினமான தேகமுயற்சிகளைச் செய்யக்கூடாது. இலேசானவைகளைச் செய்யும்பொழுதும் இடைக்கிடையே இரண்டு மூன்று தடவை இளைப்பாறிக்கொண்டு செய்ய வேண்டியது. வாகிங் என்று சொல்லப்படுகிற உலாவிவருதல் மிகவும் நல்லது. அதிலும் நடக்கும் பொழுதே சுவாஸத்தைப் பலமாய் உள்ளுக்கு வாங்கி, சற்று நேரம் தங்கியிருக்கும்படி செய்து, பிறகு மெதுவாய் வெளிவிட்டுக்கொண்டே போதல் உத்தமமான டானிக் (Tonic) என்று ஒரு பிரபல வைத்திய சாஸ்திரி அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

இப்படிச் செய்வதற்கும் பலஹீனமாயிருப்பவர்கள் பிளானல் அல்லது பின்னல்துண்டு, இவைகளிலொன்றைக்கொண்டு தானாகவாவது அல்லது வேறொரு ஆளைக்கொண்டாவது 15 நிமிஷம் தேகமுழுமையும் அனல் பறக்கத் தேய்த்துக் கொள்ளுவது தேகமுயற்சியின் பிரயோஜனத்தைக் கொடுக்கும். அதற்கும் பலஹீனப்பட்டவர்கள் காலையிலும் மாலையிலுமாக 5 நிமிஷ நேரம் அவ்விதம் செய்ய குணமுண்டாகும். நித்திரை வாராத ஸமயங்களிலும் இதே வைத்தியம் சிலாக்கியமாகக் காணப்படுகிறது.

தேகமுயற்சியில் கவனிக்கவேண்டியவிதிகள்:

(i) ஆரம்பத்திலேயே கடினமான முயற்சிகளை அதிகமாகச் செய்யாதே. இலேசானவைகளிலாரம்பித்து, கொஞ்சங்கொஞ்சமாய் அதிகப்படுத்து.

(ii) அதிக வேகமாய் தேக முயற்சிகளைச் செய்து சீக்கிரம் களைப்படையும்படி விடாதே.

ஆனால் மெதுவாய் அதிக நேரம் கடினமான முயற்சிகளைச் செய்.

(iii, சுத்தமான ஆகாயமுள்ள திறப்பு வெளிகளிலேயே தேகமுயற்சிகளைச் செய்.

(iv) தினந்தோறும் தவறாமல் தேகமுயற்சி செய்.

(v) தேகமுயற்சி செய்யுங்காலங்களில் சுவாசத்தைப் பற்றி ஏற்கனவே நாம் சொல்லியுள்ள விஷயங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்.

(vi) தேகமுயற்சி செய்யும்பொழுது அதிலேயே ஞாபகமாயிரு. மனோ தத்துவங்களுக்கு எவ்வித காரணங்களை முன்னிட்டும் வேலை கொடுக்காதே.

(vii) தேகமுயற்சி செய்தான பிறகு, தேகத்தில் குளிர்ந்த காற்று முதலியன வீசும்படிக்கு இடங்கொடாதே.

அளவு:—வளர்ந்த ஆள் ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு 10 அல்லது 12 மைல்தூரம் நடப்பதற்கு ஸமானமான தேகமுயற்சி செய்யவேண்டும். இதில் சுமார் பாதி அவரவர் வயிற்று வளர்ப்புக்காக ஓடி யாடித்திரிவதில் ஸரிக்கட்டிப்போகும். மீதம் செய்தால் போதுமானது. நாட்டுப்புறங்களில் சுத்த ஆகாயம் அதிகமாதலால்பட்டணக்கரைகளிலிருப்பவர்களைக்காட்டிலும் ஸ்வல்பமான தேகமுயற்சி அவர்களுக்குப் போதுமானது. படிப்பு முதலிய கடினமான மனோமுயற்சி செய்பவர்களுக்கு இதைக்காட்டிலும் அதிகமான தேகமுயற்சி வேண்டும்.

காலம்:—உதயகாலமும் ஸாயங்காலமும் உத்தமமான நேரங்கள். இரண்டில் உதயகாலமே மேலானது. ஆனால் குளிர்காலங்களில் பகலிலும் தேகமுயற்சி செய்யலாம். போஜனம் செய்தவுடனே அல்லது ஜீரணமாகும் ஸமயமாவது தேகமுயற்சிக் கேற்றதல்ல. செய்தால் ஜீரணம் ஸரிவர நடக்காது தடைபடும். பொதுவாய்ப் பேசுமிடத்து, சாப்பிட்ட போஜனம் பூரணமாக ஜீரணமாகி, ரக்தமாக மாறுதலடைந்து, சரீரத்தில் வியாபிக்கத் தயாராயிருக்கும் ஸமயமே தேகமுயற்சிக்கு நிரம்ப ஏற்றது.

வகைகள்:—தேகமுயற்சிகளைப்பற்றி நாம் வியவஹரித்து வந்த காலத்தில் பலவகைகளை ஆங்காங்கு கூறியிருக்கிறோம். உலாவுதல், கஸரத்து, கவாத்து, தோட்டவேலை, குதிரை ஸவாரி, ஓட்டம்பிடித்தல், டலிதயான விளையாட்டுகள் முதலியன தேகமுயற்சியின் வகைகளாம். ஸாண்டோ என்பவர் கண்டு பிடித்திருக்கிற முறைப்படி வ்யாயாமங்கள் செய்வது மிகவும் உத்தமம்.

மலஜலவிஸர்ஜனம்;—சரீர ஸ்வபாவத்திற்கு தக்கபடி தூங்கி எழுந்தவுடனேயாவது அல்லது சற்றுநேரம் கழித்தாவது இந்த தேகபாதையை நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும். எப்பொழுது அவசியம் நேரிடுகிறதோ அப்பொழுதெல்லாம் கூடிய அளவு உடனே நிவர்த்தி செய்யப்பார்க்கவேண்டும். இல்லாவிடில், எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகிறதோ அதற்குத் தகுந்த அளவு தீமையை விளைவிக்காமல் போகாது. ஆஹாரவாஹினி வழியாய்ச் செல்லும் ஆஹாரக் கழிவுகள் ஆஸனத்துவாரத்தில் வந்து வெளிப்பட பிரயத்னிக்கின்றன. அதற்கிடங்கொடாவிட்டால், உடனே அவைகள் வந்த வழியே நோக்கித் திரும்பிச் செல்லுகின்றன. அப்பொழுது அவைகள் இரத்தத்தில் சுவறி, சுவாஸாசயத்திலிருந்து சுவாஸ வழியாய் வெளியே வருகின்றன. அதனாற்றான் சுவாஸத்திற்கு நாற்றம் ஏற்படுகிறது. மேலும் மலத்திலுள்ள திரவம் முழுவதும் சரீரத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, கெட்டிப்படுகின்றன. அதனால் மலச்சிக்கல் முதலிய வியாதிகளுக்கிடமாகிறது. ஆதலால் இச்சமயங்களில் அநாவசியமாய் பேதிக்குச் சாப்பிட்டாவது வேறு விதங்களாலாவது மலத்தை திரவமாக்க வேண்டி நேருகிறது. இது தேக ஸௌக்கியத்திற்கு ஏற்றதல்லவென்பது அடுத்த தலைப்படியில் விளங்கும்.

விரேசனம்:—சிலர் தெரியாத்தனத்தால் மாதத்திற் கொருமுறையாவது பேதிக்குச் சாப்பிடுவது சரீரத்திற்கு நன்மை என்று எண்ணுகிறார்கள். விரேசனத்தால் தேகத்திற்குக் கெடுதலேயொழிய, நன்மை கிடையாது. பத்தியமான ஆஹாரத்தை யுட்கொள்வதாலும் காலாகாலங்களில் மலஜலவிஸர்ஜனம் செய்வதாலும் விரேசனத்திற்கு அவசியமே யில்லாமல் செய்து விடுவது ஸாத்தியமாகும். பேதிக்குச் சாப்பிடுவதினால் மலமிளகி, வெளிக்கழிப்பதற்கு ஸாதகமானாலும், இப்படிச் செய்வதற்கு, உமிழ்நீர், குக்ஷிநீர், பித்தநீர், கணையநீர், குடல்நீர் முதலிய ரஸங்கள் சரீரத்தில் அதிகமாக உண்டாகவேண்டி இருப்பதால், அந்த ரஸங்

களை உண்டுபண்ணுவதற் கென்றேற்பட்ட அங்கங்களுக்கு அநாவசியமாய் அதிகவேலை கொடுக்கப்படுகிறது. ஆகையாலிது சரீரத்திற்கு இளைப்பே தவிர வேறில்லை.

ஆயினும் அநுபவத்தில் விரேசனத்திற் கவசியம் நேராமல் செய்துகொள்ளுவது சற்று அஸாத்தியமாகவே இருக்கிறது. ஆகையால், அவசியம் நேர்ந்த ஸமயங்களில், (சுத்தி செய்தது கூட) நேர்வாளம் முதலிய அதிக பேதியுண்டாக்கக்கூடிய மருந்துகளை எப்பொழுதும் சாப்பிடக்கூடாது. பாதரஸம் முதலிய விஷக்கலப்புள்ள (Calomel) மருந்துகளையும் சாப்பிடுதல் கூடாது. விளக்கெண்ணெயே உத்தமமான விரேசனகாரி. சூரத்தாவாரை இலை முதலிய இலைகளின் கஷாயத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

மருந்து சாப்பிட்டு பேதி ஆகுங்காலங்களில் அதை நிறுத்த வேண்டுமென்றால் மோராவது எலுமிச்சம்பழ ரஸமாவது அல்லது புளிப்பு பதார்த்தங்களாவது சேர்ந்த ஆஹாரத்தை யுட்கொண்டால் நின்று விடும். நேர்வாள ஸம்பந்தமான மருந்துகளால் பேதியாவதை நிறுத்த வேண்டியதற்கு எலுமிச்சம்பழ ரஸமும் வசம்புசுட்ட கரியும் நல்லமாற்றுகள்.

பேதிக்குச் சாப்பிட்டதினம் கட்டாயம் ஸ்நாநஞ் செய்யவேண்டும். சரீர சுத்திசெய்வதொன்று, உஷ்ணப்பட்ட சரீரத்தைக் குளிர்ச்சி யடையவைப்பதொன்று இதன் பிரயோஜனங்கள்.

தேகபாதா நிவாரணத்தின் பேரில் சௌசம் செய்து கொள்ளும் விஷயங்களில், பானத்திற்கும், ஸ்நாநத்திற்கும் உபயோகப்படுகிற ஜலாசயங்கள், தடாகங்கள் முதலியவைகளை உபயோகப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்வதினால், அவைகளை யுபயோகப்படுத்தும் மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் வியாதிக்கிடமுண்டானால், அது மிகுந்த பாபமன்றோ.

பல் தேய்த்தல்:—ஆல், கருவேலா, வேம்பு, பூலா முதலியவைகளின் குச்சிகளை உபயோகப்படுத்துவது நலம். "ஆலும் வேலும் பல்லுக் குறுதி" புளிமுதலிய புளிப்புள்ள குச்சிகளை உபயோகப்படுத்தக் கூடாது. மாவிலை சிலாக்கியம். இவைகளிலிருக்கும் துவர்ப்பு,புண்களை யாற்றவும், ஈறுகளைக் கெட்டிப்படுத்தவும் சக்தியுள்ளவை. பற்பொடிகளில் அடுப்புக்கரி, கொட்டைப்பாக்குக்கரி, உமிக்கரி முதலியவைகளால் செய்யப்பட்டவை சிலாக்கியம், கொஞ்சம் சீமைச்சுண்ணாம்பு, சூடம், கிராம்பு, மாசிக்காய் முதலியவைகளைச் சேர்த்துப் பொடிசெய்து வைத்துக் கொள்ளுவதில் குணமுண்டு. ஆனால் பற்பொடிகள் பொதுவாய் கரடுமுரடாய் இருப்பது நலமே தவிர, மிகஸன்னமான பொடியாயிருத்தல் கூடாது. அப்படியிருந்தால் அது பற்களினிடையே தங்கி, விசேஷ ஊற்றைக்கும்,வாயில்துர்க்கந்தத்திற்கும் அதன் மூலமாய் வியாதிகளுக்கும் காரணமாகிறது. மணல், சாம்பல், விறகுக்கரி, செங்கற்பொடி முதலியவைகளை உபயோகப்படுத்தவே கூடாது. அவைகள் சீக்கிரத்தில் பற்களின் கெட்டியான கவசமாகிய இனாமலை (Enamel)த்தேய்த்து, பற்களுக்குப் பலக்குறைவையுண்டாக்கும். பல் சொத்தை விழுவதற்கும் ஹேதுவாகும்.

க்ஷௌரம்:—க்ஷௌரம் செய்து கொள்வதே சிருஷ்டி கர்த்தாவின் எண்ணங்களுக்கு மாறாகுமென்னலாம். ஏனெனில் கடவுள், சரீரத்தில் மயிர் உண்டாக்கி யிருப்பதன் நோக்கம் சரீரபாகங்களின் ரக்ஷணத்திற்காகதான், உதாரணமாக:—மூளை யென்ற வெகு ஸூக்ஷ்மமான உறுப்பை சீதோஷ்ணாதிகள் தாக்காதிருக்க வேண்டியே தலைமயிர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியே கண்ணிமைகளிலுள்ள மயிர்களும்.

ஆயினும் ஸௌகர்யம், நாகரிகம்,சாஸ்திரம் என்ற காரணங்களில் ஒன்றையேனும், பலவையேனும் முன்னிட்டு க்ஷௌரம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாக ஆகிவிட்டது. இருந்தாலும், அநாவசியமாக சரீர மேல்தோலில் எரிச்சலுண்டாகும்படி 'எதிர்க்கட்டையிட்டு' க்ஷௌரம் செய்து கொள்ளுதலை நிவர்த்திக்கவேண்டும். அடிக்கடி க்ஷௌரம் செய்து கொண்டால் தலைவழுக்கை விழுந்துபோம். ஒருமாதத்திற் கொருமுறை க்ஷௌரம் செய்து கொள்ளுதல் போதும். 15 நாளைக் கொரு தடவை செய்து கொள்ளலாம். 'சிம்டா' முதலியன காட்டுமிராண்டித்தனம். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கென்று ஒரு கத்திவாங்கி வைத்துக்கொள்வது நலம். அநேகம் தோல் வியாதிகள், பரிகாரிகளின் கத்தியினாலேயே ஒருவரிடமிருந்து வேறொருவரிடம் மாற்றப்

படுகின்றன. க்ஷௌரத்திற்கு ஸ்நாநம் செய்ய வேண்டிய தவசிய மென்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஸ்நாநம்:—சரீர சௌக்கியத்திற்கு ஸ்நாநம் நிரம்ப முக்கியமானது. நம்முடைய சரீரத்திற்குள் க்ஷணத்திற்கு க்ஷணம் அசுத்தங்கள் உண்டாகி, அவைகள் சரீர ரரும துவாரங்களின் வழியாய் வெளியே வருகின்றன. அவைகளை அப்பொழுதைக் கப்பொழுது சுத்தப்படுத்தாவிட்டால், அத்துவாரங்கள் அடைபட்டு, மறுபடி அசுத்தங்கள் வெளிவருவதற்கு ஹேதுவில்லாமற் போவதால் வியாதிகளுக் கிடமுண்டாகும். மேலும் வியர்வையால் சரீரம் எப்பொழுதும் நனைந்த வண்ணமாய் இருப்பதால், நம்மைச் சுற்றிலும், பறந்து கொண்டிருக்கிற தூசிகள் வந்தடைந்து இந்தத் துவாரங்களை யடைத்து விடுகின்றன. ஆகலால் இவ்விதமான, இரண்டு அழுக்குகளையும் நீக்க ஸ்நாநம் அவசியம் என்பதும் ஸ்நாநம் செய்யும் பொழுது நன்றாய்த் தேய்த்துக்குளிக்க வேண்டுமென்பதும் விளங்கும். அன்றியும் ஒரு தினத்திற்கு இரண்டு மூன்று தடவை ஸ்நாநம் செய்வது மிகவும் நல்லது. நிரம்ப சூடான வெந்நீர், தசைகளையும், நரம்புகளையும் மிருதுவாக்கி, பலக்குறைவை புண்டுபண்ணுமாதலால், மந்தோஷ்ணமான வெந்நீர் ஸ்நாநத்திற்கு சிலாக்கியம்.

நம்முடைய தேகத்திலிருந்து ஒவ்வொரு க்ஷணமும் அசுத்தங்கள் (தோலின் வழியாய்) கழிந்து கொண்டிருக்கின்றன வென்று சொன்னேனுமல்லவா? அவை இரண்டுவிதம். வியர்வையும், ஓர்வகைக்கொழுப்புமாம். தேகத்தில் அப்பொழுதைக் கப்பொழுதுண்டாகும் கழிவுகளை ஸ்வேதரூபமாக்கிக் கழிப்பதற்காக தோலின்கீழ் எண்ணிறந்த பல இயந்திரங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து அநேகம் சிறு குழல்கள் புறப்பட்டு மேற்றோலில் வந்து திறக்கின்றன. இப்படி குழல்கள் திறக்குமிடத்தைத்தான் நாம் சரும துவாரங்கள் என்கிறோம். இவைகளின் மூலமாய்த்தான் வியர்வை வெளியேவருகிறது. மேலும் இன்னொருவித கோளங்களும் தோலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஓர் வித தைலத்தை ஸதா கசியவைத்து, சரீரத்தோல் காற்றினாலும் உஷ்ணத்தினாலும் காய்ந்து வரண்டு வெடித்துப் போகாமல் பதமாய் வைத்துக் கொள்ளுகின்றன. இவைகளை தினைகோளங்கள் என்னலாகும்.

இப்பதார்த்தங்கள் வெளிக்கழியத் தடைபட்டு சரீரத்தில் தங்குமானால், உடனே பெரிய ஆபத்துகள் நேரக்கூடும். சுகவீனத்திற்காவது ஹேதுவாகும். அல்லாப்பண்டிகை முதலிய உத்ஸவங்களில் வர்ணம் முதலியவைகளால், வேஷம் பூணுங்காலங்களில், அக்காலத்தில் இந்த ஸ்வேதத் துவாரங்களெல்லாம் அடைபட்டுப் போகுமானால் உடனே மரணம் ஸம்பவிக்கும்.

இவ்வித அசுத்தக் கழிவுகள் ஸதாகாலமும் உண்டாகிக் கொண்டிருப்பதால்தான் நாம் அரையில் கட்டிக்கொள்ளும் வஸ்திரங்கள் முதலியன சீக்கிரம் அழுக்கடைகின்றன. நாம் அவைகளை அடிக்கடி மாற்றி, சுத்தம்பண்ணி வைத்துக்கொள்ளாவிட்டால், டி. விஷ பதார்த்தங்கள் மறுபடி தோலின்வழியாய் சரீரத்திற்குள் பிரவேசித்து சுகவீனமுண்டாக்கும். இக்காரணம்பற்றியே சொரிகள், சிரங்குகள், அரைகடி முதலிய அருவருப்பான பல தோலைப்பற்றிய வியாதிகள் உண்டாகின்றன.

உதயகாலந்தான் ஸ்நாநத்திற்கு நிரம்ப ஏற்றது. பூரணபோஜனம் செய்த உடனேயாவது போஜநம் ஜீரணமாகிற வேளையிலாவது ஸ்நாநம் செய்யக்கூடாது. சரீர முயற்சிசெய்து உடம்பு வியர்த்திருக்கும் வேளைகளிலும் ஸ்நாநம் செய்யலாகாது. வியர்வைமாறி, சரீரத்தில் உஷ்ணம் உண்டான பிறகுதான் ஸ்நாநம் செய்யவேண்டும். பலசாலிகள் சாப்பிடு முன்னர் ஸ்நாநம் செய்யலாம். மற்றவர்கள் அல்பாஹாரம் செய்துவிட்டு ஸ்நாநம் செய்வது தான் சிலாக்கியம்.

ஸ்நாந விதிகள்:—

(i) குளிர்ந்த ஜலத்தில் 10 அல்லது 12 நிமிஷங்களுக்குமேல் நில்லாதே. (ii) தேகத்தை நன்றாய்த் தேய்த்துசுத்திசெய். (iii) ஸ்நாநம் முடிந்தவுடன் ஈரமற்ற மிருதுவான துவாலை கொண்டு சரீரத்தைத் துவட்டி, அதன்பின் பிளானல் அல்லது முரட்டுத் துவாலைகொண்டு 4, 5 நிமிஷநேரம் சரீரத்தில் அனலுண்டாகத் தேய்த்துக்கொள். (iv) இவ்விதத்திலும் தேகத்தில் அனலுண்டாகாவிட்டால் அதிக காலம்

(இதன் தொடர்ச்சி 258-ம் பக்கம்.)

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

### 46. சித்திரம் பேசேல்

இச்சூத்திரத்திற்கு இருவகைப் பொருளுரைப்பது உண்டு. (1) சித்திரத்தைப்போல அசையாது மௌனமாக இரு பெரியோர் கூட்டத்தில் என்பதும் (2) பலவாறாக மனதைக் கிளைபாய்ந்து ஓடச்செய்யும் விசித்திர சொற்களைச் சொல்லாதே என்பதுமே இவ்விருபொருள்களும். ஆகவே இவ்விரு பொருள்களுக்குப் பொதுவாக நற்குணத்தை தழைக்கும்படி செய்யப் பயன்படாச் சொற்களைமுன்பின் நிதானியாது பேசாதிருக்க வேண்டும். அப்படிப் பேசுவதாகத் தொடங்கிவிட்டால் கேட்பவனுக்கு வீண்மனச்சஞ்சலமும், சொல்லுபவனுக்கு பொய் சொல்லியாவது கேட்போரை மகிழச்செய்து கொண்டே இருக்கவேண்டுமென்ற வீண் மனக்கொதிப்புமாகவே ஏற்பட்டு, இருதிறத்தாருக்கும் சாம்துணையும் சஞ்சலமேயாகிவிடும். வாணாள் வீணாளாகத்தான் முடியும் என்பதே இச்சூத்திரப் பொருள்களின் உட்கருத்து.

(1) பெரியோர் கூட்டத்திற் பேசாதிரு:—பெரியோர்களுடன்சேர்ந்து ஒரு ஸாதாரண மனிதன் கூட்டுறவு செய்வது தன் நன்மைக்கே ஒழிய பெரியோர் நன்மைக்கல்ல. ஆதலால் இவன் வார்த்தைகளால் இவன் அறியாமை விளங்குமே ஒழிய, பொதுவாகப் பெரியோர் கூட்டத்திற்குப் பயன் ஒன்றும் ஏற்பட இடமில்லை. அவர்கள் சேர்க்கையால் இவனுக்குக் கொஞ்சம் அறிவு ஏற்பட்டிருப்பின் சில ஸந்தேஹங்களும் வரலாம்; அல்லது தன் ஞான நிலையை பெரியோர்களுக்கு காட்டி விடவேண்டுமென்ற இறுமாப்பும் வரலாம். முன்னது வருங்கால் சற்று நிதானிக்கவேண்டும். பெரியோர்கள் கேட்போர் எல்லோருக்கும் பொதுவாக உண்டாகக்கூடிய ஸந்தேஹங்களை நீக்கி திடவுணர்வு உண்டாக்கவே முயலுவதால், அவர்கள் சொல்லிவருவதைக்கவனித்து தன் ஸந்தேஹத்தை வெளியிடாது இருந்தால் இடையிலேயே அந்த ஸந்தேஹங்கள் அவர்கள் பொது ஆராய்ச்சி விசேஷத்தாலே வெளிப்படுத்தாமலே தனக்கு நீங்கிவிடலாம். ஆகவே எளிதில் நீங்கக்கூடிய அற்பஸந்தேகத்தைப் பெரிதாக்கிக்கொண்டு வீணைப் பெரியோர் கருத்துப் போக்கைத் தடுத்ததாகும்: பலர்க்கு உபகாரமாகவேண்டியதைத் தகைந்து தந்நயம் கருதியதாகும். அப்படிப் பெரியோர் சொல்லவேண்டியது முடிந்தும் தன் ஸந்தேஹம் நீங்காது ஒருவனுக்கிருக்குமாயின் பின்னர் தனிமையாக அவரிடம் சென்று கேட்பதே தகுதி. இதுவன்றி இறுமாப்பாலும் ஸபையில் குறுக்கே பேசிவிடவேண்டும் என்று சில ஸாதாரணருக்குத் தோற்றலாம். இதை வெகு ஜாக்கிரதையாக அடக்கி நசுக்கிவிடுவதுதான் புத்திமானுக்கு அழகு. ஆகவே எவ்வித காரணத்தாலும் பெரியோர்களோடு சேர்ந்து பழகிவருகையில் ஒருவிதப் பரபரப்பாலும் நல்ல எண்ணத்துடனோ கெட்ட எண்ணத்துடனோ அவர்கள் ஸங்கல்பதாரைக் கலைப்பையாவது அல்லது கேட்போர்கருத்துக் கலைப்பையாவது ஏற்படுத்தி குழம்பச் செய்யும் விநோத சொற்களை சொல்லவே கூடாது. அப்படிச் செய்தால் செய்பவன் நன்மை அடையாததோடுங்கூட கேட்பவர் சொல்பவர் அதிருப்திக்கும் ஆளாவான். பெரியவர் எனக்கருதி அணுகப்பட்டவர் சொல்வது சரியாயில்லை என்று பட்டால் இறுமாப்பை அடக்கிக்கொண்டு அவர்களை விட்டு விலகவேண்டுமே ஒழிய, அங்கு கூட குறுக்கேவிழுந்து பேசுவது புத்திமான்களுக்கு அழகில்லை. பகவான் மைத்ரேயர் பாண்டவர்கள் வனவாஸம் போனதும் துர்யோதனனிடம் வந்து புத்திமதி கூறுங்கால் அவன் அதைக்கவனியாது கர்ணாதியருடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு தொடைதட்டிக் கொண்டிருக்க, அவர் 'உன் தொடையே உனக்கு உயிர் ஸ்தானமாகி, அதில் அடிபட்டு நீ மாளக்கடவாய்' என்று இட்ட சாபத்திற்கு ஆளாகும்படி நேர்ந்தது. அந்த துர்யோதனனே பகவான் அவன் ஸபையிலெடுத்த விச்வரூபத்தைக்கண்டு நகைத்து 'செப்படிவித்தை பேஷ்' என்று சித்திரம் பேசி, முடிவில் 'என்னுள் இருக்கும் ஈசன் என்னை

---

(257-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜலத்திலிருந்துவிட்டதாக நினைத்து, சிறிது தேகமுயற்சிசெய்து தேக அனலை எழுப்பிக்கொள்.

நாடு கொடாதே என்று தூண்ட நான் எப்படிக் கொடுப்பது! எல்லாம் ஈசன் செயல்' என்று குதர்க்க விசித்ர வேதாந்தம் பேசி பகவத் அபராதியானான். ஆகவே பெரியோர் கூட்டத்தில் சித்திரம்பேசிப் பாபத்திற்குஆளாகாது, சித்திரம்போலப் பேசாதிருந்து அப்படியே ஒய்ந்து நின்று நிலைத்துவிட முயலவேண்டும் சான்றோரினத்திருக்க விரும்பிய ஸாது.

(2) மனம் வியக்கச் சொல்லேல்:—வீணாக மனதிற்கு ஒரு குதூஹலக் கிளர்ச்சி உண்டாக்கி அதனால் மேல் உள்ள நடத்தை நல்வழிப்பட இடமில்லா வீண் விசித்திர விஷயங்களைப் பேசாதே என்பதும் இச்சூத்திரத்தின் பொருள் தான். தற்கால நாகரிகம் வெளிப்பட்டு சித்திரம் பேசுவதோடு நில்லாது சித்திரம் படித்தல், சித்திரம் பார்த்தல், சித்திரம் உடுத்தல், சித்திரம் உண்டல், சித்திரம் நடித்தல் முதலிய பலவித விசித்திர விஷய அனுபவ காரியங்கள் ஏற்பட்டுவிட்டன. இங்கு பேசேல் என்பதனுள் முற்கூறிய சித்திரத் தொழில்களை எல்லாம் கொள்ளலாம். எல்லாவித சித்திரத் தொழில்களுக்கும் சித்திரம் பேசுவதே முதலில் நடைபெறவேண்டும். ஆகவே சித்திரம் பேசுவதின் கொடிய காரியங்களை நன்குணர்ந்து அந்த ஆதாரத்தைத் தகைந்து தடுத்துவிட்டால் மற்றவைகள் வேரற்ற மரம்போல் அழிந்துவிடும். அதுபற்றியேதான் மற்றவைகளை அடக்கி ஔவையார் சித்திரம் பேசேல் என்று மாத்திரம் நிறுத்திவிட்டனர். ஸாதாரண வாழ்க்கை விஷயமாகவாவது, ஈசவிஷயமாகவாவது இல்லாத விநோதப் பேச்சுக்களைப் பேசுவதே சித்திரம் பேசுவது. தற்கால நடை உடைபாவனைகள், நாவல் என்ற புத்தகங்கள்நாடக ஸர்கஸ் தியேடர்இவைகளைசிரத்தையாகப்பார்த்தல், கண்ட இடத்திலும் தோன்றிய காலத்திலும் ருசியுள்ளதை தின்னுதல், கண்டபடி மனம்போனபோக்கே நடந்து கொள்ளுதல் இவைகளை சிறந்ததெனக்கருதி வார்த்தையாடுதல்தான் சித்திரம்பேசல் என்பது. இப்பேச்சால்இவைகளில் தொழிற்படவேண்டுமென்ற ஆவலுண்டாகி ஒரு வாழ்நாள் எல்லாம் வீணாய்ச் சிதறிப்போய்விடும். ஆகவே இவைகளுக்குக் காரணமான விநோதப் பேச்சைக் கூடியவரை பேசாமலே பழகிவரவேண்டும் தன் ஜன்மத்தை ஈடேற்றிக்கொள்ளக் கருதுபவன். இவ்வாறு பழகி ஜீவன் முக்தி பெற்றோரிடம் இயற்கையாகவே அமைந்துகிடக்கும் சித்திரம் பேசாமையை கைவல்ய நவநீத நூலாசிரியர்:—

சென்றது கருதார் நாளைச்சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பர் வெயினிலவாய்விண்விழுது வீழ்ந்து
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்று தீதென்னார் ஸாக்ஷி நடுவான ஜீவன் முக்தர்.
இந்த நிச்சயம் முத்தருள நுபவ மிருப்பது எப்படி என்றால்
சிந்தை யற்ற பூமண்டல ராஜனும் சிசுவும் போல் சுகமாவர்
பந்த முத்திகள் மறந்துபோம் உண்டென்று பலர் சொல்லினை கையாவர்
அந்தரத்தை உண்டு மிழ்ந்ததோர் கொசுகெனுமவர்களை நகையாரோ.

இப்படி நமதுவாழ்நாள் ஸபலமாகும்நிலையில் காம்பீரியமிருக்குமாயின் இதை அடைய அந்த காம்பீர்யத்தை சற்று முயற்சியால் நாம் அடைய வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமல்லவா? அதற்கு நல்ல உதவியாக இருக்க சித்திரம் பேசேல் என்றார் ஔவை. விஷய விசித்திரங்களை ஒரு பொருட்டாகஎண்ணிமனதை அவ்வழி பாய்ந்தோட விடாதிருப்பதில் அவ்வழிப்பேச்சைத் தடுத்த பின்னர்தான் அதற்குக் காரணமான மனச்சஞ்சலம் வெளிப்பட அதைத்தகைய முயன்று விருத்தியாகலாம். நெருப்பென்றால் வாய் வெந்து போய்விடுமோ என்று குதர்க்கம் பேசி கண்டபடி விஷய விசித்திரங்களைப் பேசிக்கொண்டிருந்தால் அதற்குக் காரணமான துர்வாஸனையின் பலம் தெரியாது: அதற்கு நாம் அடிமையாகித் தத்தளிக்கும்படிதான் ஆகும். ரிச்யசிருங்காதி மஹரிஷிகளில் அநேகர் சித்திரம் பேசி நின்றதால் தவம் கலைந்து உலகில் இழுபட்டுத் திண்டாடினர் என்று புராணங்கள் கூறி இந்த ஸூத்திரத்தை விளக்கி, அதற்கே இடங்கொடாது விசுவாமித்ராதி ரிஷிகள் மேன்மைபெற்று முத்திபெற்றனர் என்று முடிவுகூறும். ஆகவே நம்மால் கூடியவரையில் விஷய விசித்திரங்களை அதிகமாகப் பாராட்டாது காலங்கழித்தால்தான் மானிட உடலெடுத்ததாலாய பயன்பெற உள்ளபடி முயன்றவராவோம்.

# உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

(பகுதி 6-பக்கம் 111-இன் தொடர்ச்சி)

### 46. அத்யாத்ம உபநிஷத் (73)

பிறப்பற்ற தனிப்பொருள் எப்பொழுதும் ஹ்ருதய குஹையி லுள்ளது. அதன் தேஹங்கள்தான் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், மனஸ், புத்தி, அகங்காரம், சித்தம், அவ்யக்தம், அக்ஷரம், ம்ருத்யு ஆகிய இவைகள் எல்லாம். இவைகளுடே அது பரவி இருந்தும் அவைகளால் இது உணரப்படமாட்டாது. இவ்வாறு எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருந்து பாபம் நீக்கி பரிசுத்தப்படுத்தும் வஸ்து ஏகதேவதையான ப்ரபு நாராயணனே.

அறிவுடையோர் ப்ரஹ்மத்யானத்தால் ஆத்மாவைவிட வேறாயுள்ள தேஹ இந்திரியாதிகளில் நான் எனது என்ற எண்ணங்களைவிட்டு, புத்தியையும் அதன் காரியங்களையும் பார்த்திருக்கும் ப்ரத்யகாத்மாவை உணர்ந்து நானே அது என்றிருந்து மற்றவைகளில் உள்ள ஆத்மபுத்தியைத் தொலைக்கவேண்டும். இதற்கு தேஹ, லோக சாஸ்திர வாஸனைகளை வேரறுக்கவேண்டும், தன்னில் நிலைபெறும் யோகியின் மனம், ச்ருதி யுக்தி அனுபவங்களால் எல்லாவற்றின் ஆத்மாவும் தன்னாத்மாவே என்று வரும் உணர்வால் அழிந்தே போய்விடும். இதற்கு தூக்கம், வம்பு, விஷயம் இவைகளுக்கு இடங்கொடாது, சண்டாளனைக் கண்டால் ஒதுங்குவதுபோல தேஹ ஸம்பந்த பாவனைகளைவிட்டு விலகிப் பழகவேண்டும். குடத்துள்ளிருக்கும் வெளியை பரந்துள்ள வெளியுடன் சேர்த்துவிடுவதுபோல தன் ஆத்மாவை பரமாத்மாவில் கரைத்து மாறாதிருந்து அண்ட பிண்ட சராசரங்களை எல்லாம் மல பாண்டம்போல் ஒதுக்கவும், க்ருதக்ருத்யனாகவேண்டுமெனில் தேஹத்தில் வரும் நான் என்ற புத்தியை சிதாத்மாவில் கரைத்து பேதப்பூண்டறும்படி செய்து, கேவலமேயாகி, ப்ரபஞ்சமெல்லாம் கண்ணாடி ப்ரதிபிம்பம்போல எதில் தோற்றுகிறதோ அந்த நானே ப்ரஹ்மம் என்றிருந்து விடவேண்டும். இப்படி அகங்காரத்திலிருந்து விடுபடும்ஒருவன் கிரஹணத்திலிருந்து விடுபட்ட பூர்ண சந்திரன்போல விளங்குவன்.

கர்மம், எண்ணம், வாஸனை, இவைகளில் முறையே முன்னது நீங்க பின்னதாக நீங்கி முடிவில் மோக்ஷமாகிய ஜீவன்முக்தி கைகூடும், எல்லாவற்றையும் எப்பொழுதும் ப்ரஹ்மமே என்று கருதிப் பழகுவதாகிய ஸத்வாஸனையால் எல்லா வாஸனைகளும் அழியும். ப்ரஹ்ம நிஷ்டையில் அச்ரத்தை வரவேகூடாது. இதைத்தான் மரணமென்பர் பெரியோர். அறிவுடையோர் சற்று பராக்காயிருந்தாலுங்கூட விலகிய மாயை நீருட்பாசிபோல வந்து கவிந்துவிடும். உயிருள்ளபொழுதே கைவல்ய மடைந்தவன் இறந்த பின்னும் அதிலேயேதானிருப்பன். நிர்விகல்ப ஸமாதியில் ஆத்மாவாகவே இருந்தால்தான் மனமுடிச்சுச் சிதறும், அஞ்ஞானம் அழியும்.

இந்நிலைவர எல்லாவற்றிலும் ஒருவித உபேக்ஷை புத்தி வரவேண்டும். ப்ரஹ்மாமுதல் புழு வரையில் எல்லா உபாதிகளும் பொய்யே. எங்கும் ஆத்மா ஒன்றே உள்ளது. ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர், இந்திரன், ப்ரபஞ்சங்கள் எல்லாம் ஆத்மாதான். ஆத்மாவைவிட வேறானவைபோன்ற வஸ்துக்கள் ஸம்பந்தத்தை மனதைவிட்டு நீக்கினால் ஒருவித பேதமும் இல்லாப் பரம்பொருள்தான் விளங்கும். திரிபுடி நீங்கி ஆத்மாவாக மிஞ்சிவிடின் அனாத்மத்தோற்ற காரணமான அஞ்ஞானம் இராது அகீத ஏகவஸ்துவில். லேசமாத்திரமான ஸுஷுப்தியில்கூட இது காணப்பட்டாதே! மாறுபாடு சித்தத்தையே பொருத்ததால் அதை ஆத்மாவில் கரைத்துவிடின் உள்ள வெளியெல்லாம் ஆனந்தமாகத்தான் மிஞ்சிவிடும்.

வைராக்யம், உணர்வு, ஒதுக்கம், ஓய்வு இவைகளுள் முறையே பின்னது முன்னதன் முடிவு. இவைகளுள் ஒன்றில்லாவிடினும் பின்னது நிலைக்காது. ஒப்பாகிய ஆத்மானந்தத்தை அணுகும் நிவர்த்திமார்க்கம் ஒப்புயர்வற்றது. மாயையை உபாதியாக உடைய ஈசன் ஜகத்காரணனான மற்றொன்று நான் என்பதன் வேற்றுமைகளில் மனத்தின் மூலமாகப் பலவகைப் பட்டுள்ளது. இவைகளின் உபாதிகளைக் கருதாது ஒதுக்கி நோக்கில் ஸச்சிதானந்த பரப்ரஹ்மந்தான் விளங்கும். இக்கருத்துடைய வாக்கியங்களைக் கேட்டலே ச்ரவணம்; யுக்திகளால் இவைகள் அர்த்தம் மனதில் அமர்வதே மனனம்; இவ்வாறு அமர்ந்ததில் மனம்நிலைத்து மாறாது நிற்பதே நிதித்யாஸனம். இந்த ஸமாதி நிலையில்தான் மனம் த்யாதா, த்யானங்களைவிட்டு த்யானப்பொருள் மாத்திரமாக பின்னர் காற்றில்லாவிடத்துவிளக்குப்போல்நின்று விடும். பின்னர்தான் இவைகள் ஞாபகம் கிளம்பும். இதனால் ஸகல கர்மங்களும் அழியும். இதற்கு தர்மமேகம் என்றும் பெயருண்டு, இதில் ஏற்படும் மனதின் தன்மையால் பாப புண்யங்கள் இரண்டும் கழன்றுவிடும். வாஸனைகளும் அழிந்துவிடும். உள்ளங்கை நெல்லிக்கனிபோல எல்லாம் வெட்டவெளியாகிவிடும். வாஸனை வெளிநோக்காது தகையப்படுங்கால்தான் வைராக்யத் தொடக்கம். நான என்று பிரிக்கும் எண்ணம் கிளம்பாதிருத்தலே உணர்வின் முடிவு. இவ்வாறு அடங்கியது மறுபடி கிளம்பாமலே போகுங்கால்தான் உபரதியாகிய ஒதுக்கம் தொடங்கும் ஆனந்தமாக நிர்க்குண ப்ரஹ்மத்திலேயே நிலை பெற்றிருப்ப

வனே ஸ்திதப்ரஞ்ஞனெனப்படுவன். ஆழ்ந்த விசாரணையினால் ப்ரஹ்மாத்ம ஐக்கியத்தில் நிலைபெறும் புத்திக்கு ப்ரஞ்ஞை என்று பெயர். இதற்கு நிர்விகல்ப சின்மாத்திர நிலைதான் உண்டு. இப்படிப்பட்ட நிலையை அடைந்த ஜீவன்முக்தனிடம், தேஹேந்திரியங்களில் நான் என்ற புத்தியும், மற்றவைகளில் பேதபுத்தியும் இராது. ஜகத் ஜீவபர ஐக்யம் இவைகளில் ப்ரஹ்மமாகவே இருக்கும் தன்மை, பிறப்பின்மை, ப்ராரப்தமின்மை இவைகள் அமைந்திருக்கும்.

முக்தனுக்கு உண்மையாகப் பார்க்குங்கால் ஒருவித ப்ராரப்தமும் இல்லை ஆனால் வெளியிலிருந்து பார்க்கும் அஞ்ஞானிகள் திருஷ்டியில் அவனை ஸுகதுக்காதிகள் அனுபவதாகவும், அவன் மறிப்பதாகவும் தோன்றும் ஞானம் வருவதற்கு முன் பலிக்கத் தொடங்கிய ப்ராரப்த பலத்தால். ஆதலால் இந்த ப்ராரப்தம் அவனை அனுபவதாகவும், அவன் உயிரோடிருப்பதாகவும் நமக்குத் தோன்றுவதற்குக் காரணம் கூறி நம்மைத் திருப்திப்படுத்த வேதம் வெளிநோக்கில் புலி எனக்கருதி எய்யப்பட்ட அம்பு தடைபடாது அது பசுவெனக் கண்டபின்னும் போய்ப் பாய்வது முதலிய திருஷ்டாந்தங்களால், ஸமாதானப்படுத்துகிறது. அவன் நோக்கில் ப்ராரப்தம்கூட இல்லைதான், அனுதம் ஸுகதுக்கங்கள் தேஹம் ஒன்றும் அவன் நோக்கில் இல்லவே இல்லைதான்.

எல்லாம் ஸச்சிதானந்த பரிபூரணம்தான், ஒன்றே இரண்டற்றது, மனவாக்குக்கு எட்டாதது, ஸாதாரண தர்மங்கள் ஒன்றும் இல்லாதது இதைத் தன்னுள் உணருபவனே வித்தன். இவனுக்குத்தான் தானே எல்லாம் என்ற மாறா உணர்விருக்கும். இந்நிலையில உலகெங்கே? எப்படித் தோன்றி ஒழிகியது? என்ன ஆச்சரியம்! கொள்ளுவது எதைத் தள்ளுவது எதை? உள்ளது ஆத்மாதானே! வேறில்லையே! 'இந்நிலையேதானிருப்பேன், ஆனந்தமாக, ஆனந்தம்தான் நானுதலால்' என்ற உணர்வு ஊறிக் கொண்டிருக்கும்.

இந்த வித்யை அபாந்தராத்மா, ப்ரஹ்மா, கோர ஆங்கிரஸ், ரைக்வர், ராமர் இவர்கள் வழியாக முறையே இறங்கி மானிடர்களிடம் பரவியது. இது தான் நிர்வாண வித்யை, வைதிகவித்யை உபநிஷத்.

### 47. பிக்ஷுகோபநிஷத் (60)

மோக்ஷ இச்சை உடைய பிக்ஷுக்கள் நான்கு விதம்: அவர்கள் குடீசகர், பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் ஆகிய இவர்களே. எல்லோரும் விதிவசம் புக்கு உட்பட்டே நடந்துகொண்டு தனிமையாக இருந்து போகவழியால் மோக்ஷமடைய முயல்வர்.

**குடீசகர்:**—எட்டுகவளம் தினம்சாப்பிட்டு காலம் தள்ளுவர். கௌதமர், பரத்வாஜர், யாக்ஞவல்கியர், வஸிஷ்டர் இவர்களே இதற்கு உதாரணம். **பஹூதகர்:**—திரிதண்டம், கமண்டலு, சிகை, யக்ஞோபவீதம், காஷாயம் இவைகளுடன் ப்ரஹ்ம ரிஷிகள் வீட்டில் பிச்சை வாங்கி எட்டு கவளம் உண்டு காலம் தள்ளுவர். **ஹம்ஸர்கள்:**—கிராமத்தில் ஒரு இரவு, பட்டணத்தில் ஐந்திரவு, க்ஷேத்ரங்களில் ஏழிரவு, கோமயம் மூத்திரம் இவைகளை ஆஹாரமாகக்கொண்டு சாந்திராயணாதி தபஸ்ஸுக்களால் காலந்தள்ளுவர்.

**பரமஹம்ஸர்கள்:**—துணியுடனும் அல்லது இல்லாமலும் இருப்பர். மரத்தடி, பாழ்மனை, சுடுகாடு கோயில்கள், குடிசைகள், எறும்புப்புற்று, குயவன் சாலை, அக்னிஹோத்ரசாலை, மணற்றிட்டு, யக்ஞபூமி, குகை, பிளவுகள், பொந்துகள், மலை அருவிகள் ஆகிய இவைகளே இவர்கள் இருப்பிடம். இவர்கள் த்வந்தாதீதர், ஸமதிருக்குக்கள், குறித்தகாலத்தில் வாங்கி உண்பவர்கள், பிறந்தமேனிக்கிருப்பவர். ஆசையற்றவர், சுக்லத்யானபரர், ஆத்மஞானிகள், சுத்தமனத்தால் ப்ரஹ்மத்தை அனுபவிவிடுவதால் இவர்கள் ஸ்வபாவிகள் ஒழுங்குப்படி தேஹத்யாகம் செய்வர்.

## மாதவீ கங்கணம்

## CHILDRENS' & LADIES PAGES

### முதல் பாகம்

### முதல் அதிகாரம்

### விளையும் பயிர் முளையிலே தெரியும்

அக்பர் சக்ரவர்த்தி அரசாட்சிசெய்துவருங்காலத்திலே 1570 ஆண்டில் ஒரு நாள் மாலை நேரத்தில் மூன்று குழந்தைகள் கங்கையாற்றங் கரையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த இடம் மிகவும் ரமணீயமாயும் மனோஹரமாயும் இருந்தது; இத்தேச சரித்ரத்தில் ப்ரஸித்தமான ஸம்பவங்கள் எத்தனையோ இங்கு நிகழ்ந்திருக்கின்றன. இந்த அகன்ற நதியானது கிழக்கு முகமாய்ப் பலநூறு மைல் தூரம் பாய்ந்துவந்து இந்த இடத்தில் ராஜமஹால் என்னும் குன்றுகளைச் சுற்றி வளைந்து திரும்பித் தென் திசையாக ப்ரவஹிக்கின்றது. இந்தக் குறுகிய வாயிலின் வழியாக மேற்கு ப்ரதேசத்திலிருந்து படையெழுச்சி அலைகள் பலதடவையும் வங்காள நாட்டின் செழித்த ஸமபூமிகளை நோக்கிப் புரண்டு வந்திருக்கின்றன. ராஜவம்ச ஸ்தாபகர்கள் பலரும் அரசு சூழ்ச்சிக்கேற்ற இந்த ஸ்தானத்தில் பல முறையும் தம் அதிகாரத்தை நிலைபெறச் செய்திருக்கின்றனர். கௌடம், தொண்டம், ராஜமஹால் முதலிய இடங்கள் இக்காலத்தில் எளிய பட்டணங்களாகவோ ஜனங்கள் அதிகமில்லாத கிராமங்களாகவோ இருந்தபோதிலும், முற்காலத்தில் ஹிந்து ஆப்கானிய, மொகலாய அரசர்களும் வெற்றி வீரர்களும் அரசாட்சி செய்துவந்த ப்ரதான பட்டணங்களாயிருந்தன. இதுவுமல்லாமல் வங்காள நாட்டின் ஸௌபாக்கிய தௌர்பாக்கிய கதிகளைத் தீர்மானிப்பதாய் அடிக்கடி உண்டாகிய ராஜ்ய ப்ரளயங்களில் உபய பக்ஷங்களில் ஏதாவதொன்றைச் சேர்ந்திருந்த அஞ்சா நெஞ்சரா

(இதன் தொடர்ச்சி 262-ம் பக்கம்)

கிய வீரர்களையும் திடஸங்கற்பமுள்ள தலைவர்களையும் கொண்ட ஒரு வம்சமானது பதினாறும் நூற்றாண்டில் நடந்த போர்களால் இந்த ப்ரதேசத்திலேயே தழைத்தோங்குவதாயிற்று:

இவ்வளவு உலகப்ரஸித்தியும் இயற்கையழகும் வாய்ந்த இடத்திலே மேலேகண்ட மூன்று குழந்தைகளும் மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் பசுமையான நெற்கதிர்கள் காற்றினால் அசைவுற்றுக் கொண்டிருக்கும் மாண்டா ஸமநிலங்கள் உலகத்திலே இனிப்பிலும் சேர்த்தியிலும் சிறந்த கனிகளை இன்னும் தருவதான மாந்தோப்புகளின் தொடர்ச்சியான வரிசையால் ஓர் இருண்ட ரேகைபோல் விளங்கின. அவர்களுக்கு எதிராக புண்ணிய தீர்த்தமாகிய கங்காநதி பாய்ந்து கொண்டிருந்தது. அந்நதிக்கு அப்புறம் ராஜமஹால் குன்றுகளின் செங்குத்தான சிகரங்கள் உயரமாய்க்கிளம்பியிருந்தன. ஆற்றிலோ சாமான்கள்நிறைந்த கணக்கற்ற படகுகள் அன்றிரவு தங்கியிருப்பதற்காக அங்கே நங்கூரம் போடப்பட்டிருந்தன. அப்படகுகளிற் சில வங்காளத்தில் உற்பத்தியாகும் சர்க்கரை, உப்பு, பருத்திவஸ்திரங்கள், பட்டு பீதாம்பரங்கள் முதலியவற்றை வட இந்தியாவுக்கு ஏற்றிக்கொண்டு போகிறவைகளாகவும் மற்றவைகள் பேஹார்நாட்டு நவதான்யங்களையும், காசி பட்டணத்துப் பித்தளை பாத்ரங்களையும் சித்ரப்பூம் பட்டாடைகளையும் மேலே இந்தியாவின் மண்டலாதிபத்ய நகரங்களின் அழகிய கைத்தொழில் சாமான்களையும் கொண்டு வருபவைகளாகவும் இருந்தன. அக்காலத்தில் அகலமும் ஆழமும் அதிகமாயுள்ள கங்காநதியே வட இந்தியாவில் நடந்து வந்த வர்த்தகத்துக்கு ராஜமார்க்கமாயிருந்தது. அவ்வாற்றில் மேலுங்கீழும் போய்வந்து கொண்டிருந்த ஆயிரக் கணக்கான படகுகள் மெல்லச் செல்பவைகளாய் இருந்தபோதிலும் அழகிய உருவங்களுடையனவாய் அதன் அகன்ற நீர்ப்பரப்பை கவிந்து கொண்டிருக்கும் காட்சியானது இன்னும்உயிருடனிருக்கும் வயோதிகர்களுடைய ஞாபகத்திலிருக்கலாம். இக்காலத்திலோ ரயில் மார்க்கம் ஏற்பட்டுவிடவே நதிமார்க்கமாய் நடந்துவந்த வர்த்தகம் குறைந்துவிட்டது; அன்றியும் படகும் மாட்டு வண்டியுமே போக்குவரவுக்குரிய ஸாதனங்களாயிருந்த காலத்தில் விட இக்காலத்தில் ப்ரயாணம் அதி சீக்ரத்தில் நடக்கிறது. ஆனால் அக்காலத்தில் உயிர்வாழ்க்கை அமைதியுடையதாயும், ஸ்திரீ புருஷர்கள் தத்தம் பரம்பரையான தொழில்களைச் செய்துகொண்டு அதிக அலைச்சலின்றி ஓய்வு உடையவர்களாயும், தங்கள் கிராமங்களில் கீழ்த்திசையாருக்குரிய ஆடம்பரமற்ற ஸாமான்யமான வாழ்க்கை சுகத்தை அதிகமாய் அனுபவித்தவர்களாயும் இருந்திருக்கலாம்

நக்ஷத்ரங்களின் மங்கிய ஒளியிலே இரண்டு சிறுவர்கள் அவ்வாற்றங்கரையில் மண்ணையும், மணலையும் குச்சிகளையுங் கொண்டு சிறுவீடுகள் கட்டிக்கொண்டிருக்க ஒற்றைநாடி சரீரமும் கருத்த விழிகளுமுள்ள ஒரு பெண் மௌனமாய் உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாள். அப்போது ஸூர்யன் அஸ்தமிக்க இரவின் இருள் எங்கும் சூழ்ந்துகொண்டது. சமீபத்திலுள்ள வீரநகரம் என்னும் பட்டணமானது மாந்தோப்புகள் அடர்ந்த ஓர் இருண்ட ரேகையாகத் தோன்றியதேயல்லாமல் மற்றபடி அநேகமாய்க் கண்ணுக்குப் புலப்படவில்லை. மரங்களின் இடையில் சில விளக்குகள் மினுக்மினுக்கென்று ப்ரகாசித்துக்கொண்டிருந்தன ஆற்றங்கரையோ இப்படிக்கன்றி அதிக சுறுசுறுப்புள்ள காட்சியுடையதாயிருந்தது. படகுக்காரர்கள் பகலெல்லாம் இறக்குமதி ஏற்றுமதி விஷயமாய் உழைத்துவிட்டு இரவில் உல்லாஸத்துடன் பாடிக்கொண்டிருந்தனர்.

ராபோஜனத்துக்காக ப்ரதிபடகிலும் தீமூட்டப்பட்டிருந்தது. அப்பாலகர்கள் இருவரும் ஸமவயது —அதாவது ஸுமார் பதினைந்து வயதிருக்கலாம்— உடையவர்களாய்க் காணப்பட்டபோதிலும் உருவத்திலும் குணத்திலும் ஒருவருக்கொருவர் எவ்வளவோ தாரதம்யமிருந்தது. ஸிரீஷ் என்பவன் கள்ளங்கபடு அற்றவன்; சூதுவாது இல்லாதவன். மஹாபலசாலி, நல்ல திடகாத்ரன். யௌவன பருவத்திற்கேற்ற ஸௌந்தர்யமும் அவனிடம் பொருந்தியிருந்தது. நரேந்த்ரனுடைய ஒளிபொருந்திய தேககாந்தி அவன் கௌரவமான வம்சபாரம்பர்யத்தையுடைய உயர்குடியிற் பிறந்தவன் என்பதை அறிவித்தது. அவனுடைய அழகுவாய்ந்த சரீர அமைப்பும், ஸுகுமாரமான வடிவமும் வசீகரமான முகமும் பார்ப்பவர் கண்களைப் பறிப்பதாயிருந்தது. அவனுடைய விசாலமான நெற்றியின்மேற்புறத்தில் இரண்டு மயிர்ச்சுருள்கள் தவழ்ந்து கொண்டிருந்தன. அவனுடைய கரிய விழிகள் அவன் மணலில் இங்குமங்கும் ஓடித்திரியும்போது ஸந்தோஷத்துடன் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. இவ்வளவிருந்தும், அவன் எளிதில் அற்பத்துக்கும் கோபம் கொள்பவனாயிருந்தபடியால், அவன் முகமானது கோபாக்னியால் விகாரமடைந்தது. அச்சருணங்களில் அவனிலும் பலசாலியான அவனது தோழன் அவன் முகத்தில் விழிக்கமாட்டான்.

பிறப்பினாலாவது செல்வத்தினாலாவது உண்டாகக்கூடிய அநுகூலங்கள் யாவுமின்றிப் பிறந்த ஸிரீஷ் நல்ல புத்தியும், பொறுமையும், ஸ்திரமான ஊக்கமும் உடையவன். நரேந்த்ரனோ ஐச்வர்யத்திலேயே புரள்பவன்; அப்ரதேசமெங்கும் மிகவும் கௌரவிக்கப்பட்ட ப்ரஸித்தமான ஒரு பட்டத்துக்குப் பாத்யஸ்தன். தகப்பனிடமிருந்து பிள்ளைக்கு வம்சக்ரமமாய் வருவதாகிய கூரிய அறிவும் அவனுக்குப் பிறப்பினாலேயே அமைந்திருந்தது. ஆயினும் சாந்தம் என்னும் ஒரு நற்குணம் மாத்திரம் இராமையினால் இவ்வளவு பாக்கியங்களும் அவனுக்கு ஆற்றிற் கரைத்தபுளி போல் பயனற்றுப் போயின. அவன் எடுத்த கார்யமெல்லாம் அபஜயமாகவும் துக்ககரமாகவுமே முடிந்தன. இது ஒரு பெருங்குறை.

அன்று ஸாயங்காலம் நக்ஷத்திர வெளிச்சத்தில் மணல்வீடு கட்டிக்கொண்டிருந்தபோது நரேந்த்ரனுக்கு நிச்சயமாகவே அபஜயமுண்டாயிற்று. ஸாதாரணமாக ஸாமார்த்தியமும் மதியூகம் உடையவனாயிருந்த போதிலும், அருகில் மௌனமாய் நின்றுகொண்டிருந்த அந்த ஒற்றைநாடிப்பெண் தன் வேலையைக் கண் கொட்டாது பார்த்திருப்பதைக்காண அவனுக்குக் கூச்சமுண்டாயிற்று. ஹேமலதை சாந்தமும் தயையுமே ஒன்று சேர்ந்து உருவெடுத்துவந்த பன்னிரண்டு ப்ராயமுள்ள ஓர் இனிய பெண் ரத்னம். அப்பெண்மணியை நரேந்த்ரன் குழந்தைப் பருவமுதல் அறிவான். ஸ்திரமில்லாமல் க்ஷணத்துக்குக்ஷணம் மாறி மாறி உள்ளத்திலெழும்உணர்ச்சியால் தனக்கன்பான வஸ்துவினிடத்தில் அதிக ஆசை வைத்திருக்கும் ஒரு குழந்தையைப்போல் நரேந்த்ரன் ஹேமலதையை நேசித்து வந்தான். அநுதாபத்துடன் செவிகொடுத்துக் கேட்கும் அப்பெண்மணியினிடத்தில் நரேந்த்ரன் தன்னுடைய அந்தரங்க வருத்தங்களையும், தன் உள்ளத்திலெழும் பேரவாக்களையும் ஸவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்வான்.

அச்சிறுவனுக்குண்டான உணர்ச்சிகளும், அவன் பட்ட கஷ்டமும், கொண்டிருந்த ஆசையும் இத்தன்மையனவென்று அவ்விளங்கொடிக்குச் சிறிதும் புரியவில்லையாயினும், அவள் அவனிடத்தில் வேறெவருக்குமில்லாத அநுதாபங்கொண்டு அடிக்கடி அவனுக்கு ஆறுதல் கூறிவந்தாள். அவ்விருவரும் அந்தரங்கநேசத்தால் ஒருவருக்கொருவர் கட்டுண்டு வளர்ந்து வந்தார்கள். அந்நேசமும் வெளியாருக்குத் தெரியக்கூடாததாயிருந்தபடியால் இன்னும் தீவிரமாய்ப் போஷிக்கப் படுவதாயிற்று.

இவ்வாறு நேசமாய் வளர்ந்து வருகையில் விரீஷ் என்பவன் இவர்களுக்கிடையில் வந்து தோன்றினான். ஹேமலதை அச்சிறுவனிடம் அதிக அன்புடையவள், இருவரும் விளையாட்டுத் தோழர்கள். விரீஷ் அதைவிட அதிகமாய் ஒன்றும் எதிர்ப்பார்க்கவில்லை. அவன் அதவா மிஞ்சிமிஞ்சி அதிகமாய் மனோராஜ்யம் செய்தாலுங்கூட அந்த ப்ரதேசத்தில் அப்போது ஸர்வாதிகாரியாயிருந்த அவள் பிதாவுக்கு ஏகபுத்ரியாகிய அந்தக் கட்டழகியை அடையவேண்டுமென்ற எண்ணம் அவனுடைய மனதில் ஒருபோதும் உதித்ததில்லை. பொறுமையும் கருணையும் பொருந்தியிருந்த அவனது கண்கள் ஒருவராலும் இன்னதென்று அநுமானிக்கமுடியாத ஆழ்ந்த சிந்தையையும் தீர்க்காலோசனையும், உறுதிப்பாடும் அவனிடம் குடிகொண்டிருப்பதை உணர்த்தின. அவனுக்கும் ரஹஸ்யமான பேரவாக்கள் இருந்திருக்கலாம்; நாம் அறியோம்; ஆனால் அப்படி ஏதாவது இருந்திருந்தாலும் அவன் அவற்றை எக்காலத்தும் வெளியிட்டதில்லை.

இன்றிரவு தான் செய்யும் வேலையை ஹேமலதை இமைகொட்டாது கவனித்துவருவதைக்கண்டு திருப்தியடைந்து விரீஷ் ஆத்ரப்படாமல் ஜாக்ரதையாய்த் தன் மணல் வீட்டைக் கட்டிக்கொண்டிருந்தான். நரேந்த்ரனுக்கோ எங்குமிராத லஜ்ஜையுங் கூச்சமும் உண்டாக, அவன் விரீஷினிடம் அஸூயையைகொண்டான். தன்பொறுமையை வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல் அவன் விரீஷையும் ஹேமலதையையும் அடிக்கடிப் பார்க்கலானான். விரீஷின் வேலை முடிந்து விட்டது; ஒரு மணல் வீடு கட்டியாயிற்று. எப்போது லஜ்ஜையும் கூச்சமும் தோன்றிற்றோ, அத்தக்ஷணமே நரேந்த்ரனுடைய வேலை தடைபட்டுவிட்டது. விரீஷ் கட்டிய சிறுவீடு மிகவும் அழகாய் அமையப்பெற்றிருப்பதைக்கண்டு ஸந்தோஷமடைந்து ஹேமலதை தன் மெல்லிய கைகளால் கரகோஷம் செய்தாள். அவள் அவ்வாறு கைகொட்டி விரீஷின் வேலையை மெச்சியது நரேந்த்ரனுக்குத் தேள் கொட்டியதுபோல் சுருக்கெனத் தாக்கியது; அவனுடைய கைகள் நடுக்கங்கொண்டன; குறையாயிருந்த அவனுடைய சிறுவீடும் கீழே விழுந்து விட்டது.

கையாலாகாதவனுக்குக் கோபம் வருவதற்குக் கேட்பானேன்? நரேந்த்ரனுக்குக் கோபம் அஸாத்யமாய் வந்துவிட்டது. அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அப்போது ஹேமலதையுடன் கைகோத்துக் கொண்டு விரீஷ் அவனிருந்தஇடம்வந்து, "ஏனப்பா, நரேந்த்ரா என்ன இன்று ஸாயங்காலம் ஒன்றையுஞ் செய்யக்காணோம். எங்கேபோயிற்று, நீ பெருமையாய்ப் பேசிக்கொண்ட உனது திறமை எல்லாம்?" என்று கேட்டான்.

கீழே விழுந்ததுபோக மிகுந்திருந்த பாகத்தைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டு, "இன்றைக்கு நான் ஒன்றும் செய்யப் போகிறதில்லை," என்று அஸூயையுடன் பதில் சொன்னான்.

"அப்படியானால் என்னை ஏன் ஆற்றங்கரைக்கு வரச்சொன்னாய்? நீ ஒன்றும் செய்யாததற்கு இந்தப் பெண்ணை ஏன் இவ்வளவு நேரம் காக்கவைத்தாய்? இவ்வளவு நேரமாயும் நமது செல்வக்குழந்தை இன்னும் வீட்டுக்குவரவில்லையேயென்று ஹேமலதையின் தகப்பனார் அலைந்து கொண்டிருப்பாரே"

"அவளுடைய தகப்பனாருக்கு ஸமாதானம் சொல்ல எனக்குத் தெரியும். நீ உன் வேலையைப்பார். உனக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"நரேந்த்ரா. உனது திறமைக் கேற்றவாறே இருக்கிறது உன்னுடைய குணமும், சாந்தமாய்ப் பதில் சொல்லக்கூடாதா? ஏன் இவ்வளவு ஆத்ரமும் அகங்காரமும்? உன் மணல் வீட்டுடனே போய்விட்டது போலிருக்கிறது உனது பொறுமையும்?"

"மணல் வீடு போனால் அதைவிட மேலானபொன் வீடு எனக்கு இருக்கிறது. தங்களுடையதென்று ஸ்வதந்த்ரமாய்ச் சொல்லிக்கொள்ளக் கூடிய கூரை குடிசைகூட இல்லாத கனவான்களும் இருக்கிறார்களே!"

விரீஷ் அக்காலத்தில், ஹேமலதையின் தந்தையை ஆச்ரயித்து ஜீவித்துவந்தபடியால், அவனை வேண்டு

மென்று அவமானம் பண்ணுவதற்காகவே நரேந்த்ரன் அவ்வாறு பேசினான். விரீஷுக்கு இதைக் கேட்டு மனம் ஸஹிக்கக்கூடவில்லை. ஆயினும் அவன் நரேந்த்ரனைப்போல் ஆத்ரக்காரனல்லன். தான் கோபத்தை அடக்கிக்கொண்டு விரீஷ் நரேந்த்ரனுடைய அந்தஸ்துக்கேற்ற மரியாதையுடன் விடையளித்தான்.

"நரேந்த்ரா, என்னுடைய அந்தஸ்தும் நானிருக்கும் ஸ்திதியும் எனக்கே நன்றாய்த் தெரியும். நீ அதை எடுத்துக்காட்ட வேண்டியது அநாவச்யம். என் அந்தஸ்து எனக்கோர் அவமானமில்லை. நீ உன் அந்தஸ்தை உள்ளவாறு அறிந்து உன் பாட்டனாருடைய வம்சத்துக்கேற்ப யோக்யதையும், சாந்த குணமும் உடையவனாய் நடந்து கொள்ளவேண்டுமென்பதே எனது மனப்பூர்த்தியான கோரிக்கை."

"என் பாட்டனாரைப் பற்றியும் மஹா ப்ரஸித்தி பெற்ற அவருடைய வம்சத்தார்களைப்பற்றியும் உயர்வாய்ப் பேசியது உனது நற்குணத்தைக் காட்டுகின்றதப்பா. அவர் உயிருடனிருக்கும்போது கருடனைக் கண்ட ஸர்ப்பத்தைப்போல் நடுங்கிக்கொண்டிருந்தவர்கள் இப்போது அவருடைய சொத்தையும், நாட்டையும் அபஹரிக்க ப்ரயத்னப்படுகிறார்கள். ஒரு வேளை நீயும் அவர்களுடன் ஸம்பந்தப்பட்டவனாயிருக்கக்கூடும். யாருக்குத் தெரியும் உன்னுடைய மோசக்கருத்தும் சதியோசனையும்?"

இவனுடைய வார்த்தைகளையெல்லாம் ஒருபொருட்டு செய்யயாமல் விரீஷ், "உனக்குத் தோன்றியதையெல்லாம் நீ சொல்லிக்கொண்டிரு. உன்னுடைய அசட்டு வார்த்தைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. ஹேமலதையின் தகப்பனார் இந்நேரம் அவளைக் காணாமல் அலைந்து கொண்டிருப்பார். ஆகையால் அவளையழைத்துக்கொண்டு நான் வீடு செல்லுகிறேன்" என்றான்.

இதைக்கேட்டு ஹேமலதை விரீஷின் அருகே செல்வதைக் கண்டு சற்றும் பொறாதவனாய் நரேந்த்ரன், "அடே, நீ யார், அவளை அழைத்துப்போக? எத்தனை தினங்களாயிற்று, இந்த 'கார்டியன்' வேலை உனக்கு வந்து? யார் உனக்கு இந்த உத்யோகம் கொடுத்தது?" என்று கோபத்துடன் கேட்டான்.

"நரேந்த்ரா, நான் அவளுடைய 'கார்டியன்' என்று உன்னிடம் சொல்லிக்கொள்ள வரவில்லை. ஆனால் உன்னைப்போன்ற வெறியர்களிடம் அவளிருக்க நான் பார்க்கமாட்டேன்" என்றான் விரீஷ்.

"சீ, ஒதுங்கி நில். ஆற்றோரத்துக்கு அவளை அழைத்து வந்தவன் நான் ஆகவால் வீட்டிற்கு அழைத்துப் போகவேண்டியவனும் நான்தான்" என்று அம்மூர்க்கன் பதிலுரைத்தான்.

"மரியாதையாய் நடந்து கொள்ள உனக்குத் தெரியவில்லை. முதல்முதலில் மரியாதையுடன் நடக்கக் கற்றுக்கொள். அப்புறம் நீ அவளை அழைத்துப் போகலாம். இன்றைக்கு உனக்கு மூர்க்கத்தனம் மேற்பட்டிருக்கிறது. ஆகையால் மட்டு மரியாதை தெரியாத சிறு பிள்ளையினிடம் அவளை ஒப்புவித்தல் தகாது. இன்றிரவு அவளை நான்தான் வீட்டிற்கு அழைத்துப் போவேன்" என்றான் விரீஷ்.

"எட்டி நில்லடா, ஈன ஜாதிப் பயலே, அவள் பக்கத்தில் நிற்க உனக்கு என்ன யோக்யதையடா இருக்கிறது," என்று நரேந்த்ரன் கூறியதைக் கேட்டவுடன் விரீஷுக்கு அடங்காத கோபம் ஜனித்துவிட்டது. ஆயினும் இந்த மூடப்பயலுடன் வார்த்தையாடுவதில் பயனில்லை என்றுணர்ந்து ஹேமலதையைக் கூட்டிக்கொண்டு விரீஷ் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

விரீஷ் ஹேமலதையின் இடுப்பைச்சுற்றிக் கை போட்டுக்கொண்டு போவதைக்கண்டு நரேந்த்ரனுடைய மனம் பொங்கிற்று. பித்தம் தலைக்கேறியவனாய் நரேந்த்ரன் விரீஷைப் பலமாய் அடிக்க முயன்றான். ஹேமலதை அச்சங்கொண்டு கதறினாள். விரீஷ் நரேந்த்ரனைவிட அதிக பலசாலியென்று நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். அவனை ஒரு கொடியில் அடக்கிவைக்கக்கூடிய வல்லமை யுடையவன். தன்னைத் தாக்கியவுடன் விரீஷ் அச்சிறுவனை இடுப்பில் கையைக்கொடுத்துச் சடைபோல் மேலே தூக்கி மணலின்மேல் விட்டெறிந்தான். ஐயோ பாவம்! நரேந்த்ரனுக்குப் பலத்த காயம் பட்டது. எழுந்திருக்கச் சக்தியற்று மணலின்மீது இறைக்க இறைக்க விழுந்து கிடந்தான்.

அப்பெண்ணின் முன்னிலையில் தான் தோல்வியடைந்ததைப்பற்றி அதிக அவமானமும் மனவருத்தமும் உற்றவனாய் நரேந்த்ரன் ஒரு பெரிய கல்லையெடுத்து விரீஷின் தலையைப்பார்த்துப் பலமாய் எறிந்தான். அக்கல் விரீஷின் வலதுகண்ணிற்குச் சிறிது மேலேபட்டு அங்கே நன்றாய் த்வாரமாக்கிவிட்டது. ரத்தம் ஆறாய்ப் பெருகிற்று. விரீஷ் உட்கார்ந்து தன் துணியால் ரத்தத்தைத் தடுக்க முயன்றான். ஹேமலதை இவற்றையெல்லாம் மௌனமாய்ப் பார்த்து நின்றனள். மட்டுமரியாதை மீறி துர்நடத்தையிற் ப்ரவேசித்த அச்சிறுவனை வெறுப்புடன் உற்று நோக்கினாள்; அவள் கண்களில் நீர் ததும்பிற்று. கண்களைத் துடைத்துக்கொண்டு நீரண்டைபோய்த் தன் சிற்றாடையின் நுனியை நன்றாய் நனைத்துக்கொண்டு வந்து விரீஷின் முகத்திலிருக்கும் ரத்தத்தைத் துடைத்தாள். விரீஷுக்குப் பலமான காயமில்லை; ஆயினும் அவன் எழுந்தபிறகுங்கூடக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

"ஹேமலதே! வெகு நேரமாய்விட்டது. புறப்படு, வீட்டிற்குப் போகலாம்" என்று விரீஷ் சொன்னவுடன் ஹேமலதை புறப்பட்டுவிட்டாள். இருவரும் நரேந்த்ரனைத் திரும்பிகூடப் பாராமல், கையோடு கைகோத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள்.

நன்றாய் இருட்டும் வரையில், அவன் அங்கே தனியாய்ப் பரிதாபமான நிலையிலிருந்தான். அப்போது என்னென்னவோ எண்ணங்களெல்லாம் அவன் மனதிலுதித்தன. மிக்க புராதனமானதும் ப்ரஸித்தி

பெற்றதுமாகிய ஒரு வம்சத்தின் ஸந்ததியானாகிய நரேந்த்ரன் தன்னுடைய மடமையினால் தான் நேசித்தவளிடத்தில் தன் மதிப்பைக் குறைத்துக்கொண்டான். பணிவுள்ள ஒரு பராதீனனாகிய வீரேஷ் அவனுடைய குற்றங்களைப் பெருந்தன்மையுடன் மன்னித்து அந்த அழகிய இளகிய இளங்கொடியாகிய ஹேமலதையின் உள்ளத்தைக் கவர்ந்தனன். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது போலத்தானே இவ்விஷயமும்?

## அத்யாயம்-2

### பரஸ்பரம் வைரமுற்ற வம்சங்கள்

நமது கதை ஆரம்பிப்பதற்குமுன் சில வருஷங்களாக வீரநகரம்என்னும் பட்டணத்தில் ராஜ்யப்புரட்சிகள் அநேகமும், கோரமான யுத்தங்கள் பலவும் நடந்துகொண்டிருந்தன. நான்கு நூற்றாண்டுகளாக ஆப்கானிய அரசர்கள் வங்காளத்தில் சண்டை சச்சரவுகளின்றி அமைதியாய்ச் செங்கோல் செலுத்திவந்தனர். ஆனால் வட இந்தியாவில் அக்பர் சக்ரவர்த்தி மொகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தபோது, வங்காளத்தில் ஆப்கானிய அரசாட்சி க்ஷீணதசை அடைய வாரம்பித்தது. 1574-ம் வருஷத்தில் பாட்னா நகரை அக்பர் சக்ரவர்த்தி நேரில் முற்றுகைபோட்டுக் கைப்பற்றிக்கொண்டனர்; அது முதற்கொண்டு, அபஜயம் இன்னதென்று எப்பொழுதும் அறிந்திராத மஹா பராக்ரமசாலிகளாகிய மொகலாயர்களுக்கும், பலமுறை தோல்வியடைந்தும் வீர தீரத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் கைவிடாத ஆப்கானியர்களுக்கும் வங்காளத்தில் வெகுகாலம் வரையில் போர் நடந்துகொண்டிருந்தது. ஹிந்து ஜமீன்தாரர்கள் தத்தம் க்ராமங்களையும் ஜாகீர்களையும் ஜமீன்களையும் அமைதியாய் ஆண்டு வந்தனர். ஆப்கானிய அரசர்களுக்குரிய கப்பங்களைக் கட்டிவிட்டு அவர்கள் தங்கள் ஜமீன்களில் ஸர்வாதிகாரங்களையும் செலுத்திவந்தனர். கள்வர், கொலைஞர் முதலிய குற்றவாளிகளைத் தாங்களே தண்டித்தார்கள். தங்களுடைய ந்யாயஸ்தலங்களிலேயே ஸிவில், க்ரிமினல் ஆகிய இரண்டுவித வ்யாஜ்யங்களையும் விசாரித்துத் தீர்ப்பு சொல்லி வந்தார்கள். குடிகளின் ஸுகதுக்கங்களைத் தங்களுடைய ஸுகதுக்கங்களாக எண்ணி, சண்டை சச்சரவு கலகம் யாதொன்றுமின்றி அவர்களைக் காப்பாற்றி வந்தனர். அவர்களுடைய ஸமஸ்தானங்களில் பல்வேறு பண்டிதர்களும், வித்வான்களும் கவிச்ரேஷ்டர்களும் ஒருகுறைவுமின்றி மனஸ்ஸந்துஷ்டியுடன் ஜீவித்துவந்தனர். ஸகலவிதமான கலைகளையும், நானாவித கைத்தொழில்களையும், அதிக ஊக்கத்துடன் அபிவ்ருத்தி செய்தார்கள். தாங்கள் கப்பங்கட்டும் அரசர்களுக்கு ஆபத்து வந்த காலத்து உதவிபுரியவும், தங்களுடைய நாடுகளைப் பகைவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் போதுமான ஸைன்யங்களையும், யானை குதிரைகளையும், படகுகளையும் தயாராய் வைத்திருந்தனர்.

நமது கதையின் உற்பத்திஸ்தானமாகிய வீரநகரம் என்னும் பட்டணத்தில் பழய காலந்தொட்டுப் பெருமைவாய்ந்த ஒரு ஹிந்து ராஜவம்சஸ்தர்கள் ஆண்டுவந்தனர். அக்பரும் அவரது மொகலாய வீரர்களும் பாட்னாவைக் கைப்பற்றி வங்காளமெங்கும் பரவியிருந்தபோது, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினையாமல் கடைசி ஆப்கானிய அரசனாகிய தாயுத்கான் பக்கமிருந்து போர்புரிந்தவர் வீரநகரம் ஜமீன்தாரர் ஒருவர்தான். மொகலாயரிடமிருந்தும் நகரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவராய் அவர் காட்டுக்கோடி மறைந்தபோது, அக்பரது சிறந்த தளகர்த்தர்களாகிய முநாயிம் என்பவரும் தோடர்மால் என்பவரும் வீரநகரத்து அரண்மனையைத் தமது ரதகஜதுரகபதாதிகளுடைய இருப்பிடமாக்கிக்கொண்டனர். தாயுத்கான் வங்காளத்தை அக்பருக்குக் கொடுத்துவிட்டு அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டு ஒரிஸ்ஸாவிற்குப்போய் விட்டான். அதற்கப்புறம்தான் வீரநகரம் ஜமீன்தார் தமது பட்டணத்திற்குத் திரும்பிவந்து, தோடர்மாலுக்கு மரியாதை செய்து, வங்காளத்து நூதன அதிபதிகளுக்குக் கீழ்ப்படிந்து கப்பங்கட்டுவதாய் ஒத்துக்கொண்டார்.

ஆனால், தாயுத்கானோ ஸத்யத்திற்குக் கட்டுப்படாதவனாய், மொகலாயர்களிடமிருந்து வங்காளத்தைக் கைப்பற்றிக்கொண்டு வீரநகரம் ஜமீன்தாரரை ஸைன்யங்களுடன் தன் ஒத்தாசைக்கு வரும்படிக் கட்டளையிட்டான். தைர்யமுள்ள கிழஸிம்ஹமாகிய நமது ஜமீன்தாரர் அவனுடைய ஆக்ஞையை நிராகரித்து அவரிடமிருந்து வந்த தூதர்களுக்குப் பின்வருமாறு பதில்சொல்லி யனுப்பினார்: “எப்போது தம் ராஜ்யத்தைக் காப்பாற்ற வல்லமையற்றவராயினரோ அப்பொழுதே அவர் அதை இழந்தவராகிறார். மேலும் அலர் வங்காளத்தை மொகலாயருக்கு விட்டுவிடுவதாக ஒப்புக்கொண்டு மாட்சிமைதங்கிய மஹாபெரிய அக்பருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். தம் சொல்லை மீறிநடப்பது க்ரீடம் புனைந்த ஓர் அரசருக்கு அழகல்ல. ராஜதர்மத்துக் கேற்றதன்று. அவ்வாறு, சொல்தவறுவது கேவலம் ஹீனமான கார்யம். எனது வம்சத்தில் யாவரும் அவ்வாறு இதுவரைக்கும் நம்பிக்கைத்ரோகம் புரிந்ததில்லை. ஆக்ராவின் மொகலாய சக்ரவர்த்திக்கு நான் செய்த வாக்குதத்தத்தை மீறி நடவேன். இவ்விஷயத்தை உமது எஜமானருக்குத் தெரிவியுங்கள்.”

இவ்வார்த்தைகள் தாயுத்கானுக்கு எட்டியவுடன் அவன் கோபாக்ராந்தனானான்; கண்கள் சிவந்தன. வீரநகரத்தை த்வம்ஸஞ்செய்து வயதுமுதிர்ந்த ஜமீன்தாரரை விலங்கிட்டுக் கொண்டுவரும்படி அவன் ஒரு பெரிய சேனையை அனுப்பினான். ஆனால் வயோதிகராயும் தைர்யத்திலும் ஸாமர்த்யத்திலும் சற்றுங் குறைவுபடாத அந்த ஜமீன்தார் முன்னதாய்த் தேவையான பந்தோபஸ்தெல்லாஞ் செய்துவிட்டுப்

போருக்குச் சித்தமாயிருந்தார்,நகரத்தைச் சுற்றியுள்ள செங்கல் சுவரும் கோட்டைகளும் பழுதுபார்க்கப்பட்டன. அவைகளின் மேற்புறத்தில் கூர்மையான முளைகள் நாட்டப்பட்டன. உருவின கத்திகளுடன் போர்வீரர்கள் இரவும் பகலும் ஓயாமல் நகரத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள். அடர்ந்திருந்த புதர்களில் வில் அம்பு ஸஹிதமாய் வில்லாளிகள் மறைந்திருந்தனர். இவ்வளவு ஜாக்ரதையுடனிருந்தபடியால் திடீரெனப் பட்டணத்தில் நுழைந்து நாசஞ்செய்வதற்குப் பகைவர்களுக்கு இடமில்லாமற் போயிற்று. வெகு நாளாய் யுத்தமின்றி புஜங்கள் தினவு கொண்டிருக்கும் ஜமீன்தாரர் தம்மாற் கூடியமட்டும் பட்டணத்தைக் காப்பதாகவும், தவறினல் தம் முன்னோர்கள் ராஜ்யபாரம் புரிந்த இடத்திலேயே கடைசிவரைக்கும் போர்புரிந்து தம் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் வீர சபதஞ் செய்தனர். அவரும் இதர ஸாமாந்ய யுத்தவீரர்களைப்போல் கத்தி கேடயங்களுடன் நகரப்ரதக்ஷணம் செய்துகொண்டிருந்தார்.

இவ்வகையான அற்பக்காப்புகள் எவ்வளவு காலந்தான் வீரநகரத்தைப் பகைவரிடமிருந்து ரக்ஷிக்குமென்பது தெய்வத்துக்குத்தான் வெளிச்சம். தாயுத்கானுடைய ஸைந்யமோ அதி ஸாமர்த்தியமாய்ப்பழக்கப்பட்டஸைந்யம்.ஆனல் தாயுத்கானின் விரோதி ஜமீன்தாரர் ஒருவரே அன்று; ஜமீன்தாரரைவிட பராக்ரமசாலிகளாகிய பலர் அவனுடைய சத்ருக்கள். கானின் த்ரோகச் செயலைக் கேட்டு ராஜா தோடர்மால் மறுபடியும் வங்காளம் வந்து,அம்மாகாணத்து மொகலாய ராஜப்ரதிநிதியைத் துணைகொண்டு, ஆப்கானிய அரசனை ஆக்மஹல் என்னுமிடத்தில் முற்றுகைபோட்டனர். அவ்விடத்தில் நடந்த போரில் ஆப்காநியர்கள் அபஜயமடைந்து புறங்காட்டி ஓடிவிட்டார்கள். அந்த யுத்தம்தான் வங்காளத்தில் மொகலாயருக்கும் ஆப்கநியர்களுக்கும் நடந்த கடைசியுத்தம். தாயுத்கான் ராஜா தோடர்மால் அவர்களால் சிறைபிடிக்கப்பட்டு 1576-ம் வருஷத்தில் கொலையுண்டனன். ராஜாதோடர்மால் வீரநகரத்து ஜமீன்தாரருக்குப் பேட்டிகொடுத்து அவருடைய நன்றியறிவை மெச்சி, அவருக்குச் சக்ரவர்த்தியவர்கள் உத்திரவுபடிக்கு ஒரு புதிய ஸங்கதை யளித்தார்; அருகிலுள்ள தேவிபுரம் ஜமீனும் அவர் பார்வையில் ஒப்புவிக்கப்பட்டது. ஏனெனில் அதன் ஜமீன்தாரன் ஆப்காநியருடன்கூடி மொகலாயருக்கு எதிராகப் போர்புரிந்தான்; ஆப்காநியர் அபஜயமடைந்ததால் அவன் தன் நாட்டை இழக்க வேண்டியதாயிற்று. இவைகளெல்லாம் வீரநகரத்து ஜமீன்தாரர் போர்முகத்துக் காட்டிய ராஜபக்தியை அக்பர் வள்ளல் மெச்சினதற்கு அடையாளமாக அளிக்கப்பட்ட நன்கொடைகள்.அவ்வயோதிகர் தன் புத்ரனையும் பௌத்ரனையும் தோடர்மால் முன்னிலையில் அழைத்துவந்து தாமும் தமது ஸந்ததியாரும் எக்காலும் அக்பருக்கும் அவரது வம்சத்தாருக்கும் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குதத்தஞ் செய்தார், வீரநகரத்தார் அனைவரும் அத்தினத்தையொரு ஸுதினமாகக்கொண்டாடினர்கள்; கவிகளும் பண்டிதர்களும் அக்பர் மகிபரை வாயாற வாழ்த்திக் குதூஹலித்தனம் நகரமுழுவதும். 'அக்பர் சக்ரவர்த்தி நீடூழிவாழ்க என்னும் கோஷமே பெரிதாயிருந்தது' அன்றிரவு அப்பட்டணமெல்லாம் தீபத்தோரணங்களால் பகல்போல் விளங்கிற்று. ராஜா தோடர்மாலும் அவரது நண்பர்களும் யானைமீதூர்ந்து நகர்வலம் வரும்போது வீதிகளின் இரு புறங்களினின்றும் கற்புடையமாதர்கள் புஷ்பத்தை வாரி இறைத்தனர். நகரத்தில் எங்கு பார்த்தாலும் அக்பர் தோடர்மால் முதலியவர்களைப்பற்றிய பேச்சேயொழிய வேறொரு வர்த்தமானமுமில்லை.

தேவிபுரம் ஜமீன் கிடைத்த சில மாஸங்களுக்கெல்லாம்,பூரணவயதினராகிய வீரநகர ஜமீன்தாரர் காலமாய்விட்டனர். சில தினங்ககளுக்கெல்லாம் மகனும் தந்தையைத் தேடிச் சென்றான். இவர்களுக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டிய ராஜகுமாரனுக்கு வயது இரண்டுதான் ஆயிற்று. அவன்தான் நாம் கங்கையாற்றங்கரையில் கண்ட நரேந்த்ரன். தகப்பன் பாட்டனுடன் இருவரும் ஏறக்குறைய ஏககாலத்தில் மரணமடைய நரேந்த்ரன் பால்யத்திலேயே இரண்டு ஜமீன்களுக்கும் அபரிமிதமான ஐச்வர்யத்துக்கும் அதிபதியானன்.

நெருங்கிய பந்துக்கள் இருவரையும் இழந்த நரேந்த்ரனுக்குத் தகுந்த போஷகர்கள் எவருமில்லை. அவனே அதி பால்யன்;பால்மணம் மாறாக்குழந்தை. இவ்வயதில் அவன் இரண்டு பெரிய ஜமீன்களுக்கு எஜமானனாயினன். தேவிபுறத்துப் பூர்வ ஜமீன்தாரனே ஸாமான்யன் அல்லன்;வலிய பகைவன்.அவன் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாவது தன் ஜமீனைத் திரும்ப அடையவேண்டுமென்ற ப்ரதிக்ஞை செய்தனன். இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் நரேந்த்ரன் புயற்காற்றில் அகப்பட்ட கப்பல்போலிருந்தனன்.

வீரநகரமும் தேவிபுறமும் பல வருஷங்களாகப் பரஸ்பரம்வைரமுற்றவைகளாயிருந்தன. எத்தனையோ தலைமுறைகளாக இரண்டு ஜமீன்தாரர்களும் ஒருவரையொருவர் பகைத்துப் பரஸ்பர வைரிகளாய் மல்லிட்டுவந்தார்கள். அத்தி பூத்ததுபோல் எப்போதோ சிற்சில ஸமயங்களில் இரண்டு கக்ஷியாரும் தமக்குள் ஸம்பந்தம் செய்துகொண்டனர். ஆனல் கல்யாணப்பெண் பிறந்த அகத்தைவிட்டுப் புக்ககத்துக்குச்சென்றவுடன் தமது தகப்பனரது வைரிகளை அறவும் மறந்து, கணவர்களது அபிப்ராயங்களையும் அவர்களுடைய விரோதங்களையும் முற்றிலுங் கைப்பற்றிவந்தனர். அவர்களுடைய வயிற்றிலுதித்த குழந்தைகளும் தங்கள் தாய்வீட்டாரை ஜன்மவிரோதிகளென்று எண்ணும்படிக்கற்பிக்கப்பட்டனர், ஆகையால் இவ்விதபரஸ்பர ரத்தஸம்பந்தம்ஏற்பட்டுங்கூட இரண்டு வம்சத்தினருக்கும் ஒற்றுமையும் ஸமாதானமும் உண்டாகாமலே இருந்துவிட்டது.

இரண்டு வீட்டாரும் மெய்காப்பாளர் என்னும் வீரர்களை வைத்திருந்தனர். ஒரு வீட்டார் மற்றொரு

வீட்டாரை ஸந்தித்துவிட்டால்போதும்; உடனே அடிதடி சண்டைதான். குறைந்தபக்ஷம் நாலைந்து தலைகள் உருண்டுவிடும். ஏரி குளங்களில் மீன்பிடிப்பதைப்பற்றியும் சந்தைசாவடி முதலியவைகளைப்பற்றியும் அடிக்கடி இருதிறத்தாருக்கும் விவாதம் உண்டாய்விடும் அவ்வித விவாதங்கள் உண்டாகுங் காலத்தில் முதலில் அடிதான்; பின்னால்தான் பேச்சு. கைகலந்து சண்டைசெய்து யார் வெற்றியடைகிறார்களோ அவர்கள் கோர்டாருக்குப் பூர்த்தியாய் லஞ்சம்கொடுத்துத் தாங்கள் சண்டையில் அடைந்ததை ந்யாய ப்ரகாரம் தங்கள் வசப்படுத்திக்கொள்வார்கள். தலைமுறை தலைமுறையாய்ப் பரஸ்பரம் இவ்வளவுவைரமும் சண்டைச்சச்சரவுகளும்இருந்தபோதிலும் இருவரும் காலாகாலங்களில் ஒன்றுகூடி ஒருவர்க்கொருவா மரியாதை செய்து வருவதில் மாத்ரம் இளைப்பதில்லை அக்காலத்து அவர்கள் அத்யந்தம் நேசர்களைப்போல் காணப்படுவார்கள்.

தேவிபுரத்து அதிபனாகிய நவகுமாரன் வீரநகரத்து ஜமீன்தாரின்மேல் தன் முன்னோர்கள் பரம்பரையாய் மிகவும் பய பக்தியுடன் அநுஷ்டிக்கப்பட்டுவரும் வைரியையும் விரோதத்தையும் கிஞ்சித்தேனும் அவமரியாதை செய்யாமல் பூரணமாய் மனதில் பாராட்டினான். ஸ்வபாவமாகவே அயலார் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினியிருப்பவனாகிய நவகுமாரன் வீரநகர ஜமீன்தாரரின் புகழும் நாமதேயமும் தினே தினே அதிகமாய்ப் பரவுவதைக் கண்டு மனம் பொறாதவனானான். தான் எண்ணிய எண்ணத்தை எவ்வித தந்த்ரத்தாலும்,சதியோசனைகளாலும் சூழ்ச்சிகளாலும்நிறைவேற்றுவதில் சற்றும் பின்னடையாதவனாகிய தேவிபுரத்துத்தலைவன் தன்னுடைய எதிரியை எவ்விதத்திலாவது ஒழித்துவிடவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டான். சூதுவாது சிறிதுமின்றி ஆண்மையையும் பெருந்தன்மையையுமே அணிகலனாகக் கொண்ட நரேந்த்ரனது பாட்டனாரை ஜனங்கள் ஸ்வப்நத்திலும் வாழ்த்துவார்கள்,அவர்கள் குடிகெடுக்கும் யோசனையும்,அந்தரங்க சூழ்ச்சிகளுமே அவதாரமெடுத்தது போலிருக்கும். நவகுமாரனை நிந்திக்காத தினமே கிடையாது. நரேந்த்ரனது பாட்டனாரை காணும்போதெல்லாம் நவகுமாரன் கற்றோரைக்கண்ட கல்வியில்லாத பேதைபோல் தனது சிறுமையெல்லாம் தனது ஞாபகத்துக்கு வரப்பதுங்குவான்.

ஆகையால் ஆப்கானிய அரசனான தாயுத்கான் ஆக்மஹாலுக்கருகில் மோகலாயருடன் கடைசிமுறைப் பெரும்போர் புரியும்படி சுற்றுப்பக்கத்து ஜமீன்தார்களைக் கூப்பிட வீரநகர ஜமீன்தாரர் அவனுடைய கட்டளையை மறுதலித்தபோது தன் எதிரிக்குத் தீங்கிழைத்துத் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றத் தக்க ஸமயம் வாய்த்ததெனக் கருதினான் நவகுமாரன். இத்தருணத்தில் தாயுத்கான் உதவிக்கழைத்த சுற்றுப்பக்கத்து ஜமீன்தார்களில் தானும் ஒருவனாயிருந்தது நவகுமாரனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஸந்தோஷமாயிருந்தது. உடனே வீரநகரத்துக்குச் சென்று கோட்டை கொத்தளங்களைத் தவிடுபொடியாக்கி நகரத்தைச் சூறையாடும்படித் தன் யோசனையை ஏவிவிட்டான். ஆனால் சில வேளைகளில் நாமொன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைப்பதில்லையா? ஆக்மஹால் போர்க்களத்தில் ராஜா தோடர்மால் வாகைமாலை சூடியது நவகுமாரனுக்கு அடிவயிற்றில் இடிவிழுந்தது போலாயிற்று, அவனுடைய மனோராஜ்யங்களெல்லாம் நாசமாயின அவனுடைய சொத்தெல்லாம் மாற்றான் வசப்பட்டது. அவனுடைய ஜமீனும் வீரநகரத்துடன் சேர்க்கப்பட்டது.

தான் குழந்தையாய்ப் பிறந்தது முதற்கொண்டு தோல்வியென்பது இன்னதென்றே அறியாதவன். அப்பேர்ப்பட்டவனுக்கு இப்போது தன் நாடுநகரங்களையும் வீடுவாசல்களையும் விட்டுப்போகவேண்டிய காலம்வந்தது. ஆயினும் அவன் தைர்யத்தை விடவில்லை, தன் கைகளைவிட்டுப்போன தன் சொத்துக்களை மீட்டுக்கொள்ள ஸமயம் எப்போது வாய்க்குமென்று பொறுமையுடன் ஸகல ப்ரயத்னங்களும் செய்துகொண்டிருந்தான்? அவனது ஆப்த நண்பனும், அமைச்சனுமாகிய கோகிலதாஸ் தன் எஜமானனுக்கு உண்டான கஷ்டங்களைத் தானும் பாகித்துக்கொண்டான்.

ஆதிமுதற்கொண்டே மொகலாயருக்கும் ஆப்கானியருக்கும் நடக்கும் யுத்தம் ஒருவிதமாக முடிவு பெறும் வரைக்கும் தாயுத்கான்பக்கம் சேரவேண்டாமென்று கோகிலதாஸ் பல முறையும் நவகுமாரனுக்குச் சொல்லிவந்தான். இதுவரைக்கும் அந்த சாதுர்ய புத்திமதி நவகுமாரன் புத்திக்குப் படவில்லை. கெட்டலைந்து குட்டிச்சுவரானபின்பே கோகிலதாஸ் தன்னிடம் அடிக்கடி இடித்துரைத்த யோசனையின் அருமையை அவன் உணர்ந்தான். எஜமானன் ஊழியன் இருவரும் அஞ்ஞாதவாஸம் செய்துவந்தனர். ராஜா தோடர்மால் வங்காளத்தினின்றும் போய்விட்ட கொஞ்சகாலத்துக்கெல்லாம் நரேந்த்ரனது தகப்பனாரும் பாட்டனாரும் பரகதியடைந்தாரென்று நாம் முன்னமே கூறியிருக்கிறோமல்லவா? அத்தருணமே ஏற்ற தருணமெனக் கருதினான் நவகுமாரன். ஆத்தரக்காரனுக்குப் புத்திமட்டு. நவகுமாரன் நாலாபக்கங்களிலும் சிதறியிருக்கும் தனது போர்வீரர்களை ஒன்றுசேர்த்துத் தன் படைவலிமையாலேயே தேவிரம்ஜமீனைக் கைப்பற்றிக்கொண்டு, பிறகு ஸ்வர்ண புஷ்பத்தால் அரசனது ஸம்மதத்தைப் பெறலாமென்று எண்ணினான். ஆனால் அதிக தந்த்ரசாலியாகிய கோகிலதாஸ் தன் தலைவனிடம் சென்று, "ராஜா தோடர்மால் திரும்பவும் சீக்ரத்தில் வங்காளம் வருகிறார். வீரநகரத்து ராஜகுடும்பத்தை அவர் மறந்து விட்டாரென எண்ணவேண்டாம். வீரநகர ஜமீனுக்கு ந்யாயமாய்ப் பாத்யஸ்தனான ராஜகுமாரனுக்குத் தீங்கிழைப்பவர்களை அவர் எளிதில் விடார். ஆதலால் நாம் பொறுக்கவேண்டும். வேறுவிதமான ப்ரயத்னங்கள் செய்துபார்க்கவேண்

டும். 'பொறுத்தார் பூமியாள்வார், பொருதார்க் காடாள்வார்' என்பது தங்களுக்குத் தெரியாதா" என்று சொல்லி முன்பின் யோசியாமல் ஆத்ரப்பட்டுச் செய்யப்புகும் இக்கார்யத்தினின்றும் தன் எஜமானனைத் தவிர்த்தான்.

அவர்களுடைய மனோபீஷ்டம் பூர்த்தியாகும் காலம் சீக்ரத்தில் வந்துவிட்டது. ராஜா தோடர்மால் வங்காளத்துக்கு மூன்றாவதுமுறை வந்தார். இந்த தடவை வந்தது ஆப்கானியருடன் சமர்புரிவதற்கன்று. அவர்களுடைய வல்லமையெல்லாம் முன்னமே ஒடுங்கிப் போய்விட்டது. வங்காளத்திலிருந்த மொகலாய சிற்றரசர்கள் கலகஞ்செய்யத் தொடங்கினர். அக்பரால் கைப்பற்றப்பட்ட வங்காள நாட்டில் இம்மொகலாயர் ஒவ்வொருவரும் சிறுசிறுஜமீன்கள்ஸொந்தத்தில் ஏற்படுத்திக்கொண்டனர். இதனுடன் நிற்காமல் தர்ம ப்ரபுவாகிய அக்பரையும் அவரது செங்கோலையும் அலக்ஷியஞ் செய்யத் தலைப்பட்டனர். இவர்களுடைய அதிகப்ரஸங்கத்தையெல்லாம் அரைநொடியில் அடக்கவல்லவர் அக்பர். தனது ராஜ்யத்தை வலிவான அஸ்திவாரம் போட்டு ஒன்றுசேர்த்து சாசுவதமாக நிலைநிறுத்தசேனைவலிவினும் பலத்த வல்லமையாயிருந்த தனது புத்திசாதுர்யத்தையும், பெருந்தன்மையையும், மனப்பூர்த்தியான அன்பையும் துணையாகக்கொண்டு அவர் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஒரேவிதமான ஸ்வதந்திரங்களை யளித்து அவர்களிருவரையும் பக்ஷமாய்ப் பாதுகாத்துவந்தார். இதற்குமுன் ஆப்கானியருடன் போர்புரிந்து இருமுறை வங்காளத்தைஅக்பருடைய ராஜ்யத்தில் சேர்த்தவராகிய தோடர்மால் என்னும் ஹிந்து தளகர்த்தரே இம்முறையும் மொகலாய சிற்றரசர்களது கொழுப்பையடக்க எண்ணிறந்த யுத்தவீரர்களுடன் வங்காளத்துக்கு வந்தார்.

தோடர்மால் இம்முறை வங்காளத்துக்குதளகர்த்தர் பதவியோடு வரவில்லை, அக்பர் அவரை வங்காளத்துக் கவர்னராக நியமித்தார். அவர் வங்காளத்துக்கு வந்து மாங்கீரில் தங்கியிருந்தார். ராஜத்ரோகிகளும், செய்ந்நன்றியை மறந்தவர்களுமாகிய மொகலாயர்கள் முப்பதாயிரம் குதிரையாட்களுடன்பகல்புரம் என்னுமிடத்தில் யுத்த ஸந்நத்தர்களாயிருந்தனர். மாங்கீரும் பகல்புரமும் தேவிபுரத்துக்கு அதிக ஸமீபத்திலுள்ளன. தன் பித்ரார்ஜ்ஜித சொத்தைத் தன்னிடமிருந்து தயை தாக்ஷண்யமின்றிப் பிடுங்கித் தன் பகைவனுக்களித்த தோடர்மாலுக்கும் அக்பருக்கும் எதிராக மொகலாய சிற்றரசர்களுடன் சேர்ந்துவிடலாமா என்று பலமாய் யோசித்தான் நவகுமாரன்.

“ இத்தகைய புத்திஹீனமான கார்யம் நாம் ஒருகாலமுஞ் செய்யக்கூடாது. ராஜா தோடர்மாலுக்கு நிகரான யுத்தவீரரும் தளகர்த்தரும் இந்தியா முழுவதும் ஒருவருங்கிடையாது. அவரை மறுபடியும் நீர் எதிர்ப்பீரானால், நீர் அழிவது நிச்சயம். நீரே உமது தலைமேல் மண்ணைப்போட்டுக்கொள்ளப் பார்க்கிறீர்கள். வேண்டாம் அந்த யோசனை. போர்முனையில் 'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும்' இத்தன்மையனவென்று ஆலோசிக்கவேண்டும். நீர் ஆலோசிக்காமல் பதட்டமாய்க் கார்யம் செய்தால் பைத்யக்காரத்தனமாய் முடியும். நாம் தோடர்மால்பக்கம் சேர்ந்து அவருக்குஉதவிசெய்வோம். அவர் யுத்தத்தில் வெற்றிபெறுவது நிச்சயம். கலகமடங்கியபின் அவரை மன்னிப்பு கேட்டுக் கொள்வோம்” என்று கூறினான் கோகிலதாஸ்.

“ தாயுத்கான் பக்கமிருந்து அவருக்குவிரோதமாய்ப் போர்புரிந்து இன்னும் வருஷம் காலாகவில்லை. இதற்குள் அவர் நமது பகையை மறந்துவிடுவாரோ? அவர் நம்மை மன்னிப்பாரென்று நீர் எண்ணுகிறீரா?”

“ நீர் சொல்வது சுத்த தப்பு. ராஜா உயர்குடியிற் பிறந்த தர்மஸ்வரூபி. அவர் பெருந்தன்மையும் தயாளசிந்தையுமுடையவர். கண்மூடித்தனமாய்ப் பழிக்குப் பழி வாங்கும் இயல்பினரல்லர். உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினையாமல் கடைசி ஆப்கானிய அரசனுடன் ஸத்யமாயப் போர்புரிந்த ஒருவன் அந்த ஆப்கானிய அரசன் நசித்துப் போனபின் இப்போது மொகலாய சக்ரவர்த்திக்குக் கீழ்படிந்து ஸத்யமாய் உழைப்பானானால் அவர் அவனை மன்னித்து அவனுக்குத் தகுந்த மரியாதை செய்வார் என்பது நிச்சயம்” என்று ஹிதோபதேசஞ் செய்தான் கோகிலதாஸ்.

கோகிலதாஸ்என்ன, இத்தனைநாள் பழகியும் என்னுடைய ஸ்வபாவமறியாமல் பேசுகிறீர். என் தகப்பனார் பாட்டனார் இவர்கள்பாரம்பரையாய் அனுபவித்துவந்த ஜமீனை எனக்கில்லாமற் செய்த அக்பருடைய சேனாதிபதிக்கா நான் கீழ்ப்படிவேன்? அவரையா நான் மன்னிப்பு கேட்பேன்? என்ன, சற்றும் யோசனையின்றி பேசுகிறீர்? நீர் சொல்வது என்றைக்காவது நடக்குமா? நான் உயிருடனிருக்கும் வரையில் இது இயலாது.”

“நவகுமாரரே, உமதுமுன்னோர்கள் வங்காளத்தில் வெகு காலந்தொட்டு அரசு செய்துவந்த ஆப்கானியருக்குக் கீழ்ப்படிந்து நடந்தனரல்லவா? அவர்களுடைய ஸம்ப்ரதாயத்தினின்றும் தாங்கள் விலகலாமா? வங்காள நாட்டிற்குப் புதிய அதிபதிகளாகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மன்னர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அல்லவா தர்மம்?”

“எனதரிய நண்பரே, உமதுசாதுர்ய புத்திமதியை நான் அங்கீகரிக்கின்றேன், நீர் சொல்வது ஒருவேளை ஸரியாக இருக்கக்கூடும். ஆனால் என் மனம் வேறு வழிசெல்கின்றது. மொகலாய சிற்றரசர்களுடன்கூடி அந்த இறுமாப்புள்ள ராஜாவின்மீது பழிக்குப்பழி வாங்கி அவரது கொழுப்பையடக்கிவைக்க என் மனம் துடிக்கின்றது.”

“இனி நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. என் மனதுக்கு யுக்தமாய்ப் பட்டதை நான் தங்களிடம் ஒளிக்காமல் சொல்லிவிட்டேன். என் கடமையை நான் செய்தேன். இனி தங்கள் சித்தம். தங்களுக்கு எது . யுசிதமாய்த் தோன்றுகிறதோ நவகுமாரரே,

(இதன் தொடர்ச்சி 269-ம் பக்கம்)

## விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ப்ரஸித்தபெற்ற மாமரம்:**—பல்லாரி ஜில்லா அதோனிக்கு 4 மைல் தூரத்தில் உள்ள கொண்டாபுரம் என்னும் ஊரில் நூறுவருஷத்திற்கு மேற்பட்டுள்ள மாமரம் ஒன்றிருக்கிறது. அதன் அடி மரத்தின் சுற்றளவு 25 அடி. கிளைகள் 4, 5 அடி உயரத்தினின்றே பிரிந்திருக்கின்றன. மரத்தின் உயரம் 30 அடிக்கு மேலில்லை. மரமோ தழைத்து கிளைகள் நாலாபக்கங்களிலும் தாழவே படர்ந்து சென்று ஒரு ஏக்கர் நிலத்தைக் கவிந்து கொண்டிருக்கிறது, தனி மரம் தோப்பாமோ என்று ஆலமரம் விசாலமாய் படர்ந்து தழைத்திருப்பதைக் கேட்டிருக்கிறோம். இந்த மாமும் ஆலமரம்போல் தழைத்திருக்கிறது. இம்மரம் வருஷத்திற்கு 10,000 பழம் கொடுத்திருக்கின்றது. ஒவ்வொரு வருஷத்தில் 20000 அல்லது 30,000 பழங்களும் உண்டாயிருக்கின்றனவாம். அக்கம்பக்கத்தில் உள்ள கிழவர்கள் புத்தியறிந்து சென்றவருஷந்தான் காய்க்கவில்லையாம். நாலைந்து வருஷமாய் அந்த ப்ராந்தியத்தில் மழையில்லாததினாலேயே அது காய்க்கவில்லையாம். நார், எரிப்பு இவையில்லாமல் இம்மரத்தின் பழங்களைப் போல் மிகவும் இனிமையாயுள்ள மாம்பழங்கள் இந்த தேசத்திலேயே கிடையாது. இம்மரத்தின் மாசூல் பங்குக்காக வ்யாஜ்யம் ஹைகோர்ட்வரையிலும் வந்திருக்கிறதாம். இத்தனைக்கும் இம்மரத்தின் ஒட்டாவது கன்றுகளாவது கிடையாவாம்.

**விலைபெற்ற அரண்மனை:**—"கிரீஸ்" தேசத்திற்கு அடுத்தாற்போல் மேற்கே கார்பு என்றொரு தீவுண்டு. அது அத்தேசத்திற்குச் சொந்தமானது. அத்தீவிலேயே கெயிஸருக்குச் சொந்தமான ஒரு அரண்மனை இருக்கிறது. அந்த அரண்மனையானது மிகவும் விலையுயர்ந்த சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதன் விலை சுமார் 40 லட்சம் பவுன், அதாவது 6 கோடி ரூபாய்க்குக் குறையாது. ஒரு சமயம் கிரீஸ் தேசமானது நேச ராஜ்யங்களுடன் சேர்ந்து விடுமாயின், அவ்வரண்மனையை கிரீஸ் தேச கவர்ன்மென்டார் பறிமுதல் செய்துவிடுவார்களோ வென்று கெயிஸருக்கு பீதிதோன்றி யிருக்கிறதாம். ஆகவே, அம்மாளிகையை ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலுள்ள ஒரு கம்பெனியாருக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்றுவிடுவதாக கெயிஸர் உத்தேசித்திருக்கிறாரென்று சொல்லப்படுகிறது.

**ஐரோப்பாவில் நெற் பயிர்.** சில ஐரோப்பிய தேசங்கள் இனிமேல் ஏராளமாய் நெற்பயிர் பயிர் செய்ய வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கின்றன. இப்பொழுது இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு வருஷா வருஷம் ஏராளமாய் அரிசி ஏற்றுமதியாகி வருகிறது. 1902,03-வது வருஷத்தில் இந்தியாவிலிருந்து 12,595 000 பவுன் மதிப்புள்ள அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது, 1912-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து அடியிற்கண்ட தேசங்களுக்கு ஏற்றுமதியான அரிசியின் மதிப்புப் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஜெர்மெனிக்கு | 25-லட்சம் பவுன் |
| ஹாலண்டுக்கு | 15-லட்சம் ,, |
| ஆஸ்ட்ரியாவுக்கு | 10,48000 ,, |
| யுனைடெட் கிங்கிடமுக்கு | 93200 ,, |
| பெல்ஜியத்துக்கு | 298984 ,, |
| பிரான்சுக்கு | 66030 ,, |
| ஸ்வீடனுக்கு | 21475 ,, |

1911-12-ம் வருஷத்தில் இந்தியாவில் 26100000 டன் நிறையுள்ள அரிசி உற்பத்தியா யிருக்கிறது.

**சென்ற வருஷம் நடந்த காங்கிரஸ் மகா சபையில் லார்ட் பெண்ட்லண்டும், ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும்:**—சென்ற டிஸம்பர் மீ 29௳ 12-மணிக்கு கவர்னர் லார்ட் பெண்ட்லண்டும், கவுன்சில் மெம்பர் ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யரும் காங்கிரெஸ மகாசபைக்கு விஜயஞ்செய்து அதன் நடவடிக்கைகளை ஏறக்குறைய முக்கால்மணி நேரம் போல் கண்காணித்துக்கொண் டிருந்தார்கள். இந்த சமாசாரம் நமது நேயர்களுக்கும், காங்கிரெஸ் அபிமானிகளுக்கும், தேசாபிமானிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கும். காங்கிரெஸ் மகா சபை ஆரம்பமாய் இப்போது 29-வருஷங்களாகின்றன. (இந்த 29-வருஷகாலமாய் எந்த மாகாண கவர்னரும் அந்த மகா சபைக்குச் சென்று அதனைக் கௌரவப் படுத்தினதில்லை.) காங்கிரெஸ் பிரெஸிடெண்ட் ஆனரபில் பாபு பூபேந்திரநாத் பாஸு லார்ட் பெண்ட்லண்டு அம்மகா சபைக்கு விஜயஞ் செய்து அதன் நடவடிக்கைகளை உற்சாகப் படுத்தினதற்காக அவருக்கு நன்றிசெலுத்தினது மன்றி லார்ட் பெண்ட்லண்ட் காங்கிரெஸுக்கு விஜயஞ் செய்தது எப்போதும் ஞாபகத்தில் வைக்கப்படு மென்றார். இந்த சம்ப

---

(268-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு செய்யுங்கள். நான் என்றைக்கும் தங்கள் ஊழியன். பல நூற்றாண்டுகளாக என் பெரியோர் உழைத்து வந்தபடி நானும் தாங்கள் காலாலிட்ட கட்டளையைத் தலைபால் வகித்து அதையே மனப்பூர்வமாய் நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன்," என்று பணிவுடன் பதிலுரைத்தார் கோகிலதாஸ்.

ஆத்திரத்திலும் அவஸரத்திலும், தன் நண்பனும் அமைச்சனுமாகிய கோகிலதாஸ் கூறிய புத்திமதியை நிராகரித்தபோதிலும் நவதுமாரன் இரண்டொரு நாள் நன்றாய் ஆலோசனைசெய்து தன் மந்திரி சொல்லியதே ஸரியென்று தெளிந்தான். தனது அபரிமிதமான படைகளுடனும் த்ரவ்யத்துடனும் தன்னால் கூடியமட்டும் தோடர்மாலுக்கு உதவி செய்வதென்று தீர்மானித்தான். (இன்னும் வரும்)

---

Translation of
R. C. Dutts' 'The Slave Girl of Agra' Translated with the permision of the Publishers & Mr. A. C. Dutt.

வம் இந்தியாவுக்குப் பிறந்துகொண்டிருக்கும் நற்கால அறிகுறிகளி லொன்றாகும்.

**இந்திய தீக்குச்சிகள்.**—இந்தியாவில் தீக்குச்சிகள் செய்யப்படும் தொழில் அபிவிருத்தி யுடைந்து வருகிறதென்று வியாபார இலாகா அதிகாரிகள் குறிப்பிட் டிருக்கிறார்கள். மாண்டலேயிலும், ஐக்கிய மாகாணங்களிலும் செய்யப்பட்டு வரும் தீக்குச்சிகள், அன்னிய தேசங்களி லிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் தீக்குச்சிகளுக்கு எந்த விதத்திலும் கீழானவைகள் ஆகமாட்டாவென்று சொல்லப்படுகிறது. தீக்குச்சிகள் செய்யப்படுவதற்கு வேண்டிய மரங்கள் அடங்கிய காடுகள் இந்தியாவில் இருக்கின்றனவா என்ற பிரசினைகளும் அவைகள் சம்பந்தமான வேறு சில பிரசினைகளும் இன்னும் பரீட்சித்தறிந்து முடிக்கவேண்டிய காரியங்களா யிருக்கின்றன. மைசூர் சமஸ்தானத்தில் தீக்குச்சிகள் செய்யப் படுவதற்கு அனுகூலமான காடுகள் இருக்கின்றன வென்றும், அங்கிருக்கும் மரங்களால் சில தீக்குச்சிகள் செய்யப்பட்டதில் அவைகள்நிரம்ப சிலாக்கியமாயிருக்கின்றன வென்றும்,மைசூரில் தீக்குச்சித்தொழிற்சாலையொன்றுஏற்பட்டு நடத்திவரலாமென்றும்,திருவாங்கூரிலும் அவ்விதசாலையொன்று ஏற்படுத்தலாம் என்றும் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

**1915-ம் வருஷத்தில் கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள்:**—1915-ம் வருஷத்தில் அடியிற்கண்ட நாட்கள் கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள் என்று போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதம் 1ந்தேதி புதிய வருஷப்பிறப்பு தினம். ஜனவரி மாதம் 13-ந்தேதி 14-ந்தேதி பொங்கல். ஜனவரி மாதம் 28-ந்தேதி பாராவாபட், பிப்ரவரி மாதம் 12-ந்தேதி மஹா சிவராத்திரி. மார்ச்சு மாதம் 16-ந்தேதி தெலுங்கு புதிய வருஷப் பிறப்பு. எப்ரல் மாதம் 2-ந்தேதி குட்பிரைடே. (Good Friday) எப்ரல் மாதம் 3-ந்தேதி 4-ந்தேதி 5-ந்தேதி ஈஸ்டர் பண்டிகை. எப்ரல் மாதம் 13-ந்தேதி தமிழ் புதிய வருஷதினம். ஜூன் மாதம்—ராஜ சக்கரவர்த்தியின் பிறந்ததினம். (ராஜ சக்கரவர்த்தியின் பிறந்ததினம் கொண்டாடவேண்டிய நாள் இன்ன தேதி என்பதைப் பின்னால் தெரிவிக்கப்படும்.) ஆகஸ்ட் மாதம் 13-ந்தேதி ரம்ஜான். ஆகஸ்ட் மாதம் 24-ந்தேதி ஆவணி அவிட்டம். செப்டெம்பர் மாதம் 2-ந்தேதி ஸ்ரீஜயந்தி. அக்டோபர் மாதம் 8-ந்தேதி மஹாளய அமாவாசை. அக்டோபர் மாதம் 16-ந்தேதி ஆயுத பூஜை. அக்டோபர் மாதம் 20-ந்தேதி பக்ரீத் பண்டிகை. நவம்பர் மாதம் 6-ந்தேதி தீபாவளி பண்டிகை. நவம்பர் மாதம் 18-ந்தேதி மோஹரம் (10வது நாள்) டிசம்பர்மாதம் 17-ந்தேதி வைகுண்ட ஏகாதசி. டிசம்பர் மாதம் 25, 26, 27, 28, 29, 31-ந்தேதிகளில் கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமுறை.

**ரேமண்ட் பாயின்கேர்:**—இவர் ப்ரான்ஸ்தேச ப்ரஸிடெண்ட். 1869-ம் ஞூத்தில் பிறந்தவர். தேசாபிமானம், விடாமுயற்சி, ஆழ்ந்த ஆலோசனை எல்லாம் ஒருங்கு கூடியவர். மிக்க கல்விமான். வக்கீல் வேலை முதலில் பார்த்து வந்தவர். பத்ரிகாசிரியராகவும் இருந்துவந்தார். ப்ரஞ்ச் ஜனப்ரதிநிதி ஸபையில் ஒரு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, வெகு ஸாமர்த்தியமாய் வேலைகளை நடத்திவந்தார். பிறகு படிப்படியாக முக்ய அரசாங்க உத்யோகங்களில் நியமிக்கப்படவும் ஸாமர்த்தியத்துடன் அவைகளை நிர்வஹித்து வந்தார். இவருக்கு அன்யதேச வ்யவஹாரங்கள் நன்றாய்த் தெரியவரும். 1913-ம்ஞூ முதற்கொண்டு ப்ரஞ்ச் ப்ரஸிடெண்டாக இருந்து வருகிறார்.

**ஆல்பர்ட்:**—இவர் பெல்ஜியநாட்டு அரசர். 1875ம் ஞூ பிறந்தவர். அடக்கம் சாந்தம் இவைகள் குடிகொண்டவர். ப்ரஜைகளிடத்தில் மிக்க அன்புபூண்டவர். தம் நாட்டின் விருத்தியையே மேற்கொண்டுள்ளவர். தமது ஸைன்யத்திற்குள் தாம் ஒரு ஸாதாரண போர்வீரனைப்போன்று அவர்கள் கஷ்டங்களைத் தாமும் அனுபவித்து அவர்களுக்கு உத்ஸாகமூட்டி ஜெர்மானிய வெள்ளத்தை வெகுதீரத்துடன் கடைசி வரையில் தடைசெய்த மஹாவீரர், நாட்டை யிழந்து தம் ஸைன்யத்தின் தலைவராய்நின்று போர்புரிந்து வருகிறார்.

**இரண்டாவது உவில்லியம்**—இவர்தான் கெய்ஸர் என்று சொல்லப்படும் ஜெர்மன் சக்ரவர்த்தி. 1859-ம் ஞூத்தில் பிறந்தவர். இளமை முதற்கொண்டே கல்விப்பயிற்சியும் யுத்தப்பயிற்சியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுவந்தது. எல்லா விஷயங்களிலும் நிபுணராம். மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவரல்லர். தம் நாட்டிற்கும் ப்ரஜைகளுக்கும் மிக்க நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற ஆவல் இவருக்கு மிக்க அதிகமென்றும் குடிகளிடத்தில் நிரம்ப ப்ரீதியுடையவரென்றும் சொல்கிறார்கள். தாம் செய்து முடிக்கவேண்டியதைத் தவறாமல் செய்தேதீருவார். இவருடைய பொறுமையும், சுறுசுறுப்பும் மிகவும் சிலாகிக்கத்தக்கவை என்று சொல்கிறார்கள். ராஜ்ய தந்திரத்திலும் ராணுவ விஷயங்களிலும் மிக்க நிபுணராம். பலவித சாஸ்திரங்களின்மீதும், சாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்களின்மீதும் இவருக்கு மிக ப்ரியமாம். ஜெர்மனியின் நாவாய்களை விருத்திசெய்வதில் மிகவும் ஊக்கங்கொண்டுள்ளவராம். இவர் விக்டோரியா மஹாராணியின் பெண்வயிற்றுப் பேரன் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம்.

**இரண்டாவது நிக்கோலஸ்:**—இவர் ரஷிய சக்ரவர்த்தி. 1868-ம்ஞூபிறந்தவர். மிகவும் படித்தவர். ப்ரபஞ்ச வர்த்தமானங்களை நன்றாயறிந்தவர். ஐரோப்பாவில் எங்கு யுத்தம் நேரிட்டுவிடுமோ எனக்கருதி அதைத் தடுக்கத் தம்மாலியன்றவரையில் முயன்றனராம், ஆனால் அது முடியாமற்போயிற்று. ஸாதாரணமாய் ரஷியாவைக் கொடுங்கோலரசென்றுசொல்லதுண்டு. இவர்காலத்தில்தான், மற்ற ராஜ்யங்களில் உள்ள ஜனப்ரதிநிதி ஸபைபோல ரஷியாவிலும் ட்யூமா என்னும் ஸபை ஸ்தாபிக்கப்பட்டது.

மார்க்காவர்தித பாதுகாபசுபதே 8 அங்கஸ்ய கூர்ச்சாயதே.
கண்டூஷாம்பு நிஷேசனம் புராரிபோ 8 திவ்யாபிஷேகாயதே ||



கிஞ்சித்பக்ஷித மாம்ஸசேஷகபளம்:நவ்யோபஹாராயதே
பக்தி : கிம் நகரோத் யஹோ வனசரோ பக்தாவ தம்ஸாயதே ||

கண்ணப்பர் பக்தி பரவசம்